விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 241 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 9, சனிக்கிழமை 25.07.2015

பொது நூலகம் கோண்டாவில்

**வெளிவாரி பட்டப்படிப்புகளும் தற்போதைய நடைமுறைகளும்**

பக்கம் 14

## தேர்தல் விதிமீறல்: 107 பேர் கைது 33 வாகனங்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 25
தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 107 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் விதிகளை மீறிப் பயன்படுத்தப்பட்ட 33 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து இதுவரை 85 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து பக்கம் 24

## பதவி துறக்கிறார் அமைச்சர் தென்னக்கோன்

கொழும்பு, ஜூலை 25
மாகாண சபைகள் மற்றும் வலய அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் நேற்று அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரியிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மையில் நாட்டு மக்களுக்கு விடுத்த பகிரங்க அறிவிப்பில், கட்சிக்கு பக்கம் 24

# வாக்குகளை ஆயுதமாக்கி இலட்சியத்தை வெல்வோம்

## தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருமலையில் நேற்று அறைகூவல்

திருகோணமலை, ஜூலை 25
"தமிழரின் இலட்சியத்தை விரைவில் அடைய எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் தமது வாக்குகளை ஆயுதமாக்க வேண்டும்." - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் நேற்று அறைகூவல் விடுத்தார்.
தமிழரின் ஆயுதப் போராட்டம் மௌனித்த நிலையில் தற்போது ஜனநாயகப் போராட்டம் தொடர்ந்தவாறு உள்ளது. தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் அனைத்து உரிமைகளுடனும் எம்மை நாமே ஆளும் நிலை வரும்வரைக்கும் இந்தப் போராட்டம் தொடரும். எனவே, எமது இலட்சியத்தை அடைந்துகொள்ள பக்கம் 24



**6 மாதங்களில் 700 பேருக்கு தூக்கு!**

பக்கம் 13

## அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி குடும்பத்தினர் மைத்திரியை சந்திப்பர்

### வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தகவல்

கொழும்பு, ஜூலை 25
சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க கோரி வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளது குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கவுள்ளனர் என்று வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.
நேற்று கிளிநொச்சி-கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினருக்கான வாழ்வாதார உதவித் திட்ட செயற்றிட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
எமது மீன்பிடி அமைச்சினூடாக பல்வேறு பட்ட வேலைத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. அதனடிப்படையில் அமைச்சால் ஏற்கனவே பக்கம் 24

## ராஜபக்ஷவினர் மீது இதுவரை 7,000 முறைப்பாடுகள்

### - ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25
ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது 7 ஆயிரம் குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகவும் அவற்றில் 52 முறைப்பாடுகள் தொடர்பில் இதுவரையில் விசாரணைகள் நிறைவடைந்துள் பக்கம் 24

## இலங்கையின் கொடி எரிக்கப்படவேண்டும்

### வட்டரகே விஜித தேரர் இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 25
இலங்கையின் தேசியக் கொடி தீயிட்டு எரிக்கப்பட வேண்டும் என்று ஆவேசப்பட்டுள்ளார் நவசமசமாஜக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் வட்டரகே விஜித தேரர்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்த நவசமசமாஜக் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு பக்கம் 24

## வாக்குத் தவறியது நூறு நாள் அரசு

### கூறியவற்றை நிறைவேற்றவில்லை என்கிறார் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு, ஜூலை 25
100 நாள் அரசு 180 நாள்கள் ஆட்சியில் இருந்த போதிலும் கடந்த 6 மாதங்களில் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
அரசு கடந்த குறுகிய காலத்தில் தேவைக்கு அதிகமாகவே தனது இயலாமையை காட்டியிருப்பதால், தீர்மானம் ஒன்றை எடுக்கும் சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைத்துள்ளது. 62 லட்சம் மக்கள் நல்லாட்சிக்காக வாக்களித்தனரே அன்றி 43 ஆசனங்களைக் கொண்டிருந்த ஒருவருக்கு பிரதமர் பதவியை வழங்கவோ, அமைச்சரவையை நியமித்து அரசை முன்னெடுக்கவோ அல்ல.
தன்னால் வெற்றி பெற முடியாது என்பதை நன்கு அறிந்து கொண்டதன் காரணமாகவே ரணில் விக்கிரம பக்கம் 24



சாவகச்சேரி சங்கத்தானை இரண்டாம் ஒழுங்கையில் வெடிக்காத நிலையில் 60 மி.மீ. குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டது. குண்டு தொடர்பாக பொதுமக்கள் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸார், படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவுக்கு அறிவித்து குண்டை மீட்டனர். இவ்வீதியின் அருகில் உள்ள ஆலயத்தில் கடந்த வாரம் தேர்த் திருவிழா நடைபெற்றிருந்தது. அதன்போது பெருமளவு மக்களும் வாகனங்களும் இவ்வீதியால் நடமாடின. (ற-9)

## ஜே.ஆரின் அவதாரமே ரணில் விக்கிரமசிங்க

### சாடுகின்றார் வாசுதேவ

கொழும்பு, ஜூலை 25
மக்கள் மனங்களைக் கவரும் வகையில் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் விதத்திலேயே நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது - என்று குற்றஞ் சாட்டினார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.
ரணில் விக்கிரமசிங்க ஒரு கையில் கத்தியையும் மறு கையில் மண்டையோட்டையும் வைத்துக் கொண்டுதிரியும் ஜே.ஆரின் அவதாரமாகும்.- பக்கம் 24

## மைத்திரி கலந்துகொண்ட நிகழ்வில் மாணவனின் துப்பாக்கியில் தோட்டா

கொழும்பு, ஜூலை 25
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக்காலை கலந்து கொண்ட பாடசாலை நிகழ்வொன்றில் மாணவர் படையணியில் இருந்த மாணவர் ஒருவரின் துப்பாக்கியில் தோட்டாக்கள் நிரப்பப்பட்டிருந்தன என்று கூறப்படுகின்றது.
கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அதன்போது ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மாணவர் படையணியில் முன்வரிசையில் நின்றிருந்த மாணவர் ஒருவரிடம் பக்கம் 24

# தொழில்நுட்பக் கல்லூரிக்கு 2 தற்காலிக நீர்த்தாங்கிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

கொக்குவிலிலுள்ள யாழ்.தொழிநுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கத் தற்காலிகமாக 2 தண்ணீர்த் தாங்கிகளை வைத்து தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யுமாறு நல்லூர் பிரதேச சபைக்கு யாழ்.அரச அதிபர் பணித்துள்ளார். கல்லூரியின் தற்போதைய நிர்வாகமும் அது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த கல்லூரியில் வகுப்பறைச் சீர்கேடுகள், சுகாதாரமற்ற குடிதண்ணீர் உள்ளிட்ட பல குறைபாடுகள் உள்ளபோதும் அவற்றைச் சீர் செய்துதருமாறு பல வருடங்களாகக் கோரிவருகின்றபோதும் நிர்வாகம் கவனத்தில் எடுக்கவில்லை என்றும் அதனை விரைவில் செய்து தருமாறு கோரியும் மாணவர்கள் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். அவர்களிடம் சென்ற யாழ்.மாவட்டச் செயலக அதிகாரிகள் அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து அதுபற்றிய கலந்துரையாடலுக்கு மறுநாள் செயலகத்துக்கு வருமாறு கூறிச் சென் றிருந்தனர். அதன்படி நேற்று மாணவர்கள், விரிவுரையாளர்கள் சென்றிருந்தனர்.

அதன்பின்னர் தற்காலிகமாகக் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யுமாறு கல்லூரியின் மேலதிக பணிப்பாளர் தலைமையிலானவர்கள் வழி கூறியிருந்தனர். அது பற்றிய கோரிக்கையும் கல்லூரி நிர்வாகத்தினரால் நல்லூர் பிரதேச சபையினரிடம் கோரப்பட்டிருந்தது. அதனைத் தற்காலிகமாகச் செய்யுமாறு அரச அதிபரும் நல்லூர் பிரதேச சபைக்குப் பணித்திருந்தார்.

பிரதேச சபையினர் அதனை ஏற்றுக் கொண்டு இன்று சனிக்கிழமை தண்ணீர்த் தாங்கிகளை வைத்து குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுப்பர் என்று கூறப்பட்டுள்ளதாக விரிவுரையாளர்கள் தெரிவித்தனர். அத்துடன் பணிப்பாளராக உள்ள யோகராஜன் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காது கல்லூரிக்கு வருவதில்லை என்றும் மாணவர்களும் விரிவுரையாளர்களும் குற்றஞ் சுமத்தினர்.

இந்நிலையில் எதிர்வரும் புதன்கிழமை வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடல் நடத்த ஏற்பாடு செய்வதாகவும் அரச அதிபரால் கூறப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## திறந்த பல்கலைக்கழக பரீட்சை மண்டபம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான தெரிவுப்பரீட்சை நாளை 26ஆம் திகதி மு.ப. 10 மணி தொடக்கம் 11 மணிவரை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகு சார்ந்த பரீட்சை மண்டபத்திலும், முகாமைத்துவத் துறை பரீட்சை மண்டபத்திலும் நடைபெறும் என உதவிப்பணிப்பாளர் கி.கந்தவேள் அறிவித்துள்ளார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு நிலையங்களில் விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை அந்தக் கற்கை நிலையங்களில் நடைபெறும் என யாழ். பிராந்திய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற)

## வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

கிளிநொச்சி – பூநகரி, வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் ஆலய மன்மத வருஷ மஹோற்சவப் பெருவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத் திருவிழாவில் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவப் பெருவிழா இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது.

தினமும் காலைத் திருவிழா மு.ப 10மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 5.30 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். (ற-ரி)

## நுழைவாயில் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

அல்லாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் சின்னப்பொடி தங்கத்துரை நினைவாக அமைக்கப்பட்ட நுழைவாயில் திறப்பு விழா இன்று மாலை 4 மணிக்கு பாடசாலை வளாகத்தில் அதிபர் வி.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளர் வடமாகாணம் வீ.இராசையாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-35)

# தமிழர்கள் அனைவரும் திரண்டு வாக்கிட்டாலே வெற்றி நிச்சயம்

### கூட்டமைப்புக்கு கிடைப்பது உறுதி என்கிறார் ஈ.சரவணபவன்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களித்தாலேபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விடும். அதன் மூலம் நம்மைக் காட்டிக் கொடுத்து சுகம் கண்ட எட்டப்பர் கூட்டத்தை யாழ். மண்ணிலிருந்தே விரட்டியடிக்க முடியும் – இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.



நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில், தொல்புரம் மேற்கு, துணைவி, சுழிபுரம், பொன்னாலை ஆகிய பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்தார். அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நாம் கடந்த பொதுத்தேர்தலில் 38 சதவீதமே வாக்களித்தோம். அதனால் சிங்களக் கட்சிகளிடம் நம்மை அடகு வைத்து வாழ்ந்த மூவர் நாடாளுமன்றம் செல்ல நேரிட்டது. அன்று இருந்த இராணுவ அடக்கு முறைகளும் ஈ.பி.டி.பியினரின் கொலை மிரட்டல்களும், அடாவடித்தனங்களும் இப்போது இல்லை. இந்த அமைதிச் சூழலை ஏற்படுத்தியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 38 வீதமாக வாக்களித்தோர்கள் தொடர்ச்சியாக உள்ளூராட்சி சபைகள், மாகாண சபை தேர்தலில் பெருமளவு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோகமாக வெற்றி பெறச் செய்தனர். அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது இந்த வாக்களிப்பு வீதம் மேலும் அதிகரித்தது. கொடுங்கோல் ஆட்சி புரிந்த சர்வாதிகாரியான மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்கு விரும்பியே தமிழர்கள் வாக்களித்தனர். ஒரு தந்திரோபாயமாகவே ஜனாதிபதித் தேர்தலை உபயோகப்படுத்தினர் எல்லாப் பெரும்பான்மைக் கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். இவர்கள் போட்டிபோட்டுக் கொண்டு தமிழ் மக்களுக்கு நன்மை ஏதும் செய்துவிடவில்லை. அதை நாம் மறந்துவிடவில்லை.

தமிழர்கள்தான் என்னை தோற்கடித்து விட்டனர் என்று மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே கூறுகின்றார். தமிழர்களை வாக்களிக்கவிடாது தடுத்திருந்தால் மஹிந்த ராஜபக்ஷவே இப்போதும் ஜனாதிபதியாக இருப்பார் என்று அவரது தம்பி கோத்தபாய கூறுகின்றார். ஆக, தமிழர்கள் ஒருபோதும் தம்மோடு சேரமாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்தே இருக்கிறது.

தமிழர்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டும் தான். எனவேதான் எந்த அரசாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியே இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கின்றன.

தெற்கில் ரணில், மைத்திரி, மஹிந்த என மும்முனைப் போராட்டம் நடக்கின்றது. எந்தக் கட்சியுமே தனித்து ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. எனவே தமிழர்களின் பிரதிநிதித்துவம் இந்த முறை மிக முக்கியமானது. எமது பேரம் பேசும் சக்தியைச் சிதறவிடக் கூடாது.

இருந்த போதிலும் தொங்கு நாடாளுமன்றம் ஒன்றுதான் அமையப்போகிறது. அங்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு அவர்களுக்குத் தேவை. பெரும்பான்மைக் கட்சிகள் நம்மைத் தேடி வரும் நிலை.

எனவே நமது பேரம் பேசும் சக்தியையும் பெரும்பான்மையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கவேண்டும். நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களிக்க வேண்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்தைத் நழுவவிட்டுவிடக் கூடாது பெரியவர்களும் தாய்மார்களும் இளைஞர், யுவதிகளும் தவறாமல் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்க வேண்டும். இவ்வாறு வாக்களித்தாலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விடும்.– என்றார்.

# யாழ்.மண்ணின் கலாசாரம் சீரழிந்து கொண்டிருக்கிறது

### 17 வயதுச் சிறுமி வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 25

பெருமைக்குரிய யாழ்.மண்ணின் கலாசாரம் சீரழிந்து செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கவலை தெரிவித்தார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் தனது மகள் காணாமற் போயுள்ளதாகவும் மகளை இளைஞன் ஒருவர் மறைத்து வைத்திருப்பதாகவும் குற்றஞ் சுமத்தி, அந்த இளைஞனுக்கும், அவருடைய பெற்றோருக்கும் எதிராக ஆட்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

ஒரு வருட காலமாக எதிர் மனுதாரர்கள் தனது மகளை மறைத்து வைத்திருப்பதாகவும், அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை எனவும், தனது மகள் உயிருடன் இருக்கின்றாரா, இல்லையா என்பது கூட தெரியாதுள்ளதாகவும், எனவே, அவரை நீதிமன்றத்துக்கு அழைத்து மீட்டுத் தன்னிடம் தரவேண்டும் என்று அந்த மனுவில் அந்தத் தாயார் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டவர்களில் குறித்த இளைஞனின் பெற்றோரும், சகோதரர்களும் சட்டத்தரணிகளின் ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். சம்பந்தப்பட்ட இளைஞன் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. தமது மகனைத் தாமும் காணவில்லை என்றும், அவரும் எங்கு இருக்கின்றார் என்று தங்களுக்குத் தெரியாது என்றும் இளைஞனின் பெற்றோர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அடுத்த வழக்குத் தவணையின் போது குறித்த மகனை நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும் என்று இளைஞனின் பெற்றோருக்கு நீதிபதி எச்சரித்து வழக்கை கடந்த தவணை ஒத்திவைத்திருந்தார்.

வழக்கு கடந்த தவணை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த இளைஞன் காணாமற் போனதாகக் கூறப்பட்ட பெண்ணுடன் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஊடாக முன்னிலையானார். தவிர பெண்ணின் கழுத்தில் தாலிக்கொடி இருந்தது. அந்தப் பெண் 17 வருடங்களும் 2 மாதமும் நிரம்பிய வயதுடையவர் என்றும், அவர் இந்து சமயமுறைப்படி திருமணம் செய்திருப்பதாகவும் தற்போது 6 மாத கர்ப்பிணியாக இருக்கின்றார் என்றும் சட்டத்தரணியால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

தனது மகளுடன் தனியாகப் பேசுவதற்கு அனுமதியளிக்குமாறு ஆட்கொணர்வு மனுதாரராகிய தாய் நீதிபதியிடம் கோரினார். ஆனால் தனது தாயாருடன் பேச முடியாது என்று அந்தப் பெண் மறுத்தார். எனினும் தாயாரின் வேண்டுகோளை ஏற்ற நீதிபதி அந்தப் பெண்ணை எச்சரித்து தாயாரும் மகளும் சில நிமிடங்கள் தனிமையில் உரையாட அனுமதியளித்து பின்னர் வழக்கைத் தொடர்ந்தார்.

ஆட்கொணர்வு மனுவில் கோரப்பட்டவாறு குறித்த பெண் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். தாலிகட்டி திருமணம் நடைபெற்றிருக்கின்றது. 6 மாத கர்ப்பிணியாகவும் இருக்கின்றார். இந்த நிலையில் நீதிமன்றத்திடம் என்ன கோருகிறீர்கள் என்று நீதிபதி அந்தத் தாயாரிடம் கேட்டார்.

தனது மகள் தனக்கு வேண்டும். அவரைத் தன்னிடம் பாரப்படுத்துங்கள் எனத் தாயார் கோரினார். அந்தப் பெண்ணை நீதிமன்றத்தின் நடுவில் நிறுத்திய நீதிபதி, தீர்மானம் எடுக்கின்ற தற்துணிவு அதிகாரம் உங்களுக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளது என்றும் தாயாருடன் செல்லப்போகிறீர்களா? அல்லது கணவனுடனா செல்லப்போகிறீர்களா? முடிவெடுத்துச் சொல்லுங்கள் என்று கூறினார்.

அந்த நேரம் பார்வையாளர்களால் நிறைந்திருந்த நீதிமன்றில் அனைவரும் எதிர்பார்ப்புடன் என்ன முடிவு எடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தனர். அப்போது அந்தப் பெண் தனது கணவனை நோக்கி நடந்து சென்றார். அதனைக் கண்ட தாயார் துயரம் தாங்க முடியாமல் சத்தமிட்டு அழுதார். அதனால் நீதிமன்றில் நிசப்தம் நிலவியது. அந்தத் தாயார் வாய்விட்டு அழுது புலம்பினார்.

அதனைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் அவரை நோக்கிச் சென்றனர். அவ்வாறு சென்ற பொலிஸாரைச் சைகை மூலமாகத் தடுத்தார் நீதிபதி. அந்தத் தாயாரின் அழுகுரல் நீதிமன்றத்தைச் சிறிது நேரம் முழுமையாக ஆக்கிரமித்திருந்தது.

அதன்பின்னர் நீதிபதி இளஞ்செழியன் தமது தீர்ப்பை அறிவித்தார்.

சமூகத்தில் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் அனைவரும் சிறுவர் சிறுமியராவர். அவர்களுடைய பாதுகாப்பு விடயத்தில் சட்டப்படி, தாய் தந்தையருக்கே முதலிடம் வழங்கப்படுகின்றது. அதேநேரம் 18 வயதுக்குக் குறைந்த எவருமே திருமண கட்டளைச் சட்டத்தின்படி பதிவுத் திருமணம் செய்ய முடியாது. அவ்வாறு பதிவுத் திருமணம் செய்தால், அந்தத் திருமணம் செல்லுபடியற்றது என்று குணரட்ணம் எதிர் திருமணப் பதிவாளர் நாயகம் வழக்கில் நீதியரசர் ஷிராணி திலகவர்தனவின் தீர்ப்பையும் அதில் தொட்டுக் காட்டினார்.

ஆள்கொணர்வு வழக்கில் சம்பந்தப்பட்ட பெண்ணின் வயதுப்படி சிறுவர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவர் ஒரு சிறுமி. இவர் பதிவுத் திருமணம் செய்யவில்லை. ஆனால் தாலி கட்டி திருமணம் செய்துள்ளார். 6 மாத கர்ப்பிணியாகவும் இருக்கின்றார் எனத் தெரிவித்த நீதிபதி அந்தத் தாயாரை நோக்கி, உங்கள் மகள் அணிந்திருக்கின்ற தாலியை அறுக்கும்படி நீதிமன்றத்தைக் கோருகின்றீர்களா? அவர் 6 மாத கர்ப்பிணியாக இருக்கின்றார். எனவே பிறக்கப் போகின்ற அந்தக் குழந்தையின் எதிர்காலம் என்ன? சமயாசாரப்படி நடந்துள்ள திருமணத்தைப் பிரித்தால், பிறக்கப் போகும் குழந்தைக்கு யார் தந்தை? இந்தக் கேள்விகளுக்கு பதிலளியுங்கள்? எனக் கேட்டார். அதற்கு தாயார் பதிலளிக்கவில்லை.

இதனையடுத்து பெண்ணின் விருப்பப்படியே அவருடைய கணவனுடன் செல்வதற்கு நீதிபதி அனுமதி வழங்கினார்.


பெற்ற தாயின் அவலத்தை விளங்காத நிலையில் பிள்ளையும், பிள்ளையின் தற்சமய நிலையை மன்னிக்க முடியாத நிலையில் தாயார் இருப்பதையும் காண முடிகின்றது. எனினும் தாலி கட்டிய கணவனை வேண்டாம் என்று கூறுகின்ற உரிமை அந்தப் பெண்ணுக்கே உள்ளது. அந்த உரிமை, அதிகாரம் தாயாருக்கு இல்லை. ஆட்கொணர்வு மனுவின் படி கோரிக்கை நிறைவு பெறுவதால் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவது பயனில்லை எனக் கூறி வழக்கை முடிவுறுத்தியது நீதிமன்று. (ற-4)

## இன்புளுவன்சா தொற்று படிப்படியாக குறைகிறது

### இதுவரை 14 கர்ப்பிணிகள் உட்பட 62 பேர் வைரஸ் தொற்றால் உயிரிழப்பு


யாழ்ப்பாணம், ஜூலை 25
இலங்கையில் இன்புளுவன்சா எச் 1 என் 1 வைரஸ் தொற்றால் இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 14 பேர் கர்ப்பிணித் தாய்மார்கள் என்று தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு தற்போது இவ் வைரஸ் தொற்றுப் படிப்படியாகக் குறைந்து வருகின்றது என்றும் தெரிவித்துள்ளது.
கடந்த மாதங்களில் இந்த வைரஸ் தொற்று அதிகமாகக் காணப்பட்டது. இந்த வைரஸ் தொற்றுக் காரணமாக வடக்கிலும் கர்ப்பிணிப் பெண் ஒருவரும் குழந்தை பெற்ற பெண் ஒருவரும் உயிரிழந்திருந்தனர். தவிர இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பர் என்ற சந்தேகத்தில் வடக்கில் 100 இற்கும் மேற்பட்டோர் வைத்திய சாலைகயில் சிகிச்சை பெற்றிருந்தனர்.
அந்த வைரஸ் தொற்றினால் எவ்வளவு பேர் உயிரிழந்தனர் என்பது தெரிவிக்கப்படாதிருந்த நிலையில், அந்த வைரஸ் தொற்றால் இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள் ளது. எனினும் தற்போது இன்புளுவன்சா வைரஸ் தொற்று குறைந்துள்ளது என்றும் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.
இன்புளுவன்சா வைரஸ் தொற்றால் ஒருவர் பாதிக்கப்பட்டாரா என்பதனை இரத்த பரிசோதனை மூலமாகவே அறிந்து கொண்டு ஊறுதிப்படுத்த முடியும். எனினும் அந்தப் பரிசோதனையை இலங்கையில் கொழும்பில் மாத்திரமே செய்ய முடியும். வடக்கிலோ எந்த அரச வைத்திய சாலைகளிலும் அது அந்த வசதி இல்லை. இந்நிலையில் அவ்வாறு தொற்றுக்குள்ளாகி வருபவர்களின் இரத்த மாதிரிகளைப் பரிசோதிப்பது சாத்தியமாகாத விடயமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

## வேலை வாய்ப்புக்கள் குறித்து கிழக்கு முதல்வருடன் பேச்சு



திருகோணமலை, ஜூலை 25
ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனத்தின் இலங்கைக்கான ஆணையாளர் நேற்றுமுன்தினம் மாலை கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போது, கிழக்கு மாகாணத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பை அதிகரிப்பது தொடர்பிலும், சிறு கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டவர்களுக்கான உதவிகள் மற்றும் அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வழிவகைகளை அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.
குறிப்பாக தாதியர்களுக்கான ஒரு வருட விரிவுரைகளை உள்நாட்டில் வழங்கவும் அதன் பின்னர் ஜேர்மன் நாட்டில் ஐந்து வருடகாலத்திற்கான வேலைவாய்ப்பை வழங்குவதற்குமான திட்டத்தையும். விடுதிகள் மற்றும் ஹோட்டல்களில் வேலைபுரிபவர்களுக்கான கற்கை நெறிகளையும் உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பான திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கவனத்திற் கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

### மூத்த ஊடகவியலாளர் கே.ரி.சிவகுருநாதன் காலமானார்



தேசிய ரீதியில் ஊடகத்துறையில் வாழ்நாள் சாதனையாளர் விருதுபெற்றவரும் தினபதி, சிந்தாமணி ஊடகப் பட்டறையில் தேர்ச்சி பெற்று சூடாமணி, தினக்குரல், சுடர் ஒளி பத்திரிகைகளில் இணையாசியராகத் திகழ்ந்தவருமான கே.ரி.சிவகுருநாதன் நேற்றுக் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனைகளை முன்வைத்து உதயன் குழுமம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## கட்டுத் துப்பாக்கியுடன் சிறுவன் கைது


கிளிநொச்சி, ஜூலை 25
கிளிநொச்சி, கல்லாறு பகுதியில் கட்டுத் துப்பாக்கி வைத்திருந்த 17 வயதுச் சிறுவன் ஒருவனை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.
சிறுவனிடமிருந்து கட்டுத்துப்பாக்கி மற்றும் அதற்கான வெடிமருந்து என்பனவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். சட்டவிரோதமான முறையில் சிறுவன் அதை வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சிறுவன் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## சுகாதார, வேலைப்பகுதி தொழிலாளர்கள் ஆள்சேர்ப்புக்கு தரம் 8 சித்தியே தகைமை

### அனுமதி வழங்கியது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், ஜூலை 25
சுகாதாரத் தொழிலாளி மற்றும் வேலைப் பகுதி தொழிலாளர்களுக்கான ஆள்சேர்ப்புத் திட்டத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண சித்திக்குப் பதிலாக 8 ஆம் வகுப்பு சித்தியையே கல்வித் தகைமையாக நிர்ணயிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான தீர்மானத்துக்கு வடக்கு மாகாண சபையும் அனுமதி வழங்கியுள்ளது.
பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவினர், மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர், மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர், முதலமைச்சர் அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருடன் கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை, இடம்பெற்ற கலந்துரையாடலில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. அந்தத் தீர்மானங்கள் சபையின் அனுமதிக்காக நேற்றுச் சமர்பிக்கப்பட்டன.
வருமான பரிசோதகர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட வருமான பரிசோதகர்களின் வினைத்திறன் காண் பரீட்சை தொடர்பாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, இந்தப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கும் முகமாக இடைமாறும் ஏற்பாடு ஒன்றைச் சேர்த்துக்கொள்வது என்றும், இதன் மூலம் இவ்வாறு உள்ளீர்க்கப்படும் வருமான மேற்பார்வையாளர்கள், வருமான பரிசோதகர் பதவியின் தரம் III இன் நேரொத்த சம்பளத் திட்டத்தில் தாபனக் கோவை அத்தியாயம் II பந்தி 9.4 இன் படி சம்பளப்படி நிலை நிர்ணயிக்கப்படுதல் என்றும் தீர்மானிக்கப்பட்டது.
இரண்டாவதாக சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர்கள் மூவரின் பதவி மாற்றத்தின் போது அவர்கள் பெற்று வந்த சம்பளம் குறைத்து நிர்ணயித்தமை தவறானது என்பதால் அவர்களுக்கு சாவகச்சேரி பிரதேச சபையால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் உரிய மாற்றம் செய்து அவர்கள் கடைசியாகப் பெற்ற சம்பள அளவில் வைத்து தாபனப் பணிப்பாளரின் கருத்து அமைய சம்பளக் கொடுப்பனவை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.
மூன்றாவதாக, சுகாதாரத் தொழிலாளி மற்றும் வேலைப் பகுதி தொழிலாளர்களுக்கான ஆட்சேர்புத் திட்டத்தில் க.பொ.த சாதாரண சித்திக்குப் பதிலாக 8 ஆம் வகுப்பு சித்தி பெற்றிருத்தல் என்று கல்வித் தகைமையை நிர்ணயித்தல் என்று தீர்மானிக்கப்பட்டது.
இவற்றுக்கு மாகாண சபை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது. (ற-5)

பாராளுமன்றத் தேர்தல் - 2015
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



5
உதயன்
ஈ.சரவணபவன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
குழுமத் தலைவர் - உதயன் பத்திரிகை
1 2 3 4 5 6 7 8 9 10

## உள்ளூராட்சிச் செயலாளர்களை இனி மூவர் கொண்ட குழுவே தீர்மானிக்கும்

### அதிகாரம் வழங்கினார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூலை 25
உள்ளூராட்சி மன்றங்களுக்கான செயலாளர் நியமன அதிகாரத்தை, வடக்கு ஆளுநர் மூன்று பேர் கொண்ட குழுவிடம் கையளித்துள்ளார். பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஆகியோரே, உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய செயலாளர்களை எதிர்காலத்தில் தெரிவு செய்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

> உள்ளூராட்சி மன்றங்களுக்கான செயலாளர்களை நியமிக்கும் அதிகாரம் இதுவரை காலமும் ஆளுநரிடம் இருந்து வந்தது.

ஆளுநரின் இந்த அதிகாரக் கையளிப்புத் தொடர்பில், வடக்கு மாகாண சபைக்கு அவைத் தலைவர் நேற்று அறிவித்தார்.
உள்ளூராட்சி மன்றங்களுக்கான செயலாளர்களை நியமிக்கும் அதிகாரம் இதுவரை காலமும் ஆளுநரிடம் இருந்து வந்தது. தற்போது அந்த அதிகாரத்தை ஆளுநர் மூன்று பேர் கொண்ட குழுவிடம் கையளித்துள்ளார்.
மாகாணப் பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஆகியோரால், உள்ளூராட்சி மன்றத்துக்கான செயலாளர் பரீசிலித்து பரிந்துரை செய்யப்படுவார். அதன் பிரகாரம், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, செயலாளரை நியமனம் செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# சாவகச்சேரி நகர, பிரதேச சபைகளுக்கு ரூ.55 லட்சம்

## தண்டமாக அறவிடப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை அபிவிருத்திக்கு வழங்கியது சாவகச்சேரி நீதிமன்று

தென்மராட்சி, ஜீலை 25

சாவகச்சேரி நீதிமன்றால் பல்வேறு குற்றங்களுக்காக அபராதமாக விதிக்கப்பட்ட தொகையில் 55 லட்சம் ரூபா சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி நகர சபை என்பனவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2014 மே மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அபராதமாக விதிக்கப்பட்ட தொகையின் ஒரு தொகுதி நிதியே உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய வாகனச் சாரதிகள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் உட்பட பல்வேறு குற்றங்களுக்காக நீதிமன்றால் அபராதமாக விதிக்கப்பட்ட தொகைகளில் ஒரு தொகுதியே இந்த நிதியாகும்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு 40 லட்சத்து 41 ஆயிரத்து 666 ரூபாவும் சாவகச்சேரி நகரசபைக்கு 14 லட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த தொகையானது உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தவே வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை இந்த நிதியுடன் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்ட முத்திரை தீர்வைக் கட்டணத் தொகையான 11 மில்லியன் ரூபாவையும் இணைத்து சபையின் 15 உறுப்பினர்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டங்கள் மேற்கொள்ள வழங்கியிருந்தது.

நீதிமன்றால் விதிக்கப்படும் அபராதத் தொகை வழக்குத் தாக்கல் செய்யும் திணைக்களங்களுக்கு வழங்கப்படுவதுடன் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி சபைகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. (ற-9)

# கல்வித் திட்டங்கள் வருமாயின் பட்டதாரிகள் போராடமாட்டார்கள்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 25

அரசாங்கத்தின் புதிய கல்வித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் எந்தவொரு பட்டதாரியும் தொழில் கேட்டு போராட்டங்களில் ஈடுபடும் நிலைமைகளுக்கு இடமிருக்காது என்று ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கல்வித்திட்டத்தின் நோக்கம் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறுகின்ற ஒரு இளைஞன் சமூகத்துக்குப் பெறுமதியான சேவையை வழங்கக்கூடிய ஒரு முக்கிய பிரஜையாக இருப்பதை உறுதி செய்வதாகும். உலகில் இன்று துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் கல்வி சார் நியமங்களுக்கேற்ப கல்வி முறைமையில் அரசாங்கம் சீர்திருத் தங்களை அறிமுகப்படுத்தும்.

போதைப்பொருள் விற்பனையாளர்களின் பிரதான இலக்காகப் பாடசாலைப் பிள்ளைகளே உள்ளனர் எனத் தெரிவித்த ஜனாதிபதி, போதைப்பொருள் விற்பனைக்கு முடிவுகட்டி நாட்டின் எதிர்காலத் தலைமுறையை பாதுகாப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

போதைப்பொருளை ஒழித்து பல்வேறு சமூகங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் முழுமையான அர்ப்பணத்துடன் இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சூழல் பாதுகாப்பு மற்றும் சுதேச பொருளாதாரத்தில் பிரதான கவனத்துடன் பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரண்டும் அடுத்த இரண்டு முன்னுரிமைப்படுத்தலுக்குரிய அம்சங்களாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ற-4)

# போதையிலிருந்து விடுபடல்: விழிப்புணர்வுக் கருத்தரங்கு



கிளிநொச்சி, ஜூலை 25

போதைப் பொருள் பாவனையிலிருந்து விடுபடல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்வொன்று கண்டாவளை பிரதேச செயலக திட்டமிடல் கிளையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் மது, சிகரெட் மற்றும் போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது சமூகத்தை காக்க வேண்டியதன் அவசியம், காப்பு முறைகள், விழிப்புணர்வு செயற்பாடுகள் பற்றிய தொனிப் பொருள்களில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பரந்தன் புனித சவேரியர் ஆலய பங்குத் தந்தை அருட் பணி புனிதகுமார் அடிகளார் மற்றும் கண்டாவளை பிரதேச சமுக சேவை உத்தியோகத்தர் சு.ஜெயானந்தராசா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நிகழ்வில் பிரதேசத்தின் கிராம மட்ட அமைப்பு பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ற-10)

# சிறுபோகம் மேற்கொள்வதற்கு குளங்களின் நீர்மட்டம் போதாது

## புதிய குளங்கள் அமைக்கப்பட வேண்டும் என கிளிநொச்சி அரச அதிபர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜூலை 25

கிளிநொச்சி மாவட்டத்தில் 41 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பு சிறுபோக நெற்செய்கைக்கு உகந்ததாக உள்ள போதும், குளத்து நீர்மட்டம் போதாமையால், நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ள கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்டத்தின் குளங்களின் எண்ணிக்கையையும், குளங்களின் நீரேந்து அளவையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறுபோக நெற் செய்கையின் அறுவடை தொடர்பாகவும், விளைச்சல்கள் தொடர்பாகவும் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் 56 ஆயிரம் ஏக்கர் சிறுபோகம் செய்யக் கூடிய நிலப்பரப்புகள் காணப்படுகின்றன. இருந்த போதும் இம்முறை சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலேயே சிறுபோக நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மிகுதி நிலப்பரப்பில் சிறுபோகத்தை மேற்கொள்ள வேண்டுமானால் கிளிநொச்சி மாவட்டத்தினுடைய குளங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

> கிளிநொச்சி மாவட்டத்தில் 56 ஆயிரம் ஏக்கர் சிறுபோகம் செய்யக் கூடிய நிலப்பரப்புகள் காணப்படுகின்றன. இருந்த போதும் இம்முறை சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பிலேயே சிறு போக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள் எப்பட்டுள்ளது.

ஆரம்பிக்கப்படவுள்ள இரணைமடு குளத்தினுடைய புனரமைப்பு வேலைகளின் பின்னரும் கூட இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இரணைமடு குளம் புனரமைப்பின் ஊடாக, மேலும் 5 அல்லது 6 ஏக்கர் நிலப்பரப்பிலேயே சிறுபோகம் மேற்கொள்ள முடியும். – என்றார். (ற-21)

# உரிமையாளர் பெயரிலேயே ஆதன வரி

## *கிழக்கு முதலமைச்சர் பணிப்பு*

திருகோணமலை, ஜூலை 25

திருகோணமலை நகர சபையால் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கான ஆதன வரிகளை காணி உரிமையாளர்களான மக்களின் பெயரிலேயே அறவிடுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சரும் மாகாண உள்ளூராட்சி மன்ற அமைச்சருமான செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் திருகோணமலை நகர சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் மாலை கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ்.தண்டாயுதபாணியின் தலைமையில் காந்தி நகர், சுலோட்கவுஸ், கஸ்தூரிநகர் ஆகிய கிராமங்களின் பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் நகரசபை உறுப்பினர் கே.கோகுலராஜ் ஆகியோர் அடங்கிய குழுவுடன் முதலமைச்சர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் மற்றும் முதலமைச்சரின் செயலாளர், நகரசபை செயலாளர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

1947ஆம் ஆண்டு முதல் மேற்குறிப்பிட்ட கிராமங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு 1995ஆம் ஆண்டு முன்னாள் நகரசபை தலைவர் பி.சூரியமூர்த்தியால் காணிகளும் அதற்குரிய ஆவணங்களும் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும் அ[illegible] போது மின்சாரம் மற்றும் குடிநீ[illegible] இணைப்புக்களை பெறும்வகையில் குறித்த ஆவணம் செல்லுபடியானதாக அமைந்திருந்தது.

அதன் பின்னர் முன்னாள் நகர சபைத் தலைவர் ச.கௌரிமுகுந்தன் அவர்களுடைய காலத்தில் 576 பேருக்கான காணி உறுதிகள் வழங்கப்பட்டு அவை காணி பதிவாளர் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு நகரசபை பதிவேட்டிலும் பதியப்பட்டது. இக்காணிக்காக நகரசபையால் அறவிட வேண்டிய வரிகளை சிலரிடம் நகரசபையின் பெயரிலேயே நகரசபை அறவிட்டு வந்தது.

இப்பிரச்சினை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ற)

# பக்கச்சார்பாக நடக்கின்றனர் துணுக்காய் பொலிஸார் பிரதேச சபை உறுப்பினர் யாழ். அரச அதிபரிடம் முறையீடு

கிளிநொச்சி, ஜூலை 25

துணுக்காய் பிரதேசத்தில் உள்ள மதுபான நிலையத்தினுடைய உரிமையாளர் ஒருவரால் தனது உயிருக்கு ஆபத்து என்றும், துணுக்காய் பொலிஸார் பக்கச்சார்பாக உள்ளனர் எனவும் துணுக்காய் பொலிஸாருக்கு எதிராக வடக்கு மாகாண பொலிஸ் முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை யாழ்.மாவட்ட அரச அதிபர் வேதநாயகத்திடம் கையளித்துள்ளதாக துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் செல்லையா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

கடந்த மாதம் சாவு வீடு ஒன்றில் மதுபான உரிமையாளர் உட்பட அவரது சகாக்களால் தாக்குதலுக்கு இலக்கானார் எனக் கூறும் துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அங்கிருந்து தப்பித்து துணுக்காய் பொலிஸ் நிலையத்தில் உயிர் அச்சுறுத்தல் தொடர்பான முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

அந்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது முறைப்பாட்டில் குறிப்பிட்ட எதிராளி மன்றுக்கு சமூகம் தரவில்லை. அதையடுத்து அடுத்த வழக்கு தவணைக்கு எதிராளியை மன்றில் பாரப்படுத்துமாறு துணுக்காய் பொலிஸாருக்கு முல்லைத்தீவு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். ஆனால் அடுத்த தவணையிலும் எதிராளியை பொலிஸார் நீதிமன்றில் பாரப்படுத்த தவறியிருந்தனர். நீதிவான் அது குறித்து விசாரித்த போது எதிராளிக்கு அழைப்பாணை வழங்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதையடுத்து வழக்கு அடுத்த மாதம் 12ஆம் திகதி தள்ளி வைக்கப்பட்டது. இதன்போது எதிராளியை பாரப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, முறைப்பாடு பதிவு செய்த பிரதேச சபை உறுப்பினர், பொலிஸார் மதுபான உரிமையாளருக்கு ஆதரவாக செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டுகின்றார். குறித்த மதுபான நிலைய உரிமையாளரால் கிடைக்கும் சொற்ப நன்மைகளுக்காக பொலிஸார் குற்றவாளிகளை அடையாளப்படுத்த மறுப்பதாகவும், அதனால் மீண்டும் தனது உயிருக்கு ஆபத்து உள்ளதாகவும் துணுக்காய் பொலிஸ் நிலையத்தில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றைத் தான் பதிவு செய்ய முயன்றார் என்றும் ஆயினும் அங்கு பொலிஸ் பொறுப்பதிகாரி இல்லை எனவும் அவர் வந்ததன் பின்னர் இது தொடர்பாக தெரியப்படுத்திவிட்டு உறுப்பினரை அழைப்பதாக தெரிவித்த பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கமறுத்தனர் என்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதை அடுத்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண பொலிஸ் முறைப்பாட்டு ஆணைக்குழுவிடம் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்ய சென்ற போது அங்கு முறைப்பாட்டை ஏற்பதற்கு பொறுப்பான அதிகாரிகள் இல்லாததை அடுத்து, யாழ். அரச அதிபரிடம் கையளித்துள்ளதாக பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்துள்ளார். (ற-21)


# ஒற்றையாட்சிக்குள் தன்னாட்சி இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித விளக்கம்

கொழும்பு, ஜூலை 25
ஒற்றையாட்சி முறைமையின் கீழ் நாட்டில் அதிகாரப் பகிர்வை முன் வைப்பதற்கே அரசு எண்ணியுள்ளது. ஒற்றையாட்சியின் கீழ் தன்னாட்சி என்பது சாத்தியமல்ல என்பதை அரசமைப்புகள் தொடர்பாக அறிந்தவர்கள் நன்கறிவர்.
இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்று தெரிவித்தார்.
ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கீழ் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்ன என்று சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலையே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:–
தேர்தல் காலத்தில் இவ்வாறு பலர் தங்களுக்குத் தேவையான கருத்துகளைத் தெரிவிப்பதுண்டு. ஆனால், நாமே அரசில் உள்ளோம். அரசில் உள்ளவர்கள் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பகிர்வுக்கே இணங்கியுள்ளனர். ஒற்றையாட்சியின் கீழ் தன்னாட்சி என்பது சாத்தியமாகாது என்பதை அரசியல் யாப்புக்களைக் கற்றறிந்தவர்கள் நன்கறிவர்–என்றார். (த–சி)



## ஐ.தே. முன்னணியில் இணைந்தார் மேர்வின் சில்வா



முன்னாள் அமைச்சரும், சுதந்திரக் கட்சியின் முன்னாள் களனித் தொகுதி அமைப்பாளருமான மேர்வின் சில்வா ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மஹிந்த தரப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தீர்மானத்துக்கு மேர்வின் சில்வா வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கிரிபத்கொடை விகாரையில் இடம்பெற்ற மக்கள் சந்திப் பின்போதே மேர்வின் சில்வா ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொண்டுள்ளார்.
இதன்போது அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் களனித் தொகுதி அமைப்பாளர் பெவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
நாட்டின் அரசியல் நிலைமையை புரிந்து கொண்டே தான் இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொண்டார் என மேர்வின் கூறினார். (த)


# குற்றம் செய்தோரை நிராகரிக்க வேண்டும்

## மாதுளுவாவே சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 25
நாடாளுமன்றத்துக்கு படித்தவர்களையும் பண்புள்ளவர்களையும் தெரிவு செய்யுங்கள். குற்றச் செயல்களில் ஈடுபட்டோரை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டாம். அவர்களை நிராகரியுங்கள் என பொது மக்களிடம் வேண்டுகோள் விடுதுள்ள சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் நாட்டுக்குத் தேவை கட்சி மாற்ற அரசுகள் அல்ல. கொள்கையுடைய ஆட்சியாளர்களே ஏன்றும் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஐ.தே. முன்னணியின் கொள்கைப் பிரகடன வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும் போதே சோபித தேரர் இவ்வாறு தெரிவித்தார்.
தேரர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்த தாவது:–
நாட்டின் சட்டம், மற்றும் கொள்கைகளைத் தயாரிக்கும் இடம் தான் நாடாளுமன்றம். அதற்கு நாடாளுமன்றத்துக்கு படித்தவர்கள், பண்பானவர்கள், நேர்மையானவர்களையே தெரிவு செய்து அனுப்ப வேண்டும்.
இதனால் இந்தத் தேர்தலில் எதனோல், போதைப்பொருள் வியாபாரிகள், சிறுவர் பெண்கள் துன்புறுத்தல்களில் ஈடுபட்டோர், குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு மக்கள் வாக்களிக்காது நிராகரிக்க வேண்டும்.
நாட்டைக் கட்டியெழுப்பக்கூடியவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். கசினோ, சூதாட்டங்கள், சுவீப் விற்பனை, குதிரைப் பந்தயக்காரர்களால் நாட்டை முன்னேற்றமுடியாது. இவற்றால் நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியாது. நாட்டுக்குள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தால் தான் எமது நாட்டுப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அடிமைத் தொழிலுக்கு செல்கின்றனர். இளைஞர்கள் கொரியாவுக்கு செல்கின்றனர்.
இந்த நாட்டை அழித்தவர்கள் ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளே ஆவார்கள். எனவே அவர்களே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். பிரதான இரண்டு கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வருவதால் பயனில்லை. எனவே கொள்கைகளை திட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும்.
அதற்கான புரட்சியை ஜனவரி 8ஆம் திகதி முன்னெடுத்தோம். அது தொடர வேண்டும். நாட்டு மக்கள் தற்போது கேட்பது அரசியலில் நல்லாட்சியையே ஆகும்.– என்றார். (ற)

# வெள்ளை வானின் பின்னணியில் சம்பிக்க?

## சந்தேகம் வெளியிடுகிறது ஐ.ம.சு.மு.



கொழும்பு, ஜூலை 25
மிரிஹான சம்பவத்துடன் தொடர்புள்ள நால்வரையும் தீவிரமாக விசாரித்தால் காணாமற்போயுள்ள ஊடகவியலாளர் பிரதீப் எக் னெலிகொட குறித்த தகவல்கள் வெளிவரக்கூடும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்வதற்கு வகுக்கப்பட்டு வரும் சதித் திட்டம் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்று வருகின்றன எனத் தெரிவித்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மிரிஹான வெள்ளைவான் சம்பவத்துடன் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவைத் தொடர்புபடுத்தி கருத்து வெளியிட்டுள்ளது.
மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா அமைச்சர் சம்பிக்கவுக்கு நெருக்கமானவர் என்றும், சம்பிக்கவின் பரிந்துரையின் படியே அவருக்கு இராணுவத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ சுட்டிக் காட்டினார்.
ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:–
மிரிஹான பகுதியில் வெள்ளை வானில் துப்பாக்கியுடன் சிவில் உடையில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இலக்கத் தகட்டை மாற்றிக்கொண்டு இவர்கள் பயணித்த வாகனம் புலிகளுடையது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் வீட்டுக்குச் செல்லும் குறுக்கு வழியில் வைத்துத்தான் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன், இவர்கள் வைத்திருந்த துப்பாக்கி மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்குச் சொந்தமானது. இவர் அமைச்சர் சம்பிக்கவுக்கு நெருக்கமானவர். சம்பிக்கவின் சிபாரிசிலேயே இராணுவத்தில் பதவி உயர்வு பெற்றவர். எனவே, இதுபற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.
இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு 24 மணித்தியாலயங்களுக்குள் பிணை வழங்கப்பட்டுள்ளது. துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு எப்படி உடன் பிணை வழங்கமுடியும்? எனவே, இதன் பின்புலம் குறித்து சந்தேகம் எழுகின்றது.
மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்துவதற்கு அனைத்து வழிகளிலும் சேறு பூசிப் பார்த்தனர். அந்த முயற்சி கைகூடவில்லை. ஆகவே, அவரைக் கொலை செய்வதற்காகத் தற்போது சூழ்ச்சித்திட்டம் வகுக்கப்படுகிறது என எமக்குச் சந்தேகம் எழுகிறது. இதை வலுப்படுத்தும் வகையிலேயே மிரிஹான சம்பவம் அமைந்துள்ளது.
மஹிந்தவுக்கான பாதுகாப்பைக் குறைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றம் செல்கின்றது. ஜே.வி.பி. மனித உரிமை ஆணைக் குழுவுக்குச் செல்கிறது. இவ்வாறான சம்பவங்களை வைத்துப் பார்க்கையில் சூழ்ச்சித் திட்டமொன்று இருக்கின்றமை உறுதியாகிறது.
ஜனாதிபதி மஹிந்த போரை முடித்திருக்காவிட்டால் நாம் உயிருடன் இருந்திருப்போமா என்று தெரியவில்லை. எனவே, இவ்வாறான தொரு தலைவனின் உயிரைப் பலி கொடுப்பதற்கு நாம் தயாரில்லை. அவருக்குப் பாதுகாப்பு அவசியமாகவுள்ளது.
குறிப்பாக, பரப்புரைக் கூட்டமொன்றில் ஆதரவாளரைத் தாக்குவதற்கு மஹிந்த முயற்சிப்பதுபோல் வீடியோ வெளியாகியுள்ளது. தனது பாதுகாப்புக் குறித்து அவர் அச்சம் கொண்டுள்ளார். மக்கள் வெள்ளம் திரண்டதால் தன்னைச் சுதாகரித்துக்கொள்வதற்வே ஜனாதிபதி முயற்சித்தார். ஆனால், அதற்கு வேறு கதை கட்டப்பட்டுள்ளது.
அதேவேளை, மிரிஹான சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரிடமும் விசாரணை மேற்கொண்டால், 2010ஆம் ஆண்டு காணாமற்போன மூத்த ஊடகவியலாளர் பிரதீப் எக் னெலிகொட குறித்த தகவல்கள் வெளிவரக்கூடும். இதை அவரது மனைவி புரிந்துகொள்ள வேண்டும்–என்றார். (த–சி)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும். தொழில், வியாபார வளர்ச்சிக்காகப் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வீட்டுச் செலவுக்குத் தாராளமாகப் பணம் செலவழிப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**இடபம்:** அன்றாடப் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். கடனில் ஒரு பகுதி அடைபடும். பிள்ளைகள் நலனில் ஆர்வம் ஏற்படும்

**மிதுனம்**: பணியில், பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சியும், இலாபமும் உயரும். உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது.

**கடகம்:** நீண்டநாள் திட்டத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் உயரும். வரவேண்டிய மீதிப் பணம் எளிதில் கிடைக்கும் பணியாளர்களுக்கு, அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

**சிங்கம்**: சமூகத்தில் சுய கௌரவம் கூடும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**கன்னி**: மனதில் புத்துணர்வு மேலோங்கும். செயலில் திறமை வெளிப்படும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். மனைவி விரும்பியதை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்**: குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் உயரும். பெண்களுக்கு ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளியூர் பயணத்தால், இனிய அனுபவம் உண்டாகும்.


**விருச்சிகம்**: நண்பர்களுடன் பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**தனுசு**: குடும்பத்தினரின் ஆதரவு மனநிறைவு அளிக்கும். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை உண்டாகும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும்.

**மகரம்**: நண்பர்களிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**கும்பம்**: எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். பெண்களால் நன்மை உண்டாகும்.

**மீனம்**: உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். புதிய உத்தியால், தொழில் வியாபாரத்தில் இலாபம் கூடும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். உறவினர்களால், பெண்கள் பாராட்டப்படுவர்.





எங்கட ஸ்டைல் எப்படி இருக்கு ?




நவீன காந்தித் தாத்தா எப்பிடி இருக்கிறார் ?

## தலை திருட்டு

ஜேர்மனியைச் சேர்ந்தவர் பிரபல இயக்குனர் பிரடெரிக் வில்கேம் மர்னாவு. கடந்த 1888 ஆம் ஆண்டு பிறந்த இவர் 1922ஆம் ஆண்டு, நாஸ்பெராட்டு என்ற மௌனப் படத்தை இயக்கினார். இந்தப் படத்தின் மூலம் அவர் புகழின் உச்சிக்கே சென்று விட்டார். ஜேர்மன் திரையுலகில் வெற்றிகரமான இயக்குனராக வலம் வந்த பிரடெரிக் 1931 ஆம் ஆண்டு காலமானார். அவரது உடலை வாசனைத் திரவியங்கள் பூசிப் பதப்படுத்தி, இரகசிய அறை ஒன்றில் வைத்து அவரது குடும்பத்தினர் பாது காத்து வந்தனர்.

தற்போது பிரடெரிக்கின் உடலில் இருந்து தலைப்பகுதியை மட்டும் யாரோ வெட்டி எடுத்துச்சென்றுள்ளனர். அவரது உடல் அருகே வைக்கப்பட்டிருந்த 2 சகோதரர்களின் உடல்களில் இருந்து எந்தப் பகுதியும் மாயமாகவில்லை.

இது பிரடெரிக்கின் குடும்பத்தினர் உட்பட அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரடெரிக்கின் உடலுக்கு அருகே மெழுகு துண்டுகள் கிடந்ததால், அவரது தலையை வைத்து ஏதாவது ஆய்வு செய்வதற்காக மர்ம நபர்கள் திருடியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்தத் தலைத் திருட்டுச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


## ரிலாக்ஸா வாசியுங்க...


**விருந்தாளி :–** என்ன செய்கிறாய்?
**பையன் :–** படிக்கிறேன்
**விருந்தாளி :–** படிச்சு என்னாவா ஆகப்போற ?
**பையன்;–** அதைப் பற்றித் தான் யோசனை செய்து கொண்டு இருக்கிறேன்.
**விருந்தாளி :–**என்னன்னு ?
**பையன் :–** படிச்சுட்டு என்னாவா ஆகிறதென்று ஒரே குழப்பமா இருக்கு.
**விருந்தாளி :–** குழப்பமா இருக்கா ஏன் ?
**பையன் :–** ஒரு ஆசிரியரின் பத்துவருட சம்பளம் 20 லட்சம்
**விருந்தாளி :–** அப்ப வாத்தியாருக்குப் படி
**பையன் :–** ஒரு இன்ஜினியரின் பத்து வருட வருமானம் 450 லட்சம்
**விருந்தாளி :–**அட அப்ப இன்ஜினியர் வேலைக்குப் படி
**பையன் :–** வைத்தியர் தொழிலில் பத்துவருட வருமானம் 500 லட்சம்
**விருந்தாளி :–** அடேயப்பா! அப்ப வைத்தியருக்குப் படி
**பையன் :–** சராசரியாக ஒரு சாமியாரின் பத்து வருட வருமானம் 1117 கோடியில இருந்து 40000 கோடி வரை.
**விருந்தாளி :** !!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!! மயங்கி விழுகிறார்
**பையன் :–** நான் தான் சொன்னேனே எனக்கு ஒரே குழப்பமா இருக்குன்னு..

## விஜய் படத்தில் நடிக்க பாரதிராஜா,சத்யராஜ் மறுப்பு

அட்லீ இயக்கும் படத்தில் விஜய்க்கு வில்லனாக நடிக்க இயக்குநர் பாரதிராஜா மற்றும் சத்யராஜ் இரு வரையும் அணுகியபோது மறுத்துவிட்டார்கள். விஜய், சமந்தா, எமி ஜக்சன், ராதிகா, இயக்குநர் மகேந்திரன் உள்ளிட்ட பலர் நடித்து வரும் படத்தை அட்லீ இயக்கி வருகிறார். படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்று வருகிறது. விஜய் படத்தின் முதற்கட்டப் படப்பிடிப்பு முடிந்ததாக அண்மையில் ராதிகா அறிவித்திருக்கிறார்.

முதலில் விஜய்க்கு வில்லனாக யாராவது புதிய புதுமுகம் நடித்தால் நன்றாக இருக்கும் என்று முடிவு செய்திருக்கிறது படக்குழு. அதற்காக இயக்குநர் பாரதிராஜாவை முதலில் அணுகி இருக்கிறார்கள். என்னது வில்லனா? மணிரத்னம் படம், சுசீந்திரன் படம் ஆகியவற்றில் வித்தியாசமான வேடங்கள் என்பதால் நடித்தேன். விஜய்க்கு வில்லனாக நடிப்பதற்கு வாய்ப்பே இல்லை, என்று பாரதிராஜா மறுத்துவிட்டார். பாரதிராஜாவைத் தொடர்ந்து சத்யராஜை அணுகி இருக்கிறார்கள். அவரோ நண்பன் படத்தில் விஜய்யோடு வித்தியாசமான பாத்திரத்தில் நடித்தேன். ரஜினிக்கு வில்லன் என்று கேட்டபோதே மறுத்துவிட்டேன். வில்லன் எல்லாம் வேண்டாம், என்று தெரி வித்திருக்கிறார். பாரதிராஜா மற்றும் சத்யராஜ் இருவரும் மறுத்தவுடன், இயக்குநர் மகேந்திரனை வில்லனாக நடிக்க ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.






பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்

X 7

## நேர்மை! எளிமை!! உறுதி!!!

7




எங்களில் ஒருவரான (முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)

**திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களை ஆதரிப்போம்.**

- மானிப்பாய் தொகுதி மக்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



4

## சுரேஷ் க.பிறேமச்சந்திரன்

X 4

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க

**வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம்**
**4 இற்கும் வாக்களியுங்கள்**

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

## சக்தி மிக்க இளைய சமூகம்......!



- இளைய தலைமுறையின் அபிவிருத்தி அச்சாணி
- இளையவர்களின் எதிர்பார்ப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் அங்கஜன் அண்ணாவின் அணியினரை பலப்படுத்துவோம்.
- இளைஞர், யுவதிகள் நாம் இணைந்து கிராமங்கள் தோறும் அடிப்படை உரிமைகளை விரிவுபடுத்துவோம்.
- இளைஞர்களான நாம் வளமான வாழ்விற்கு வாக்களிப்போம்.
- இளைஞர்கள், யுவதிகளை ஒன்றிணைத்து சிந்தனை ரீதியான மாற்றத்தை உருவாக்குவோம்.



அங்கஜன் அண்ணாவின் ஊடாக நேர்மையான முறையில் எவ்வித எதிர்பார்ப்புக்களும் இல்லாது, இலஞ்சமல்ல, நேரடி இணைப்பினூடாக நாம் ஒவ்வொருவரும் பெற்ற பயன்களை எமது இளைய சமூகம் தொடர்ந்தும் பெற்றிட எமது இதய சக்தியுடன் நான், எனது, எமது, சமூகம், சுற்றம் என ஒன்றிணைந்து நண்பர்கள், இணையம் (FB) மூலம் எல்லோரையும் விழிப்புணர்வாக்கி அங்கஜன் அண்ணாவை அனுப்புவோம் பாராளுமன்றம்.

**வெற்றிலைச் சின்னத்திற்கும் இலக்கம்**
**1 இற்கும் வாக்களியுங்கள்**

X 1

# அங்கஜன் இராமநாதன்

புதிய நாடு ~ புதிய தலைவர் ~ புதிய தலைமுறை ~ புதிய எதிர்பார்ப்பு

# உடன் பிறப்புக்களின் புலம்பல்

அமரர் தங்கராணி
ஜோசப்
(இராசையா மிஸ்)



மலர்வு
23.09.1943

உதிர்வு
24.06.2015

பெரியக்கா பிரிந்து சென்றாள் பாசத்தோடு எமை வளர்த்த
பாசதீபம் பிரிந்து சென்றாள் கனவோடு சிலநாள் நினைவோடு
சில நாள் உணவில்லை உறக்கமில்லை தனிமையில் பல நாள்
உறங்காத கண்களோடும் உழைக்கின்ற மனத்தோடும்
கணமேனும் எமைவிட்டு பிரியாத பெரியக்கா
ஒன்பது பேர்கள் ஒருவயிற்றில் பிறந்தோம் எளிமையிலும்
வறுமையிலும் ஒன்றாய் வளர்ந்தோம் பெரியக்கா என்றைக்கும்
உயிரக்கா நீ எமக்கு எங்கே நீ சென்றாலும் எமதுள்ளம்
உம்மோடு.

34, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
உடன் பிறப்புக்கள்.

## மாதாந்த கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 25

வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3 மணிக்கு வட இலங்கைச் சங்கீத சபையின் தற்பரானந்தன் கலையரங்கில் நடைபெற உள்ளது.


இசைக்கச்சேரியை கலாபூசணம் திருமதி வி.இராச நாயகமும், பல்லியத்தை ஈழ நல்லூர் ர.சுரஷா ஹித்தியன் குழுவினரும், நாட்டியாஞ்சலியை மானிப்பாய் நர்த்தனாலாய மாணவர்களும் வழங்கவுள்ளார்கள். நிகழ்வில் ஆர்வலர்களைகலந்துகொள்ளு மாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ரி)

## கலந்துரையாடல்

நாடாளுமன்றத் தேர்தல் 2015 – ஜனநாயகப் போராட் டத்தின் இலக்குகளும் அதன் எல்லைகளும் எனும் தலைப்பிலான கலந்துரையாடலொன்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு அண்மை யிலுள்ள டி.சி.எம் தனியார் கல்வி நிறுவனத்தில் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் நடை பெறும் இந்த கலந்துரை யாடலில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ள லாம் என ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ள னர். (ற-10)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
12 . 10 . 1946



மறைவு
06 . 01 . 2015

கடந்த 06.01.2015 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
**Lion செல்லையா யோகானந்தராஜா** *B.A (Hons)*

[ஓய்வு நிலை அத்தியட்சகர் - அரச முதியோர் இல்லம் - கைதடி]


அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (26.07.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

[63300][3,9]

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அன்னையின் கரங்களில் தவழ்ந்தது
18.06.1947

ஆண்டவன் பாதங்களில் சேர்ந்தது
22.06.2015

(திதி: ஷஷ்டி)

திருமதி கனகேஸ்வரி
சிவபாதம்

நிமிடத்துக்கு நிமிடம் எங்கள் நினைவெல்லாம் - அம்மா
உங்களைத் தேடுதே! நீங்கள் எம்மோடு இல்லை என
நினைக்க மனம் பதறுதே! அடுத்த நொடி உம்முகம் காணமாட்டோம்
எனஎண்ணுகையில் உலகமே இருளாகுதே! எம் காலமே முடிந்தாலும் எங்களால்
உங்களை மறந்திருக்க முடியாதே!உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


22.06.2015 அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்பு அம்மாவின் இறுதிச்சடங்கு நிகழ்வுகளில் நாம் ஈடுபட்டு இருந்தமையால் அத்தருணம் சமுகம் தந்தோர் அனை வரையும் எம்மால் கவனத்தில் கொள்ள முடியவில்லை. ஆதலால் குறைகளெதனையும் மனதில் கொள்ளாது இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நாளை [26.07.2015] ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் எம் அம்மாவின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிக்கோ பேக்கறி,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இராசையா பாக்கியநாதன்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாக்கியநாதன் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - இராசமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும்,யசோதாவின் (யசி) அன்புக் கணவரும், பிருந்தன் (அசோக் - கனடா), தர்சினி (கனடா), நிஷா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,அபிராமி (கனடா), ஜஜேந்திரன் (கஜன் - கனடா),சுதர்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும்,கனகாம்பிகை, மகேஸ்வரி (பிரான்ஸ்), வன்னியசிங்கம் (தவம் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணபதிப்பிள்ளை, காலஞ் சென்ற கணேசமூர்த்தி, வரலக்சுமி (பிரான்ஸ்),ஸ்ரீதரன் (பிரான்ஸ்),யசோதரன் (பிரான்ஸ்),பிறேமலதா (பிரான்ஸ்), ஹரிதரன் (கனடா), மனோகரன் (கனடா), முரளிதரன் (கனடா), ரவிதரன் (பிரான்ஸ்), உமாகௌரி (ஆசிரியை, வவுனியா இந்துக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும்,கமலநாதன் (பிரான்ஸ்), பாலேந்திரன் (புகையிரதத்திணைக்களம் - வவுனியா) ஆகியோரின் சகலனும், அனிஷ், அபிமன், அபினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இல.171/15, காந்தி வீதி,தோணிக்கல்லில் உள்ள அவரின் உறவினர் வீட்டில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 171 /15, காந்தி வீதி,
தோணிக்கல்,வவுனியா.

(61136)
(45.7.5)

தகவல்:
குடும்பத்தினர்.
024 222 4716

# விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
தங்கராணி யோசப்
(இராசையா மிஸ்)



மலர்வு
23.09.1943

உதிர்வு
24.06.2015

நிலையில்லா வாழ்க்கையில் நிறைவான வாழ்வினிக்க
நின் கைத்தலம் பற்றி வாழ்ந்தவளே
அன்பின் எழில் உருவாய் பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பொக்கிஷமாய் வாழ்ந்த எம் அம்மாவே !!
உங்களை இழந்து விழி நீர் கசிந்து கலங்குகின்றோம்.
அன்புடன் எம்மை அணைத்து அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எம்மை வழி நடத்தி பாரினில் உயரவைத்த
உத்தமியே எங்கு சென்றீர்கள்

24.06.2015 அன்று காலமான எமது குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய அனை வருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

இல.31, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்.

# 50 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் எழுதுமட்டுவாழ் அஞ்சல் அலுவலகம்

## காணி வழங்க எவரும் முன்வராததால் இந்த நிலை

தென்மராட்சி, ஜூலை 25

எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் கடந்த 50 ஆண்டு களுக்கும் மேலாக வாடகைக் கட்டடங்களில் சிரமங்களின் மத்தியில் செயற்பட்டு வருகிறது.

உப அஞ்சல் அலுவலகம் அமைப் பதற்கு காணி நன்கொடையாக வழங்க எவரும் முன்வராததால் நிரந்தரக் கட்டடம் அமைக்க முடி யாத நிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பளை பிரதான அஞ்சல் அலுவல கத்திலிருந்து அஞ்சல்களைப் பெற்று எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம் பகம், ஒட்டுவெளி, முகமாலை வடக்கு, தெற்கு, இந்திராபுரம், இத்தாவில் கிளாலி ஆகிய பகுதி களுக்கு தினமும் அஞ்சல் விநி யோக சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

உப அஞ்சல் அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டட வசதி இல்லாத தால் எழுதுமட்டுவாழ் சந்திக்கு அருகில் தனியார் கடைக் கட்டட மொன்றில் இயங்கிவருகிறது. அங்கு பணிபுரிவோர் பெரும் சிர மங்களுக்கு மத்தியில் தமது கடமை களைமேற்கொண்டுவருகின்றனர்.

சமூக சேவைகள் திணைக்களத் தால் வழங்கப்படும் சகல கொடுப் பனவுகளும் உப அஞ்சல் நிலை யம் இயங்கும் சிறு கட்டடத்தில் வைத்து வழங்கப்படுவதால் கொடுப் பனவுகளைப் பெறவருவோர் உள்ளே நிற்கமுடியாமல் அரு கில் உள்ள ஆலய மர நிழலில் பெயர் கூப்பிடும் வரை காத் திருக்கின்றனர்.

எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்ட டம் அமைக்க நலன்விரும்பிகள் எவராவது அந்தப் பகுதியில் காணி நன்கொடையாக வழங்க முன் வருவார்களேயானால் நிரந் தரக் கட்டடம் அமைக் கப்பட்டுசிறந்தசேவையை வழங்க முடியும் என் றும் தெரிவிக்கப்பட் டது. (ற-9)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவு கள்– 2 எனும் நூல் வெளியீடு நாளை ஞாயிற் றுக்கிழமை பி.ப. 2.35 மணிக்கு திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெற வுள்ளது. சி.சுந்தரேஸ்வரனின் தலைமையில் நிகழ்வு இடம் பெறும். (ற)

# விபத்தை ஏற்படுத்தியவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம்

## இழப்பீடு செலுத்தவும் உத்தரவு

தென்மராட்சி, ஜீலை 25

சாரதிய அனுமதிப் பத்திரமின்றி போக்குவரத்து விதிமுறை களை மீறி வாகனத்தைச் செலுத்தி பொது மகனொருவருக்கு விபத்தை ஏற்படுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த செவ்வாய்க் கிழமை 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. அத்துடன் காயமடைந்து பாதிக்கப்பட்டவருக்கு 5 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் உத்தரவிட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் அபராதமும் விதித்து பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்குமாறும் உத்தரவிட்டார். அதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய சார தியொருவருக்கு 7ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்த துடன் சாரதி அனுமதிப் பத்திரத்தை 3 மாதங்கள் நீதிமன் றில் தடுத்து வைக்குமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக்கவசம் அணிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி நீதிமன்றில் இதுவரை 30 மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கு கறுப்புக் கண்ணாடி பொருத்திய தலைக்கவசம் அணிந்த மைக்காக தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக் கப்பட்டுள்ளது. (ற-9)

# வருடாந்தத் திருவிழா

கொழும்புத்துறை, ஜூலை 25

கொழும்புத்துறை வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலயத்தின் வரு டாந்தத் திருவிழா நாளை ஞாயிற் றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச் சொரூப பவனியும் இடம்பெறும். (ஜ-135)

# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 25

பிரிட்டன் ஹரோ மாநகர புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ள, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஸ் கிருஸ்ணாவுக்கு, நீர்வேலி மக் களால் கௌரவிப்பு நிகழ்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு, நீர்வேலி பாலர் பகல் விடுதி மண்டபத்தில் இந்தக் கௌர விப்பு நிகழ்வு நடைபெறவுள்ள தாக, நீர்வேலி சமுதாய முன் னேற்றக் கழகத்தினர் அறிவித் துள்ளனர். (ற-ரி)

# பரிசளிப்பு விழா

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசையையொட்டி நடத்தும் திருமுறை மனனப் போட் டிப் பரிசளிப்பு விழா இன்று நடை பெறவுள்ளது. பி.ப 5.30 மணிக்கு ஆலய மண் டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு இரா.செல்வ வடிவேல் தலைமை வகிக்கவுள்ளது டன் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை நீதிமன்ற உத்தியோ கத்தர் திருமதி சோ. நகுலேஸ்வரி கலந்துகொள்ள வுள்ளார். (ற-10)

■ ■ ■

யாழ்ப்பாணம்,ஜூலை 25

நெல்லியடி மத்திய கல்லூரி, தேசியப் பாடசாலை யின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. பாட சாலையின் அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமை யில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தக் கல்லூரியின் பழைய மாணவன் கலந்து கொள்வார். (ஜ-35)


**தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள வேலைத்தளம் ஒன்றுக்கு 20 - 30 வயதுக்குட்பட்ட ஆண்கள் தேவை.

தொடர்பு: காலை 9.00 - மாலை 5.00 வரை 021 300 3131 (83322) (9.3.7)

**விற்பனைக்கு உண்டு**

24 Sri Bmc லொறி விற்பனைக்கு உண்டு

* வாகனம் ஓடக்கூடிய நிலையில் உள்ளது.

தொடர்பு: 077 757 1889

**நாய் விற்பனைக்கு**

இரண்டு வயது நிறைந்த ஜேர்மன் செப்பேட் அல்சேசன் ஆண் நாய்கள் விற்பனைக்குள்ளன.

தொடர்பு : கோண்டாவில் MS லேன்.

T.P - 077 625 8115

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பார்வையிடலாம்.

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள ISUZU, Japan Car மலிவான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 030 3834 (83332) (9.3.8)

**தவறிவிடப்பட்டது**

துரைசிங்கம் கிரிதரன் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மன்னார் பஸ்நிலையத்தில் தவறவிடப்பட்டுள்ளது. எனவே இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி எண்ணுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

முகவரி: இருபாலை தெற்கு, கோப்பாய்த் தோட்டம், இருபாலை.

தொடர்பு: 076 687 2183, 077 501 7790 (83326) (9.3.7)

**மணமகள் தேவை**

மலையகத்தைச் சேர்ந்த கொழும்பை வதிவிடமாகக் கொண்ட 28 வயதுடைய மணமகனுக்கு படித்த யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இந்து கௌரவ குடும்ப 24-25 வயதுடைய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு : 071 759 5870

**ஆங்கில மொழிக் கல்வி**

மேலைப்புலோலியில் ஆங்கில மொழிக் கல்வியினை செவிமடுத்தல் (Listening), பேசுதல்(Speaking), வாசித்தல் (Reading),எழுதுதல்(Writing) ஆகிய அடிப்படைத் திறன்களுடன் கற்றுக் கொள்ள தாங்களாகவே மனதார விரும்புவோர் மட்டும் தொடர்பு கொள்ளலாம்.

T.P.No: 077 161 3060 (18143)(9.2.6)

**மணமக்கள் தேவை**

*83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 15¼ பாவமுடைய அமெரிக்கா பிரஜா உரிமை பெற்ற ஆக்கிரெக் மணமகளுக்கு எக்கவுண்டன் இஞ்சினியர் மணமகன் தேவை.

*82இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 24 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகளுக்கு, டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் கனடாவில் அல்லது உள்நாட்டில் தேவை.

* 85 இல் பிறந்த 8இல் செவ்வாய் 63 பாவமுடைய நோர்வே பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகளுக்கு டாக்டர் இஞ்சினியர் மணமகன் தேவை.

*87 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 27½ பாவமுடைய அவுஸ்ரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு C.I.M.A BScஇற்கு மேல் மணமகன் தேவை.

*83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.

*87 இல் பிறந்த 7இல் செவ்வாய் 73 பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு படித்த அழகான மணமகன் தேவை. (83329)(9.6.8)

தொடர்பு: காலக்கண்ணன் திருமண சேவை இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச் சோலையடி, முடமாவடி. 077 607 0862

**பாராளுமன்றத் தேர்தல் - 2015**

**மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் -25.07.2015**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

தலைமை : கௌரவ தியாகராஜா பிரகாஷ்
(தலைவர் - வலி.தெற்கு பிரதேசசபை,
தலைவர்- மானிப்பாய்த் தொகுதி,இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

இடம் : மருதனார்மடம் சந்தை முன்றில்

காலம் : இன்று (25.07.2015) சனிக்கிழமை மாலை 5.00 மணி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் - இரா.சம்பந்தன்,
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் - மாவை சோ.சேனாதிராஜா
வடக்கு மாகாண முதல்வர் / நீதியரசர் - சி.வி.விக்னேஸ்வரன்
ஆகியோருடன் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள்,வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

தன்மானத் தமிழனாய் தலைநிமிர்ந்து நாம்வாழ
தமிழரசை நிறுவி எம் இனம் காத்திட
இனிய தமிழ் உறவுகளை அன்புடன் அழைக்கின்றோம்.
வாழ்க தமிழ் மலர்க தமிழ் அரசு!
வெல்க தமிழ் தேசியம்!

பிரசாரப் பிரிவு (சி.18016)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

**Majestic**
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் | CEYLON THEATRES




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☏ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.com

**NATIONS CAMPUS - JAFFNA**

IDM NATIONS CAMPUS SINCE 1981

www.idmedu.lk | www.facebook.com/idmnc

PEARSON edexcel

**HND**
COMPUTING AND SYSTEM DEVELOPMENT

Jobs Titles
Software Developer, System Administrator, Software Engineer, Programmer, ....

BSc (Hons) Software Development (NVQ Level -6)
Higher National Diploma (NVQ Level -5) Internship*
After O/L or A/L

077 441 9901

SPECIAL OFFER LIMITED
* Conditions Apply

Batch Start on 01st August 2015

Register Before 30th July 2015

edexcel | bucks | UGC Sri Lanka | Open University | Charles Sturt University | BIT

# 216, Nawalar Road, Jaffna.
E-mail : infojaffna@idmedu.lk

TEL : 021 222 9901

# வாழ்விலும் சாவிலும் இணைப்பிரியா நண்பர்களின் ஐந்தாம் ஆண்டு நிறைவில்






## அமரர் சாந்தகுமார் சந்துரு

(சமுகவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அன்னைமடியில்: 25.07.1986
இறைவன் அடியில்: 25.07.2010

அன்பும் பண்பும் நிறைந்த சிகரமே சந்துரு
ஐந்து ஆண்டுகள் முடிந்ததடா எத்தனை
ஆண்டுகள்தான் சென்றாலும் உன்னையும்
உன் நண்பன் கலீஸ்சையும் மறக்க முடியாது
நீ எங்கே சென்று விட்டாய்?
அன்பெல்லாம் ஓர் உருவாய் அமைந்து
பண்புடனும் பாசத்துடனும்
எல்லோருடனும் பழகி
இனிமையாய் பேசி சுற்றத்தவரின்
மனதில் இடம்பிடித்து
நற்குணத்துடன் உத்தமராய்
வாழ்ந்தவரே! நீ வாழ்ந்த
நாள்களை எண்ணி கலங்கிய கண்களுடன்
உன் நினைவுடனே வாழ்கிறோமடா - உங்கள்
இருவரினதும் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.



## அன்ரன் யோகராஜா கலிஸ்ரஸ் கஜேந்திரன்

(பொறியியல் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

மண்ணவர்க்கு: 15.09.1986
விண்ணவர்க்கு: 25.07.2010

### கலிஸ்ரஸ் கஜேந்திரன்

நாள்கள் உருண்டோடினாலும் - உந்தன்
ஞாபகங்கள் உறங்க மறுக்கின்றன

கற்றுத் தேர்ந்தவன் நீ காலக்கதியில்
காலனை நோக்கி பயணித்தாயே!


இனிமையாகப் பழகிய நாள்கள் கூட
இன்று ஏக்கமாய் கழிகின்றது...

நண்பர்கள் உடன் இருந்தால் உலகையே
நீ மறந்திடுவாய்

இன்றும் சொர்க்கத்தின் பூங்காவில் - நண்பர்
சந்துருவுடன் உலாவருவாய் - என்ற
நம்பிக்கையில் பூமியில் நாம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்.


நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் 2015
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
1
அருந்தவபாலன் கந்தையா
2
அனந்தராஜ் நடராஜா
3
ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம்
4
ஆறுமுகம் கந்தையா பிரேமச்சந்திரன்
9
மாவை சோமசுந்தரம் சேனாதிராசா
5
ஈஸ்வரபாதம் சரவணபவன்
6
கந்தர் நல்லதம்பி ஸ்ரீகாந்தா
7
தர்மலிங்கம் சித்தார்த்தன்
8
மதினி நெல்சன்
10
சிவஞானம் சிறீதரன்
தமிழ்த் தேசிய இனத்தின்
இறையாண்மை - சுயநிர்ணய உரிமை - தமிழர் தேசத்தில் தன்னாட்சி
வீட்டுச் சின்னத்துக்கே வாக்களியுங்கள்!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



## தேர்தல் முறைகேடு வழக்கு நவாஸ் ஷெரீப் விடுவிப்பு

இஸ்லாமாபாத், ஜுலை 25
பாகிஸ்தானில் கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்ற கட்சி 272 இடங்களில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

இந்தத் தேர்தலில் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெக்ரிக்– இ– இன்சாப் கட்சி 35 இடங்களில் வெற்றி பெற்றது. எனவே கள்ள வாக்குகள் உள்ளிட்ட முறைகேடுகளில் நவாஸ் ஷெரீப்பும் அவரது கட்சியும் ஈடுபட்டதாக அவர் குற்றம் சாட்டினார். லாகூரில் இருந்து இஸ்லாமாபாத்துக்கு ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் ஊர்வலமாகச் சென்று நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார். அதனைத் தொடர்ந்து இது குறித்த வழக்கு கடந்த ஏப்ரல் மாதம் உயர் நீதிமன்றில் நடைபெற்றது. உயர் நீதிமன்ற விசாரணையில் நவாஸ் ஷெரீப்பும், அவரது கட்சியும் தேர்தல் முறைகேடுகளில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து தேர்தல் முறைகேடு வழக்கில் இருந்து நவாஸ் ஷெரீப்பையும் அவரது கட்சியையும் உயர் நீதிமன்றம் நேற்று விடுவித்துள்ளது. (ஐ)

# 153 சீனர்களுக்கு ஆயுள் தண்டனை

## மியன்மார் நீதிமன்றம் அதிரடி

நேபிடா, ஜுலை 25
மியன்மாரில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டிய வழக்கில் சீனாவைச் சேர்ந்த 153 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் உள்ள சீன எல்லைப்பகுதியை ஒட்டிய கச்சின் மாநிலத்தில் சீனாவைச் சேர்ந்த சிலர் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டிக் கடத்துகின்றனர் என்று கூறப்படுகிறது. அதனைத் தடுக்க அந்த நாட்டின் இராணுவத்தினர் அதிரடிச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக கடந்த ஜனவரி மாதத்தில் சோதனை நடத்தியபோது சீனாவைச் சேர்ந்த 153 பேர் மரக்கடத்தலில் ஈடுபட்டமை தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு மியன்மார் நீதிமன்றத்தில் கடந்த 5 மாதங்களாக நடைபெற்று வந்தததது. இந்த நிலையில் அந்த வழக்கில் தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்தத் தீர்ப்பில், சட்டவிரோதமாக மியன்மார் எல்லைக்குள் நுழைந்து மரம் வெட்டிய குற்றத்துக்காக 153 பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர்களில் ஒருவர் சிறுவன் என்பதால் அவருக்குக் குறைந்தபட்ச தண்டனையாக 10 வருடங்கள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## போதை மருந்தால் சீரழியும் ஆப்கான்

காபூல்,ஜுலை 25
தெற்கு ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் மாகாணத்தை விட்டு பிரிட்டன் படைகள் வெளியேறி ஆறு மாதங்கள் கடந்து விட்டன.

அந்த மாகாணத்தின் வடபகுதியில் பெரும்பாலான இடங்களைத் தற்போது தலிபான்கள் கைப்பற்றி விட்டார்கள். அதேவேளை ஹெல்மண்ட் தொடர்ந்தும் பொப்பி எனப்படும் போதை மருந்து தயாரிக்கக்கூடிய கசகசா செடியின் விளைச்சலில் தொடர்ந்து முன்னணியில் திகழ்கிறது. அபின் தயாரிக்கப் பயன்படும் ஓப்பியம் பொப்பி செடிகளின் விளைச்சல் ஆப்கானிஸ்தானில் மீண்டும் அதிகரித்துள்ளதாக ஐ.நா. கூறுகின்றது.

ஹெல்மண்ட்தான் அதில் பெரு விளைச்சல் தந்த இடம்.

அதன் காரணமாக சமூக ரீதியிலான தாக்கம் அங்கு மிகவும் பேரழிவைத் தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பயங்கரவாதிகளுக்கு அமெ.உதவி

# நைஜீரியா குற்றச்சாட்டு

அபுஜா,ஜுலை 25
நைஜீரியாவுக்கு ஆயுதங்களைத் தர மறுப்பதன் மூலம் அமெரிக்கா, போகோ ஹராம் இஸ்லாமிய பயங்கரவாதிகளுக்கு உதவுவதாகவும், துணைபோவதாகவும் அந்த நாட்டின் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

நைஜீரியா மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளின் காரணமாக, அமெரிக்கா ஆயுத உதவிகளைச் செய்ய மறுக்கிறது.

நைஜீரியாவின் ஜனாதிபதி முஹம்மது புஹாரி கடந்த திங்கட்கிழமையன்று, அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமாவைச் சந்தித்துப் பேசினார். அப்போது கூடுதல் உதவிகளை அவரிடம் கேட்டுள்ளார். அமெரிக்கச் சட்டப்படி, எந்த ஒரு நாடு மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கிறதோ, அதற்கு ஆயுதங்கள் வழங்க முடியாது.



அமெரிக்கா, நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் செயற்படுவதாகப் புஹாரி குற்றம் சாட்டியிருக்கிறார்.

நைஜீரியாவில் செயற்பட்டுவரும் போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு 2009 இலிருந்து இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொலை செய்திருக்கிறது. நூற்றுக்கணக்கான பெண்களையும் பெண் குழந்தைகளையும் கடத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனர்களுக்கு ஆயுள்தண்டனை மியன்மாருக்கு சீனா கண்டனம்



பீஜிங்,ஜுலை 25
சட்டவிரோதமாக மியன்மாரிலிருந்து மரம் கடத்திய குற்றச்சாட்டு தொடர்பில், நூற்றைம்பதுக்கும் அதிகமான சீனப் பிரஜைகளுக்கு பர்மிய நீதிமன்றம் ஒன்று ஆயுள் தண்டனை விதித்து, தீர்ப்பளித்துள்ளமைக்குச் சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

சீனாவின் அரசு நடத்தும் ஊடகங்கள் அந்தத் தீர்ப்பைக் கடுமையாகக் கண்டித்து எழுதியுள்ளன.

இந்தத் தீர்ப்பு அளவுக்கதிகமாகக் கடுமையானது என்று அவை தெரிவித்துள்ளன. இரண்டு அரசுகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு இருந்துவந்தாலும், மியன்மாரின் வளங்களில் சீனா காட்டும் தீவிரம் காரணமாக, சீனா மீது மியன்மாரில் அதிருப்தி அதிகரித்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.(ஐ)

# பல்மைரா நகரை மீட்க சிரிய ராணுவம் தீவிர முயற்சி

பல்மைரா,ஜுலை 25
ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்பில் இருக்கும் பல்மைராப் பகுதியைக் கைப்பற்றும் பொருட்டு சிரிய இராணுவம் முன்னேறி வருகிறது. யுனெஸ்கோவால் பாரம்பரிய நகர் என அறிவிக்கப்பட்ட பல்மைராவை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கடந்த மே மாதம் கைப்பற்றினர். பல்மைராவை கைப்பற்றிய தீவிரவாதிகள் நகரில் இருந்த ஏராளமான வரலாற்றுச் சிறப்புமிக்க கோபுரங்களையும், பழம் பெருமை வாய்ந்த சிலைகளையும் தகர்த்தெறிந்தனர்.




அவர்களை எதிர்த்துப் போராடி வரும் சிரிய இராணுவம் பல்மைராவை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் முன்னேறி வருகிறது.

பல்மைரா நகரின் மூன்று புறங்களிலும் சூழ்ந்துள்ள சிரிய இராணுவம் தொடர்த் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

குவாரிகளில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை கடுமையாகத் தாக்கி வரும் சிரிய இராணுவம் பலரைக் கொன்றுள்ளதாகவும், ஏராளமான தீவிரவாதிகள் இராணுவத்தின் தாக்குதல்களைத் தாக்குப் பிடிக்க முடியாமல் பின்வாங்கி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## பூமியைப் போன்று இன்னொரு கிரகம்

வொஷிங்டன்,ஜூலை 25
பூமியைப் போன்றே அமைப்புக் கொண்ட மற்றோரு கிரகத்தைப் பற்றிய தகவல்களை நாசா வெளியிட்டுள்ளது.



கெப்லர் 452–பி என்று பெயரிடப்பட்டுள்ள அந்தக் கிரகத்தைப் பூமியின் இரட்டைச் சகோதரன் என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். மேலும் கெப்லர் 452–பி தான் அதனுடைய நட்சத்திரக் குடும்பத்திலேயே சிறிய கிரகம் எனக் கூறப்படுகிறது. எனினும் பூமி எவ்வளவு தொலைவில் இருந்து சூரியனைச் சுற்றுகிறதோ அதே தொலைவில் இருந்து கெப்லர் 452–பி அதனது நட்சத்திரத்தை சுற்றிவருகிறது. மேலும் அதன் நட்சத்திரமும் பூமியைப் போலவே உள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் கிரகம் பூமியை விட 60 சதவீதம் பெரியது, என்றும் தெரிவித்துள்ளனர். இந்தக் கிரகம் பூமிக்கு 1400 ஒளி வருடங்கள் தொலைவில் உள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் இதனையும் சேர்த்து மொத்தமாக ஆயிரத்து 30 கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)




அமெரிக்காவில் ஆரம்பித்துள்ள ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக ஸ்கொட் வோக்கரின் ஆதரவாளர்கள், அந்த நாட்டின் தேசியக் கொடியுடன் யானைச் சிலையை ஊர்வலமாக அழைத்துச் செல்கின்றனர். (ஐ)



## தன் குருதி குடிக்க அழைக்கும் பெண்

மெக்ஸிக்கோ, ஜூலை 25
மெக்சிகோ நாட்டில் பெண் ஒருவர் குருதி குடிப்பவர்களுக்காக தனது ரத்தத்தை தானமாக வழங்கிவருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மெக்சிகோ நாட்டின் லூசியானாவில் உள்ள ஸ்டிரீவ்போர்ட் பகுதியைச் சேர்ந்தவர் புளுட் கெட்சன். இவர் குருதி குடிப்பவர்கள் தாராளமாகத் தன்னைத் தொடர்பு கொள்ளலாம் என்று அழைப்புவிடுத்துள்ளார். மேலும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இவர் பலருக்கும் குருதி வழங்கியுள்ளார். (ஐ)

# 6 மாதங்களில் ஈரானில் 700 பேருக்குத் தூக்கு

லண்டன், ஜூலை 25
இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப்பகுதிக்குள் ஈரானில் 700 பேருக்குச் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.
உலகிலேயே அதிகளவு சாவுத் தண்டனை நிறைவேற்றும் நாடு ஈரான்.
2015 இல் முதல் ஆறு மாதத்தில் மட்டும் சுமார் 700 பேருக்குச் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும், இந்த வருடம் முடிவதற்குள் மேலும் ஆயிரம் பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட வாய்ப்புள்ளதாகவும் மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை அமைப்பு தெரிவித்துள்ளது.




“சாவுத் தண்டனையே ஒழிக்கப்பட வேண்டும் என உலகம் முழுவதும் கோரிக்கைகள் எழுந்துவரும் நிலையில், பொதுமக்களுக்கான சுதந்திரமும் நடு நிலையும் குறைந்து காணப்படும் ஈரானில், நீதிமன்றங்கள் தொடர்ந்து சாவுத்தண்டனை விதித்து வருவது மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது” என மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஸ்பெயின் நாட்டில் புதிய சட்டம்

மார்ரிடில்,ஜூலை 25
ஸ்பெயின் நாட்டில் திருமணச் சட்டப்படி ஆண்களும் பெண்களும் திருமணம் செய்யக் கூடிய வயதெல்லையை அந்த நாட்டின் அரசு அதிரடியாக உயர்த்திய புதிய சட்டம் நேற்று முன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
ஐரோப்பிய நாடுகளிலேயே 14 வயதில் சட்டப்படி திருமணம் செய்யக்கூடிய வழக்கம் ஸ்பெயின் நாட்டில் மட்டுமே பல வருடங்களாக இருந்து வந்துள்ளது.
பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் ஆண், பெண் இருவரும் சட்டப்பூர்வமாக திருமணம் செய்யும் வயது 16 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
ஸ்பெயினில் திருமண வாழ்க்கை பற்றிய போதிய அனுபவம் மற்றும் அறிவு இல்லாததால், 14 வயதில் செய்யும் பெரும்பாலான திருமணங்கள் வெற்றிகரமாக நீடிக்கவில்லை என்பது அண்மையில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.
எனினும், திருமண வயதை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும் என கடந்த 2013 ஆம் ஆண்டே அறிவித்திருந்தபோதும், நேற்று முன்தினம் தொடக்கம் அதனை அரசு செயல்படுத்தியுள்ளது.
இந்தப் புதிய சட்டத்தின் படி, ஆண், பெண் இருவரும் திருமணம் செய்யக்கூடிய வயதை 14 இலிருந்து 16 ஆகச் சட்டப்பூர்வமாக உயர்த்தியுள்ளதாக அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. தற்போது புதிய திருமண வயது வரம்புச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதால், பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றி உள்ளதாக ஸ்பெயின் அரசு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ)





## நவாஸ் ஷெரீபுக்கு ஒபாமா அழைப்பு

### இந்தியாவுடன் நட்பைப் பலப்படுத்துமாறு

நியூயோர்க், ஜூலை 25
இந்தியா உட்பட அண்டை நாடுகளுடன் நட்புறவைப் வலுப்படுத்துவதற்கான கொள்கைக்கு ஆதரவு திரட்டும் வகையில், அரசு முறைச் சுற்றுப்பயணமாக அமெரிக்காவுக்கு வருகை தர வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.
இராணுவ பலத்தை அதிகரிப்பதை விட்டு, இந்தியாவுடன் அமைதியான உறவை மேற்கொள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் முயன்று வருவதை அவரது அண்மைய நடவடிக்கைகள் வெளிப்படுத்தி வருகின்றன.
மேலும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஐ.நா. சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா செல்லும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், அமைதிக்கான பேச்சில் ஈடுபடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## நாய்கள் குரைத்தால் இத்தாலியில் அபராதம்

### நகராட்சி முதல்வர் விநோத உத்தரவு

ரோம்,ஜூலை 25
இத்தாலியில் உள்ள கம்பானியா மாகாணத்தில் கன்ரோனி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் குடிமக்கள் தூங்கும் போது நாய்கள் குரைத்துத் துன்புறுத்தினால் அவற்றின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று அந்த நகராட்சி முதல்வர் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.



இத்தாலிய மக்கள் மதிய உணவு உட்கொண்ட பின்னர் சிறிது நேரம் குட்டித் தூக்கம் போடுவதை ஒரு முக்கிய பழக்கமாகவே பின்பற்றி வருகின்றனர்.
இந்த நிலையில் அண்மைக் காலமாக அந்த நகர் முழுவதும் செல்ல நாய்களை வளர்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவற்றின் தொந்தரவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அந்தப் பகுதி மக்கள் மதிய உணவு உட்கொண்ட பின்னர், குட்டித் தூக்கம் போடும்போது நாய்கள் குரைப்பதால் அவர்களின் தூக்கம் கெடுகிறது என முதல்வருக்குத் தொடர்ந்து முறைப்பாடுகள் குவிந்த வண்ணம் இருந்தன.
இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல்வர் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதில், நகரு[illegible]கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் [illegible]டி மக்களின் மதிய நேரத் தூக்கத்து[illegible]கு நாய்கள் தொந்தரவு செய்வ[illegible]த ஏற்க முடியாது. இனிமேல், [illegible]ற் பகல் 2 மணி முதல் 5 மணி வ[illegible]ர நாய்கள் குரைக்காமல் அவற்[illegible]ன் உரிமையாளர்கள் எச்சரிக்கை[illegible]ா கக் கட்டுப்படுத்தவேண்டும்.
குறிப்பிட்ட இந்த நேர இடைவெ[illegible]ரி யில் நாய்கள் குரைத்தது நிரூ[illegible]க் கப்பட்டால், அவற்றின் உரிமை[illegible]ா ருக்கு 20 முதல் 500 யூரோ வ[illegible]ர அபராதம் விதிக்கப்படும். பிற்ப[illegible]ல் வேளை மட்டுமின்றி, இரவு நே[illegible]ங் களில்கூட நாய்களைக் குரை[illegible]க உரிமையாளர்கள் அனுமதி[illegible]க் கூடாது என முதல்வர் அந்த உ[illegible]ர வில் குறிப்பிட்டுள்ளார். [illegible])

இ.இரட்ணம்
தலைவர் சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வெளிவாரிப்பட்டப் படிப்புகளும் தற்போதைய நடைமுறைகளும்



கல்வியூடான சமூக அபிவிருத்தியே, நிலையானதும், தொடர்ச்சியானதும், சமூக அபிவிருத்திக்கு அடிப்படையானதும் ஆகும் என எல்லோரும் உணருகிறார்கள். இதனால் பட்டப்படிப்பில் அதிகமானவர்கள் அக்கறை செலுத்தி வருகின்றனர். இதற்கு அடிப்படையாக வேலை வாய்ப்பும் அமைகின்றது. வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் பல்கலைக் கழகங்கள் (BA, B.COM, BBM, BF) மூலமாக மேற்கொள்ளப் படுகின்றன. உள்வாரியாக மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும்போது, பல்கலைக்கழக அனுமதியானது வெட்டுப்புள்ளிகள் மூலம் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் Z Score அடிப்டையில் பல்கலைக் கழக அனுமதி தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு உள்வாரியாகத் தெரிவு செய்யப்படாத மாணவர்களை குறிப்பிட்ட சில பல்கலைக் கழகங்கள் சில துறைகளில் வெளிவாரியாகப் பதிவு செய்து சில பட்டங்களை வழங்கி வந்தன. இந்த நிலையில் 2010ஆம் ஆண்டின் 932 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் சுற்றறிக்கைக்கு அமைவாக, இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் இடை நிறுத்தப்பட்டன. இவ்வாறு இடை நிறுத்தப்படுவதற்கான காரணம், வேலை வாய்ப்புப் பெறக்கூடியதான தொழில் சந்தைக்கு ஏற்ப காலத்தின் தேவைக்கு ஏற்ப தரமான கல்வியை வழங்குவதாகும். அத்துடன் வேலைவாய்ப்பின்மையையும், அதனால் நாட்டுக்கும், மக்களுக்கும் ஏற்படுகின்ற பிரச்சினையையும் தவிர்த்தலாகும்.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் புதிய வெளிவாரிப் பட்டப் படிப்புக்களின் நடைமுறைகளை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**தற்போதைய வெளிவாரிப் பட்டப்படிப்புக்களின் நடைமுறைகள் வருமாறு:**

1. இலங்கையின் தொழிற்சந்தைக்கு ஏற்ப வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடியதாக தரமான வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மூலம் பட்டங்களை வழங்குதல்.
2. 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவுகளையும் பரீட்சைகளையும் பல்கலைக் கழகங்கள் மேற்கொண்டன. மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் அல்லது சுயமாகப் பாடங்களைக் கற்றார்கள். ஆனால் தற்போதைய நடைமுறைகளில் அவ்வாறு இல்லை. பல்கலைக் கழகங்களில் வெளிவாரி மாணவர்கள் நேரடியாகப் பதிவு மேற்கொள்ள வேண்டும். தொடர்புடைய வேண்டப்படும் ஆவணங்களை முறையாகச் சமர்ப்பிக்க வேண்டும்.
3. விரிவுரைகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலேயே நடத்தப்படும். மாணவர்களுடைய கல்வி நிர்வாகம் வெளிவாரி அலகுகளினால் மேற்கொள்ளப்படும். உள்வாரி மாணவர்களைப் போன்று தரமான கல்வி வழங்குவதே இதன் நோக்கமாகும்.
4. பல்கலைக்கழகங்களிலும் பதிவுக் கட்டணம், மீள் பதிவு, கற்பித்தல் பாடத்துக்கான கைநூல் (Modules) வழங்குதல் போன்ற செலவுகளை உள்ளடக்கியதாக ஒரு மாணவருக்கு உரிய கட்டணத் தொகை தீர்மானிக்கப்படும். ஏனையதனியார் கல்வி நிறுவனங்களில் எத்தகைய கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஏனெனில் சகல வசதிகளும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும். இந்த வசதிகளுக்கு ஏற்ப கட்டணம் தீர்மானிக்கப்படும்.
5. இதுவரை இல்லாத அளவுக்கு தொழிற்சந்தைக்கு ஏற்ப புதிய பாடங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.
6. முன்னர் வருடாந்தப் பரீட்சை நடத்தப்பட்டது. தற்போதைய முறையில் பருவ (Semester) முறையில் பரீட்சைகள் நடத்தப்படும். 6 மாதத்துக்கு ஒரு தடவை பரீட்சைகள் நடத்தப்படும். பரீட்சை முடிவுகளை உள்வாரி போன்று 3 மாதத்துக்குள் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.
7. வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கென பல்கலைக் கழகங்களால் நூல்நிலையமும், கணினிக் கூடமும் பிரத்தியேகமாக அமைக்கப்படும். இணையம் மூலம் கற்பதற்கானவசதிகளும்வழங்கப்படுகின்றன.
8. வெளி மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கான உள்வாரித்தொகையில் குறிப்பிட்ட மடங்கு என நிர்ணயிக்கப்பட்டது. விண்ணப்பங்களுக்கு ஏற்ப ஒரு பொருத்தமான தெரிவு முறையில் மாணவர்கள் தெரிவு இடம்பெறும்.
9. இதுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விளம்பரங்களை மேற்கொள்ளவில்லை. மிக விரைவில் B.COM, BA வெளிவாரிப் பட்டப் படிப்புக்காக மாணவர்களைச் சேர்ப்பதற்கான விளம்பரங்களை அது மேற்கொள்ளவுள்ளது.
10. மாணவர்கள் அல்லது பெற்றோர்கள் வெளிவாரிப் பட்டப் படிப்பு தொடர்பாக மேலும் விளக்கங்கள் பெற விரும்பினால் 0212210379 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.



> மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் அல்லது சுயமாகப் பாடங்களைக் கற்றிறார்கள். ஆனால் தற்போதைய நடைமுறைகளில் அவ்வாறு இல்லை. பல்கலைக் கழகங் களில் வெளிவாரி மாணவர்கள் நேரடியாகப் பதிவு மேற் கொள்ள வேண்டும். தொடர்புடைய வேண்டப்படும் ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்க வேண்டும்.

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கண்காட்சி நவம்பர் மாதம் ஆரம்பம்

இலங்கையில் இரு தசாப்தங்களுக்கு முன்னர் தகவல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சி காரணமாக தகவல் தொழில்நுட்ப சமூகமும் தொழிற் துறையும் இணைந்து செயற்பட தனிச்சிறப்புடைய ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டுமெனக் கருதப்பட்டது.

1992ஆம் ஆண்டு அது செயல் வடிவம் பெற்று முதன்முறையாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கண்காட்சி (இன்போடெல்) எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் இன்போடெல் நடைபெற்ற ஒவ்வொரு ஆண்டும் அவை சிறப்பாக நடைபெற்றன. தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இந்தக் கண்காட்சி குடிமக்களை இணைத்தல் எனும் கருப்பொருளில் எதிர்வரும் நவம்பர் மாதம் 20, 21,22 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சிக்கான நிதியுதவி பிரபல வர்த்தக நிறுவனங்களாலும், வியாபாரத்துறையினராலும், கல்வியாளர்களாலும் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆர்வலர்களாலும் அளிக்கப்படுகிறது. அத்துடன் இது வேலைவாய்ப்புக்காகக் காத்திருப்போர் மற்றும் அன்றாட வாழ்வில் தகவல் தொழிநுட்பச் சாதனங்களை அதிகமாக பயன்படுத்தும் பொதுமக்கள் என்று அனைத்துத் தரப்பினராலும் எதிர்பார்க்கப்படும் ஒரு நிகழ்வாகும்.

பல்வேறுபட்ட தொழில்நுட்பத் தீர்வுகளையும், புதிய வியாபார வாய்ப்புக்களையும் உருவாக்கும் சிறந்த தளமாகவும் இன்போடெல் அமைகிறது. இவ்வாண்டு அரச மற்றும் தனியார் வர்த்தக சமூகத்தின் ஒத்துழைப்பும் அனுசரணையும் இன்போடெல் கண்காட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்த வகையில் வெளிவிவகார அமைச்சு, கல்வி அமைச்சு, உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்களின் அங்கீகாரம் இந்தக் க்கண்காட்சிக்கு பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

## அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவும்

கடந்த 16ஆம் திகதி உதயனின் வாசகர் திருமுகம் பகுதியில் திருமதி சர்மிளா என்ற வாசகர் இவர்களைக் கட்டுப்படுத்துவது யார் என்ற தலைப்பில் வாசகர் திருமுகமொன்றை எழுதியி ருந்தார். அதற்கு இதோ எனது பதில் என வி.எஸ்.வி நல்லூரில் இருந்து எழுதிய பதில் 20ஆம் திகதி வாசகர் திருமுகத்தில் பிரசுரமாகியிருந்தது. அதில் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அவர்களின் தபால் முகவரியை உதயன் பத்திரிகை யில் தொடர்ந்தும் பிரசுரித்துக் கொண்டு வரலாம் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. நீதிபதிகளின் தபால் முகவரியைப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு அரச சட்டத்தில் இடமிருக்காது என்பதே எனது பதிலாகும். இதனை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளங்செழியன் அவர்களுடன் தொடர்பு கொண்டு பத்திரிகையில் நீதிபதிகளின் தபால் முகவரியை பிரசுரிக்க சட்டத்தில் இடமிருக்கின்றதா எனக்கேட்ட றிந்து அப் படிப் பிரசுரிக்க சட்டத்தில் இடமிருந்தால் அவரது அனுமதியுடன் தபால் முகவரியை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு நானும் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் தற்போது யாழில் ஐம்பது வீதமான குற்றச் செயல்கள் குறைந்துள்ளன போன்று தெரிகிறது. அப்படி நீதிபதிகளின் தபால் முகவரியைப் பிரசுரித்தால் மேலும் குற்றச் செயல் கள் குறைய அது வழி வகுக்கும்.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதியாக இளஞ்செழியன் அவர்கள் இருந்து வேறு மாவட்டத்துக்கு மாற்றப் படலாம். இன்னும் பதவி உயர்வு பெற்றும் போகலாம். அதற்கு முன்பு யாழ்ப் பாணத்தில் குற்றச் செயல்களே இடம்பெறாது ஒழித்திட அவருக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.


*ஐ.சாந்தன்.*

## நடத்துநர்கள் பயணிகளுக்கு உதவ வேண்டும்

கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட குப்பிளான் தனியார் பஸ்ஸின் கடைசி இருக்கையில் 3 பெண்கள் மற்றும் இரண்டு பேர் வயது மக்கத்தக்க குழந்தைகள் இருவர் அமாந்திருந்தனர். அப்போது வயதான சுகவீனமான பெண் ஒருவர் தன்னால் நிற்க முடியவில்லை எனவும், அந்தச் சிறு குழந்தைகளை மடியில் இருத்தி விட்டு தனக்கு இருக்கை தருமாறும் கேட்டார். அதற்கு அந்த குழந்தையின் தாய் தான் சொகுசு வாகனத்தில் அமாந்திருப்பது போன்று அவரது வேண்டுகோளுக்கு மதிப்பளிக்காது இருந்தார். நடத்து நரும் இதைக் கண்டுகொள்ளவில்லை. 769 ஆம் இலக்க மாவிட்டபுரம் செல்லும் பஸ் அடிக்கடி சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. ஆனால் குப்பிளான் பஸ் மணிக்கு ஒரு தடவை மட்டுமே என்பதால் குப்பிளான் பஸ்ஸிற்கு மக்கள் மணிக் கணக்கில் காத்திருப்பது அனைவருக்கும் தெரிந்ததே. இருந்தும் மக்களின் நலன் கருதி இயக்கப்படும் தனி யார் பஸ் சேவையில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடத்துநர்கள் நடந்து கொள்வது ஏற்கத் தக்கதல்ல. சொகுசு பஸ்ஸில் செல்பவர்கள் போன்று செயற்படும் பயணிகளால் ஏனைய பயணிகளுக்கும் சிரமமே ஏற்படுகிறது.எனவே இதனைக் கருத்திற் கொண்டு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க நடத்துநர்கள் பயணிகளுக்கு உதவ வேண் டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்.

*எஸ்.சுதாசினி.மல்லாகம்*

## வாசகர் திருமுகம்



## இவர்கள் திருந்துவார்களா?

சென்றவாரம் இரவு 8.00 மணியளவில் பொருள்கள் சிலவற்றை வாங்குவதற்காக நானும் எனது சகோதரியும் கடையொன்றுக்குச் சென்றிருந்தோம். கடைக்குள் போகும்போது உயிர்போகும் அளவுக்கு புகையிலைப் புகையின் மணம். கடை உரிமையாளர் புகையிலை பாவித்துக்கொண்டிருந்தார். என்ன கடைக்குள் இருந்துகொண்டே புகையிலை பாவிக்கிறீர்களே என்று கேட்டபோது அருகில் இருந்த அவரது உறவினர் ஏன்? பாவித்தால் என்ன என்று பதில் அளித்தார்.


மேலும் இந்தக் கிராமத்தில், குடிக்காத போதைப்பொருள் பாவிக்காத ஒருவரைத் தனக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்துமாறும் அதன் பின்னர் புகையிலையைப் பாவிப்பதா வேண்டாமா என்று தாம் தீர்மானிப்பதாகவும் அவர் கூறினார். பதில் எதையும் சொல்லமுடியவில்லை. திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

இவர்கள் மரணத்தை தேடிச்சென்று கொண்டிருக்கிறார்கள். புகைத்துப் புகைத்து அவர்கள் தமது உயிரை மாய்த்துக் கொள்வது மட்டுமல்லாமல் புகை பிடிக்காத எம்மையும் அல்லவா இப்படி நாசம் செய்கிறார்கள். இவர்களைப் போன்றவர்களுக்கு பொது இடத்தில் புகைக்கக்கூடாது என்பதை யார் எடுத்துரைப்பது?

வாசகர் திருமுகம் மூலம் பல பிரச்சினைகள் வெளிச்சத்துக்கு வருவதை நான் உதயன் பத்திரிகையில் பார்வையிட்டேன். அதனாலேயே இதனை அனுப்பி வைக்கிறேன்.

*சமூக நலன்விரும்பி*

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## தமிழர் வாக்குகளைப் பங்குபோடக் காத்திருக்கும் தேசியக் கட்சிகள்

2004 ஆம் ஆண்டு ஆறாவது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. இந்தத் தேர்தலில், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அரசியல் பிரிவாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தனர். அந்தத் தேர்தலில், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் எந்தவொரு தேசியக் கட்சியையும் போட்டியிடுவதற்கு அனுமதித்திருக்கவில்லை. குறிப்பாக அந்தக் காலத்தில் தேசியக் கட்யொன்றான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினராக இருந்த, மகேஸ்வரன் கூட கொழும்பில் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதாக, மஹிந்த அரசு அறிவித்த பின்னர் 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. இதன் போது, ஈ.பி.டி.பி. தனது சொந்தக் கட்சிச் சின்னத்தை விடுத்து, தேசியக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஐக்கியமாகி, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தேசியக் கட்சியின் பெயரில் போட்டியிட்டது. 2004 ஆம் ஆண்டு தேர்தலில், தமிழர் தாயகத்திலிருந்து ஒதுங்கிச் சென்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், மக்களுக்கு அறிமுகமில்லாத பல கட்சிகளும் களம் கண்டிருந்தன. அதற்கு மேலாக, சுயேச்சைக் குழுக்களும் முளைத்திருந்தன. தமிழ் மக்களின் வாக்குகள் அந்தத் தேர்தலில் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 ஆசனங்களையும், தமிழரின் வாக்கில் தேசியக் கட்சிகள் 4 ஆசனங்களையும் கைப் பற்றிக் கொண்டிருந்தன. தமிழர் தரப்புக்களின் வாக்குப் பிரிப்புக்களால், தேசியக் கட்சிகள் வாய்ப்புக்களை இந்த மண்ணில் பெற்றுக் கொண்டன. இதே போன்றே வன்னித் தேர்தல் தொகுதியிலும் நடந்தேறியிருந்தது.

தேசியக் கட்சிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழர்களால் சாதிக்க முடிந்தது என்ன ? தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை மீறி அவர்களால் ஓர் அடி கூட எடுத்து வைக்க முடிந்திருந்ததா ? தமிழர் தாயகத் தில் நடந்தேறிய நில ஆக்கிரமிப்பை முறியடிக்க முடிந் ததா ? வலி.வடக்கில் 6 ஆயிரம் ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்ட போதும், அதனைச் சுவீகரித்த மஹிந்த அரசில், ஈ.பி.டி. பியினர் பங்காளிகளாகவே கூட இருந்தனர். ஏதாவது செய்ய முடிந்ததா ?

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இவர்களால் என்ன செய்ய முடிந்தது ? ஆட்சிமாற்றத்தின் பின்னரும், தேசி யக் கட்சிகளுடன் தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழர் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பேச்சு நடத்த வேண்டிய நிலை இருந்தது. தேசியக் கட்சியினுள் கலந்திருந்த, தமிழர் பிரதிநிதிகள் தமது பதவிகளை தக்க வைத்துக் கொள்வதிலேயே குறியாக இருந்தனர்.

ஆட்சியிலிருந்த தேசியக் கட்சியில் அமைச்சர்களாக பங்கு போட்டுக் கொண்டு இருந்த தமிழ் பிரதிநிதிகள், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டனரே தவிர, தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவும், அவரது அமைச்சர் பரிவாரங்களும் யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கும்போது, அவர்களுக்கு விருந்துபசாரம் கொடுத்து அனுசரணை செய்வதையே, தேசியக் கட்சியிலிருந்த தமிழ் உறுப்பினர்கள் தங்கள் தலையாய கடமையாகச் செய்து வந்தனர். இதனால், தங்களுக்கான வாய்ப்புக்களையும் - வசதிகளையும் தடையின்றி அவர்கள் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறான நிலையில், தற்போது நடப்புத் தேர்தலில் பலர் தேசியக் கட்சிகளுக்காக வாக்குச் சேகரிக்கும் நடவடிக்கைகளை தமிழர் தாயகப் பிரதேசத்திலும் முன்னெடுத்துள்ளனர். தமிழ் மக்களின் வாக்குகளைப் பங்குபோடுவதன் ஊடாக, இவர்கள் தமிழ் மக்களின் ஒற்றுமைக் குரலைச் சிதைப்பதற்கு கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றனர்.

தமிழ்க்கட்சி ஒன்று, சிங்கள மக்கள் வாழும் பிரதேசத்தில், சிங்கள வேட்பாளர்களை முன்னிறுத்தி போட்டியிட்டால், அந்த சிங்கள மக்கள் தமிழ்க் கட்சிக்கு வாக்களிப்பார்களா ? தமிழ் கட்சியினால் ஓர் ஆசனத்தை சிங்களப் பிரதேசத்தில் பெற முடியுமா ?

அதற்கான பதில் இல்லை என்பதாக இருக்கும்போது, தமிழர் பிரதேசத்தில் போட்டியிடும் தேசியக் கட்சி களுக்கு மாத்திரம் ஏன் தமிழ் மக்கள் வாக்க ளிக்க வேண்டும்.

வாக்குகளைச் சூறையாடக் களம் குதித்துள்ள தேசியக் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் தக்க பாடம் புகட்ட வேண்டும்.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தர்மிஷ்டம் போதிக்கும் போலி ஜனநாயகப் பிரகிருதிகள்

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கு வாழ் மக்களை மட்டுமன்றி, நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களையும் அச்சத்தின் பிடிக்குள் தள்ளிய வெள்ளை வான் யுகம் மீண்டும் முகிழ்த்துக் கிளம்பி உள்ளது.

ஆம்! இப்போது அது தலைநகர் கொழும்பில் தனது தலையை உயர்த்தி இருக்கிறது. கொழும்பு மாவட்டம் மிரிஹானப் பிரதேசத்தில், வெள்ளை வான் ஒன்றில் இராணுவத்தினர் மூவர், இரவு நேரத்தில், ஆயுதத்துடன், (துப்பாக்கியுடன்) பயணம் செய்த வேளை கைது செய்யப்பட்ட தகவல், பெரும் பரபரப்பையும் பீதியையும் உண்டாக்கி உள்ளது.

வடக்குக் - கிழக்கிலும், தலைநகர் கொழும்பிலும் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள், வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டுக் காணாமற்போன சம்பவங்கள் எண்ணுக் கணக்கு இல்லாமல் கச்சிதமாக நிறைவேற்றப்பட்டன.

ஆயினும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்த எந்த விவரமும் இதுவரையும் வெளிவரவில்லை; வெளிப்படுத்தப்படவும் இல்லை.

கொழும்பில் இப்போது இடம்பெற்ற சம்பவத்தில், மிரிஹான வெள்ளை வான் சம்பவம் தொடர்பான தகவல்கள் எதுவும் உத்தியோக பூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் முயற்சிக்கின்றனர் என்றும், அதற்கு (காபந்து) அரசு ஒத்துழைப்பை வழங்குகிறது என்ற தோற்றத்தை உருவாக்கி, தென்னிலங்கை மக்களிடம் வாக்குகளை வாங்குவதற்குமே, வெள்ளை வான் சிப்பாய்கள் குறித்த நாடகம் மேடையேற்றப்பட்டதாக சில தரப்புகள் பூசி மெழுகப் பார்க்கின்றன.

அதேவேளை, மிரிஹானயில் கண்டு பிடிக்கப்பட்ட வெள்ளை வான், புலிகளால் பயன்படுத்தப்பட்டதாகவும் அது இராணுவத்தினரால் முன்னர் கைப்பற்றப்பட்டது என்றும் பேசப்படுகிறது.

அத்தோடு, விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்களில் இதுவும் ஒன்று எனவும் அரச வட்டாரங்கள் கை காட்டுகின்றன.

இத்தனைக்கும், கைப்பற்றப்பட்ட வெள்ளை வான், இராணுவத்தினுடையதா ? அன்றி விடுதலைப் புலிகளுடையது தானா என்பது குறித்து --

முறைப்படி, ஒழிவு மறைவு எதுவும் இன்றி நேர்சீரான, பக்கம் சாராத விசாரணைகளை நடத்திய பின்னரே மர்மம் துலங்கும் என்ற நிலைப்பாட்டையும் புறக்கணித்துவிட முடியாதே !

இதில் என்ன வேடிக்கை எனில், வெள்ளை வான் விவகாரத்துக்கும் அரசியலுக்கும் - அரசியல்வாதிகளுக்கும் - எந்தவித தொடர்பும் இல்லை என்று காண்பிக்கவும், நிலைநாட்டவும், அக்கறை உள்ள தரப்புகள் முனைப்புடன் செயற்படுவதும் புலப்படுகிறது.


அதனூடு பல சந்தேகங்கள் மேலெழுவதைத் தடுக்க இயலாது. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல கோணங்களிலும் விரிவான விசாரணைகள் தேவை.


குறிப்பாகத் தமிழ் மக்களின் உயிர்களைத் துச்சம் என்றாக்கி, நடத்தப்பட்ட அட்டூழியம் விரிவாகப் பகிரங்கப்படுத்தப்பட்டு சம்மந்தப்பட்டவர்கள் தயவு தாட்சண்யம் இன்றித் தண்டிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லை எனில், இலங்கை அரசு -- ஆட்சியாளர்கள்-- இவ்வாறே அக்கிரமத்தையும் அட்டூழியத்தையும் சர்வ சாதாரணம் ஆக்கிக் கொண்டு, தர்மிஷ்டம் குறித்து உயர்த்தி உரைக்கும் போலி ஜனநாயகப் பிரகிருதிகள் என்ற அதர்மமே மிஞ்சும்...

# நாட்டில் தலைதூக்கியுள்ள பிரதமர் பதவிக்கான மோகம்



தேர்தலில் தோல்வியடைந்து அல்லது மஹிந்த பிரதமராகாது விட்டால் மீண்டும் இலங்கையில் இரத்தக்களரியை ஏற்படுத்துவதற்கான திட்டங்களும் வரையப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது.





வந்தியத்தேவர்

மஹிந்ததான் அடுத்த பிரதமர் எனச் சில அரசியல் வாதிகளும், கட்சிகளும் சும்மா அலட்டிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்குள் சிக்கிக்கொண்டு இருண்டு கிடக்கும் இந்த நாட்டின் எதிர்காலம் ஒரு புதிய சுபீட்சமான நிலைமைக்குத் திரும்பக் கூடியதாக நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பதைச் சிந்திக்கும் விதத்தில் எந்த ஓர் அரசியல்வாதியும் இல்லை. ஏதோ மஹிந்ததான் ஆளப்பிறந்தவராகவும் உயிரைக் கொடுத்தாவது அவரைப் பிரதமராக்குவோம் என்றும் சும்மா உழறிக் கொண்டு ஒரு சாராரும், மறுபக்கத்தில் வேறு சிலர் அவர் ஒரு குற்றவாளி அவரை ஆட்சியில் அமர விடமாட்டோம் நல்லாட்சியே நமது தேவை என்றும் கூறி ஏமாற்றிக் கொண்டிருப்பதும் சகஜமாகிவிட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இன்று வரை நாட்டை நேசிக்கும் ஒரு நேர்மையான தலைவர் மக்களுக்குக் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் கூட நேர்மையான தலைவர் உருவாகக்கூடிய சந்தர்ப்பம் இளந் தலைமுறையினரிடையே காணப்படவில்லை. அதற்கு அடித்தளமிடக் கூடியதான தகைமை கொண்ட மூத்த அரசியல்வாதிகள் எவரும் இன்று இல்லை. லஞ்சம், ஊழல், மோசடிகள் என்பனதான் அரசியல்வாதிகளாவதற்குரிய தகைமைகள் என்பதை இந்த அரசியல்வாதிகள் எதிர்காலத்துக்கும் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று ஒரு தகுதியான அரசியல்வாதி மஹிந்த மட்டுமே எனச் சித்திரித்துக் காட்டுவதில் பலர் ஈடுபட்டுள்ளனர். அவரது பதவிக்காலத்தில் வடக்கில் என்ன நடந்தது? அந்த மக்கள் எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள்? என்பவையெல்லாம் சர்வதேசமுமே தெரிந்து வைத்திருக்கும் விடயங்கள். வடக்குக்கு விடிவை ஏற்படுத்தியவர் மஹிந்த தான் என்கிறார் நிமால் சிறிபால டி சில்வா. வீதியை அகலமாக்கி அதனூடாக போதைப் பொருள் வர்த்தகம், கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்துபவர்கள், கல்வியைச் சீர்குலைக்கக் கூடியதான செயற்பாடுகள் இடம் பெறக் காரணமானவர்களைப் பார்த்து வடக்கில் விடிவை ஏற்படுத்துவதற்கு காரணமானவர்கள் என எப்படிக் கூறமுடியும்? நிமல் சிறி பால டி சில்வா விரும்பிய வடக்கின் விடிவும் இவைதான் போலும்.

தமிழ் மக்கள் தாம் விரும்பியவாறு வடக்கு மாகாண சபையைத் தெரிவு செய்தபோதிலும் காணி பொலிஸ் அதிகாரம்கூட இல்லாமல் பெயருக்கு ஒரு மாகாணசபையை உருவாக்கி தேர்தலையும் நடத்திவிட்டு அதற்குக் காரணமாக இருந்த வடக்கு மாகாண மக்களுக்கு அனைத்தையும் வழங்கியுள்ளோம் என்றால் அந்தச் சபையில் வடக்கு மக்களுக்குக் கிடைத்த நன்மைகள் என்ன என்பதை தினேஸ் குணவர்த்தனவால் கூறமுடியுமா?

தேர்தலில் தோல்வியடைந்து அல்லது மஹிந்த பிரதமராகாது விட்டால் மீண்டும் இலங்கையில் இரத்தக்களரியை ஏற்படுத்துவதற்கான திட்டங்களும் வரையப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது. மஹிந்த மீண்டும் அரசியலுக்குள் வருவதற்குச் சந்தர்ப்பம் வழங்கியதை எதிர்த்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் நாட்டில் இரத்தக் களரி ஏற்படும் என எச்சரித்திருந்தார். மஹிந்த பிரதமராகாவிடில் அரசியல் சுனாமி வெடிக்கும் என இப்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. அதையே நல்லாட்சி நீடித்தால் எலும்புக்கூடுதான் மிஞ்சும் எனக்கூறி மஹிந்த அங்கீகரித்துள்ளார் போலும். அதற்காக போலியான போர்க்குற்ற அறிக்கையையும் வெளியிட்டு சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த அனுதாபத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதாக அறியக்கிடக்கிறது. பிரதமர் பதவியைப் பெறுவதன் மூலம் மீண்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அவர் வருவார், மகாபோதி விகாரையின் ஆசீர்வாதமும் அவருக்கு உண்டு என சந்திரசேன கூறுகின்றார். அரசமைப்பின்படி பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தபோதிலும், மைத்திரியால விரும்பாவிடினும் மஹிந்தவை பிரதமராக்கியே தீருவோம் என் கிறார் ஜி.எல்.பீரிஸ்.

இப்போது மஹிந்தவைப் போன்று தாமும் ஆட்சியைப் பிடிக்கும் ஆசைக்கு பொதுபலசேனவின் கலகொட ஞானசார தேரரும் உட்பட்டுள்ளார்.அவர் தேர்தலில் தனது கட்சிக்கு மூன்று இடங்கள் கிடைத்தால் போதும் என ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். இப்போது ஆட்சியைக் கைப்பற்றிச் சிங்களவரின் உரிமைகளைக் காப்பாற்றப் போகிறாராம். ஓநாய்கள் அழத்தொடங்கியுள்ளன. ஒரு தகுதியான அரசைத் தேர்ந்தெடுக்க போதிமுனிவன் சிங்கள மக்களுக்கு அருள்பாலிப்பாராக.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்மை எங்கு அழைத்துச் செல்லும்?

இலைஜா ஹீல்

தமிழ்த் தேசிய அரசியலில் மாற்றம் வேண்டும்என்றுகூறிக்கொண்டு [illegible] குழு கிளர்ந்தெழுந்துள்ளது. தமிழர் அரசியலில் திருப்பங்கள், திருத்தங்கள் அவசியம் என்பது உண்மை.தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் எம்மை வலுப்படுத்துங்கள் என்று மக்களை வலிந்து கோருவதைக் காட்டிலும் தம்மைத்திருத்துவதில் அதிக நேரத்தைச் செலவழிக்க வேண்டும் என்பதேபொதுவானபெரும்பான்மைத் தமிழர்களது நிலைப்பாடு.

ஆனால், இந்தக் குறித்த குழு – குறிப்பாகக் கூறின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், அக் கட்சியின் புலம்பெயர் விழுதுகளும், உள்நாட்டு அப்புக்காத்துகளும் – வேண்டி நிற்கும் மாற்றம் என்ன? இவர்கள் உண்மையிலேயே புதிதாக எதையும் கூறி நிற்கின்றார்களா? இவர்கள் இந்த மாற்றத்தைக் கொண்டு வர என்ன திட்டத்தைக் கைவசம் வைத்துள்ளார்கள்? எல்லாவற்றுக்கும் மேலாக, இக் குழு வேண்டி நிற்கும் மாற்றம் எம்மை எங்கு கொண்டு செல்லும்? என்ற கேள்விகள் எம்மிடையே இன்று எழாமல் இல்லை.

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பின்புலம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிழையான வழிகளில் இட்டுச் செல்லும் சக்திகளை ஓரங்கட்டப் போவதாகக் கூறிக்கொண்டு 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் குதித்த கட்சியே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. இதன் உறுப்பினர்கள் கூட்டமைப்பின் சார்பில் 2004 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்றவர்கள். 2004 பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் மூன்று அதிக விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்றவர்களான செல்வராஜா கஜேந்திரன் (112,077), பத்மினி சிதம்பரநாதன் (68,240), கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (60,770) என்போரே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆரம்பகர்த்தாக்கள். ஆனால் இவர்களால் 2010 தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெறுமனே 6,362 வாக்குகளையே மொத்தமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

இதன் பின்னர் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்பவற்றை கொள்கை அடிப்படையில் புறக் கணிப்பதாகக் கூறிக் கொண்டு இந்த முன்னணி ஒதுங்கி விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்விரு தேர்தல்களிலும், 2010 பொதுத் தேர்தலிலும் பெற்ற வெற்றியிலும் பார்க்க மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. கள ஆதரவு நிலை இவ்வாறிருக்க தம்மை தமிழ்த் தேசியத் தொண்டர்களாக அடையாளம் காட்டிக் கொள்பவர்கள் – களத்திலும் சரி, புலத்திலும் சரி – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புறந்தள்ளி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவு [illegible]ட்டித் திரிவது அவர்கள் தமிழ் மக்களின் ஆணைக்கு அளிக்கும் மரியாதையையும், அவர்களது அரசியல் உள்நோக்கங்களையுமே கோடிட்டு நிற்கின்றது.

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சுய-முரண் நிலை அரசியல்**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ்த் தேசியத்தின் துரோகிகள் என்கிறார். அவர்களது முழுத் தேர்தல் பரப்புரையும் கூட்டமைப்பைத் துரோகியாக்கும், அந்த முத்திரையைக் குத்தும் முனைப்பிலேயே அமைந்துள்ளது.

கூட்டமைப்பை, அதன் தலைமையை துரோகிகள் என்று இனங்காட்ட பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன:

1)சிங்கக் கொடியை ஏற்றுக் கொண்டமை.

2) சிறீலங்காவின் சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொண்டமை.

3) 13ஆவது திருத்தத்தை இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக் கொண்டமை

4) ஆயுதப் போராட்டத்தை இழிவு படுத்தியமை.

என்னைப் பொறுத்தளவில்கூட சம்பந்தன் கொடியேந்தலைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், சிங்கக் கொடியேந்துபவன் எவனும் தமிழ்த் துரோகி, புலிக்கொடி ஏந்தும் அனைவரும் தமிழ்த் தியாகி என்ற எளிய சூத்திரம் வரலாற்றைக் கொச்சைப்படுத் துவதும், ஆபத்தானதுமாகும்.

அரச நிகழ்வொன்றில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவது அர்த்தமற்ற செயல் என்றால், சிங்கக் கொடி ஏந்துவதிலும் பெரிய பூதாகரமான அர்த்தம் இருப்பதாக எனக்குப்படவில்லை. வரலாறு முக்கியம், வரலாறு முக்கியம் என்று அடிக்கடி நினைவுபடுத்தும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது குடும்பக் கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் அரசியல் வரலாறு பற்றி மட்டும் தன்னிடம் பேச வேண்டாம் என்கிறார்.

ஜி.ஜி. பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் 50களில் அங்கத்துவம் வகித்தவராயிற்றே! தந்தை செல்வாவின் அரசியல் போக்கை கடுமையாகச் சாடியவராயிற்றே!

இந்த வருட சுதந்திர தின நினைவு நாளில் சம்பந்தனும், சுமந்திரனும் கலந்து கொண்டமை ஊதிப் பெருப்பிக்கப்பட்ட அரசியல் விவகாரங்களில் ஒன்று. அன்று மூட்டப்பட்ட நெருப்பில் இன்றுவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குளிர் காய்ந்து வருகின்றது. இத்தனை நாளாக சுதந்திர தின விழாவுக்குச் சென்றிராத, தமிழ்த் தரப்பு கலந்து கொள்ளக்கூடாது என்பதில் உறுதியாக இருந்து முன்னின்று உழைத்த, சம்பந்தனுக்குத் திடீரென ஏன் இவ்வருடம் அதில் கலந்து கொள்ளத் தோன்றியது? அவ்விதம் கலந்து கொள்வது எம்மாதிரியான பின் விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதும் அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும்.

உதாரணமாக, அவ்விழாவில் வாசிக்கப்பட்ட சமாதானத்துக்கான பிரகடனத்தில் பின்வரும் கருத்துக்கள் அடங்கியிருந்தன:


1) சமாதானமும், பாதுகாப்பும், ஜனநாயகம் மற்றும் குடியுரிமை என்பவற்றின் பயன்களும் நாட்டின் அனைவருக்கும் உரித்துடைமையாக வேண்டும் என்ற பிரேரணை.

2) நாட்டில் சுதந்திரத்துக்குப் பின்னர், குறிப்பாக 30 வருட கால போரின் விளைவாக இறந்த அனைத்து இன, மொழி, சமயங்களையும் சார்ந்தவர்களுக்குமான பொதுவான நினைவு கூரலும் மரியாதை செலுத்தலும்

3) அனைத்துக் குடிமக்களும் அனுபவிக்கும் வகையில் நல்லிணக்கம், நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றை நிலைநிறுத்தல், மேம்படுத்தல் என்ற உறுதி பூணல்

4) சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுப்பு மற்றும் இணக்கப்பாடு என்பவற்றுடன் கூடியதொரு பன்மைத்துவச் சமுதாயத்தை வளர்க்க வேண்டும் என்ற பிரதிக்ஞை

5) மீண்டுமொரு குருதி சிந்தல் நாட்டுக்கு வேண்டாம் என்ற உறு திப்பாடு என்பனவாகும்.



மேற்கண்ட கருத்துக்களுடன் உடன்படுவது தமிழினத் துரோகம் என்றால், உடன்படுபவர்கள் தமிழ்த் தேசியத் துரோகிகள் என்றால், இந்தத் துரோகி என்கிற பதம் குறித்த உரையாடலும், அதன் உள்–அர்த்தங்கள் தொடர்பிலான தியானமும் தமிழ் அரசியலுக்கு இன்றியமையாதவை.


**நிராகரிப்பு**

தமிழ்த் தேசிய முன்னணி 13ஆம் திருத்தச் சட்டம் ஒற்றையாட்சிக்கு உட்பட்டதொரு தீர்வென்ற அடிப்படையில் அதைப் பூரணமாக நிராகரிக்கின்றது. கடந்த வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாமல் தவிர்த்ததற்கு அந்தக்கட்சி வழங்கிய காரணமும் இதுவே. அப்படியென்றால் அதே ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்டு நடக்கும் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்தக்கட்சி போட்டியிடுவதன் காரணம் என்ன? போட்டியிடுவது இலங்கையின் அரசமைப்பை ஏற்றுக்கொள்வதாகப் பொருள்படுமா? வெறுமனே சர்வதேச சமூகத்தை நோக்கிச் சத்தம் போடுவதற்கு புதிய மேடையொன்றைத் தேடுகின்றார்கள் என்றால் இவர்களுக்குக் கிடைக்கும் நாடாளுமன்ற ஆசனங்கள் அனைத்தும் விழலுக்கு இறைக்கின்ற நீரே!

தமது அரசியலுக்கான தமிழரது ஜனநாயக ஆணையைத் தேடி இந்தத் தேர்தலில் குதிக்கின்றார்கள் என்றால் 2010இல் கொடுக்கப்பட்ட ஜனநாயக ஆணைக்கு இவர்கள் செய்த மரியாதை என்ன? மக்களின் ஜனநாயக வெளிப்பாட்டை ஏற்க மறுத்து, மக்கள் ஆணையைப் பெற்ற கட்சித் தலைமைகளை துரோகிகள் என்று தூற்றித்திரியும் இவர்களை என்னவென்பது?

இறுதியாக கூட்டமைப்பின் தலைமை, ஆயுதப்போராட்டத்தை கொச்சைப் படுத்துகின்றது என்ற பொய்க் குற்றச்சாட்டையும் பரவலாக விதைத்து வருகின்றனர் கஜேந்திரகுமாரின் தோழர்கள். முதலாவது, விடுதலைப் புலிகளின் கொள்கைகளோடு முரண்படுவது, ஏற்றுக் கொள்ள மறுப்பது ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகுமா? இதற்கு விடை ஆம் என்றால், அந்தக் குற்றத்தை கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இழைத்துக் கொண்டுதான் இருக்கின்றார். அவர் ஒரு நாடு இரு தேசம் என்று கூறும்போது விடுதலைப் புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கையைப் புறக்கணிக்கின்றார் அல்லவா? இரண்டாவது, உண்மையிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திப் பேசி வருகிறதா? இல்லை.

ஆங்கில ஊட கங்களுக்கு வழங்கப்பட்ட செவ்வி களை திரிபுபடுத்தி, அச் செவ்வி வழங்கப்பட்ட பின் புலத்தைப் பற்றிக் குறிப்பிடாமல், ஆங்காங்கே வசதிக்கேற்றாற் போல் காற்புள்ளி, முற்றுப் புள்ளியைச் சேர்த்து அதன் பால் நடத்தி வரும் ஒரு பொய்ப் பரப்புரையே இதுவாகும்! மூன்றாவது, புலிகள் இழைத்த தவறுகளைச் சுட்டிக் காட்டுவது.



**என்னதான் புதுசு?**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூட்டமைப்புக்கு எதிராக முன்வைக்கும் விமர்சனங்களில் பொதிந்திருக்கும் சில சுய–முரண்பாட்டு நிலைகளைச் சுட்டிக் காட்டியிருந்தேன். விமர்சனங்களைத் தாண்டி இவர்கள் முன்வைக்கும் தீர்வு குறித்த யோசனைகளின் சாத்தியத் தன்மையும் கேள்விக்குறியே! எதைச் செய்யலாம் என்ற கேள்விக்கு விடையாக பெரிதாக எதையும் அவர்கள் சொல்லவில்லை என்பதே உண்மை. எப்போதும் என்னவெல்லாம் செய்யத்தகாதவை என்பதில் பல விடயங்களை வைத்திருக்கின்றனர்.

எங்கு, எப்போது சர்வதேச நிகழ்ச்சி நிரலில் இருந்து இலங்கை அரசு விலகி நடக்கிறதோ, அங்கு அப்போது சர்வதேசம் தமிழரது பிரச்சினையைத் தூக்கிப் பிடித்து தமக்கு வேண்டியதைச் சாதித்து விடும். இது தான் கடந்த ஆறு ஆண்டு காலமும் நாம் கற்றுணர்ந்த பாடம். இந்த நாடு கடந்த தமிழர் வலையமைப்பை ஒரு பேச்சுக்கு எடுத்துக் கொண்டால்கூட, சர்வதேச நிகழ்ச்சி நிரலை தமிழர் தீர்மானிப்பதென்பது நடக்கப் போகும் விடயம் அல்ல 2013இல் தமிழ் நாடு முழுக்க சர்வதேச விசாரணை கோரி மாணவர் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோதே அன்றைய இந்திய அரசு அந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜெனிவாப் பிரேரணையின் கனத்தை தனது தலையீட்டினால் குறைத்திருந்தது. நீதிக்கான போராட்டத்தில் சர்வதேசப் பொறி முறைகளைப் பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை. செய்தே ஆக வேண்டும். ஆனால் அப் பொறி முறைகளின் பலம், பலவீனம், சர்வதேச சக்திப் பரம்பல் என்பவற்றை சரியாகப் புரிந்து கொண்டால் மாத்திரமே வீண் அதிருப்திகளை, ஏமாற்றங்களை பாதிக்கப்பட்ட தமிழர்கள் தவிர்க்க முடியும்.

பொன்னம்பலம் தரப்பினர் தீர்வு தொடர்பில் முன்வைக்கும் இரண்டாம் வழிமுறையையும், இவர்கள் கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழர்களிடம் விடுத்த கோரிக்கையையும் சேர்த்துப்பார்த்தால் இந்த முன்மொழிவின் உள்–அர்த்தம் புரியும். அதாவது, ஓர் இன வெறி கொண்ட சிங்கள அரசு தமிழ் மக்களை ஆயிரக் கணக்கில் கொன்றொழித்ததுடன்,இன்றும் அதே வெறித்தனப் போக்குடன் செயற் பட்டு வருகின்றது என்ற செய்தியை கொடுத்துக் கொண்டே இருந்தால் என்றாவது, யாராவது குறுக்கிட்டு ஏதாவது அரசியல் தீர்வைத் தருவார்கள் என்ற குருட்டுத் தனமான அரசியலே இவர்கள் சொல்லும் வழி!

**தமிழர் அரசியல் செல்ல வேண்டிய பாதை**

வாக்களித்த மக்கள் என்ற உரிமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்னரை, அதன் தலைவர்களை மக்கள் கேள்வி கேட்பது, விமர்சிப்பது, நியாயமானதும் முற்றிலும் அவசியமானதுமாகும். கேள்விகளும், விமர்சனங்களும் தவறுகளைத் திருத்தும் விதமாக இருக்க வேண்டுமே அல்லாமல் இன்னும் மோசமானதொரு நிலைக்குள் தமிழர்களை தள்ளும் விதமாக இருக்கக் கூடாது. உரிமைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய அரசியற் கட்சிகள் குறித்தும் அவதானமாக நடக்க வேண்டியது அவசியம்.

வெளிப்படையாகவும் தன்னலமின்றியும், மக்களோடு மக்களாக நின்று எமது மக்களது மீள் எழுச்சிக்கென பாடுபட வேண்டிய கட்டாயத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று நாடாளு மன்றத் தேர்தலைச் சந்திக்கின்றது. இது வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தனது கடனைச் செவ்வனே செய்திருக்கின்றதா என்றால் மேலும் பல படி முன்னேற இடமுண்டு என்பதே தீர்ப்பாக இருக்கும். உணர்ச்சி அரசியலை ஊக்குவிப்பது, இன்றும் தேர்தல் காலங்களில் வெற்று வாக்குறுதிகளை வழங்கி அரசியல் புரிவது என்பவற்றை விடுத்து, நிதானமாக தமிழரது பிரச்சினைகளை அறிந்து தீர்த்து வைக்கும் ஆளுமையுள்ள தலைமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற வேண்டும்.

கூட்டமைப்பினர் தமது தவறுகளில் இருந்து தம்மைத் திருத்தா விட்டால் என்றே ஒரு நாள் நிச்சயம் மாற்றுத் தலைமையின் அவசியம் உணரப்படும். ஆனால் அந்த மாற்றுத் தலைமை நிச்சயமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இல்லை. சுருக்கமாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் எம்மை எங்கு கொண்டு செல்லும் என்ற கேள்விக்கான பதில்: நல்ல பெரிய படுகுழிக்குள் என்பதேயாகும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | | | 7 | |
| | | 3 | | | | | 1 | 2 |
| | | | | | | | 6 | 5 |
| | | | 9 | 7 | | | | |
| | | | 6 | | 1 | 2 | | |
| | | | 1 | 5 | | 8 | | |
| 7 | 4 | | 3 | | | | | |
| | 9 | 8 | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 4 | 1 | 5 | 2 | 3 | 7 | 9 |
| 1 | 3 | 5 | 4 | 9 | 7 | 8 | 2 | 6 |
| 9 | 7 | 2 | 3 | 6 | 8 | 1 | 5 | 4 |
| 5 | 1 | 9 | 2 | 3 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 8 | 3 | 6 | 1 | 5 | 4 | 9 | 2 |
| 2 | 4 | 6 | 8 | 7 | 9 | 5 | 3 | 1 |
| 6 | 2 | 1 | 9 | 8 | 3 | 7 | 4 | 5 |
| 4 | 5 | 8 | 7 | 2 | 6 | 9 | 1 | 3 |
| 3 | 9 | 7 | 5 | 4 | 1 | 2 | 6 | 8 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



**பேராற்றல் உங்களுக்குள்ளேயே உண்டு**

கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம் ஆகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

அனைத்துத் தேவைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

உனது உடலில் விழுந்த ஒரு துளி மையைப் பற்றிக் கவலைப்படாதே! இறைவன் என்னும் கருணைக் கடலில் மூழ்கி எழுந்திரு, இது போன்ற ஆயிரம் துளிகள் இருப்பினும் அவை இருந்த இடம் தெரியாமல் போகும்.

**சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**


## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 600 | 600 | 600 |
| நண்டு | 250 | 500 | 400 | 300 | 250 | 400 |
| கணவாய் | 550 | 600 | 700 | 600 | 700 | 600 |
| பாரை | 600 | 600 | 600 | 700 | 500 | 400 |
| சுறா | 650 | 600 | 600 | 800 | – | 550 |
| சீலா | 300 | 500 | 500 | 500 | 500 | -- |
| விளை | 700 | 450 | 400 | 500 | – | 400 |
| சூரல் | 300 | 400 | 400 | 350 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 650 | 800 | – | 500 | – | 600 |
| ஒரா | 400 | 400 | 400 | 350 | – | – |
| திரளி | 250 | 250 | 220 | 120 | 200 | 300 |
| நகரை | 300 | 300 | 200 | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 200 | 200 | 100 | 150 | 100 |
| ஒட்டி | 250. | 300 | 250 | 200 | 300 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 350 | 150 |
| பாலை | 400 | 300 | 350 | 400 | 300 | – |
| வாளை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | – | – |

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 40 | 70 | 60–80 | 80 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 90 | 80 | 60–80 | 80 | 30 | 25–30 |
| கரட் | 140 | 140 | 140–300 | 120 | 160–180 | 300 | 200 | 180 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 50 | 80 | 45 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 100 | 80 | 80 | 100 | 80–90 |
| பாகல் | 120 | 140 | 140 | 120 | 120 | 160 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 | 120 | 120 | 80–90 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 80 | 100 | 100 | 80 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 120–160 | 120–160 | 160 | 140 | 150 | 100–110 | 120–130 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 20–30 | 60 | 15 –20 | 20–25 |
| தக்காளி | 140 | 120 | 120 · | 120 | 100–120 | 160 | 90 | 90–100 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 40–60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 200 | 300–350 | 280 | 360 | 400 | 500 | 250 |
| புடோல் | 50 | 40 | 40 | 40 | 60 | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80 | 80 | 100 | 60 |
| வெண்டி | 60 | 60 | 40 | 60 | 120 | 120 | 120 | 50 |
| போஞ்சி | 140 | 180 | 200 | 220 | 100–180 | 300 | 200 | 180 |
| லீக்ஸ் | 80 | 110 | 160 | 200 | 100–120 | 100 | 120 | 100 |
| தேங்காய் | 50 | 35–40 | 60 | 40–50 | 50–60 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 80–100 | 90 | 120 | 90–100 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 40 | 60–70 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30– 40 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 160 | 160 | 120 | 160 | 200–260 | 200 | 220 | 180 |
| இராசவள்ளி | 120 | 100 | – | 140 | 80–100 | – | 160 | 80–90 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 | 120 | 120–140 | 140 | 200 | 120 |

# பாலின் மருத்துவ குணங்கள்



உணவுப் பொருள்களிலேயே பால் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். பால்·சுவையுடன் இருப்பதோடு, சத்துக்கள் அதிகம் நிறைந்த உணவுப் பொருளும் கூட. வளரும் குழந்தைகளுக்கு கல்சியம் மிகவும் அவசியமான சத்துக்களில் ஒன்றாகும். மேலும் சிலருக்கு அடிக்கடி மூட்டு வலி ஏற்படும். அத்தகைய வலிகள் வருவதற்குக் காரணம் கல்சியக் குறைபாடுதான். ஆகவே எலும்புகள் நன்கு வலுவோடு இருப்பதற்கு, கல்சியம் அதிகம் நிறைந்த பாலை உணவில் அதிகளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பாலில் நல்ல தரமான புரதம், கொழுப்பு,சிறிய அளவில் மாவுச்சத்து, மக்னீசியம் போன்ற பலவிதமான சத்துக்களும் உள்ளன. ஏனைய பொருள்களில் இல்லாத சில சத்துக்கள் பாலில் உள்ளதால் நாம் அனைவரும் 500 மி.லி. அளவு பாலைக் கண்டிப்பாக தினசரி எடுத்துக் கொள்ளலாம். கொழுப்பு அதிகம் உள்ள பால் கிடைப்ப தால் நமக்குத் தேவையான அளவின்படி நாம் பாலை எடுத்துக் கொள்ள வேண்டும். பாலில் தண்ணீர் சேர்க்கக் கூடாது. பாலில் 70 வீதம் தண்ணீர் இருப்பதால் பாலில் தண்ணீர் கண்டிப்பாகச் சேர்க்க வேண்டாம். கொழுப்பைக் குறைக்க வேண்டும் என்றால், கொழுப்புக் குறைவாக உள்ள பாலைப் பயன்படுத்தவேண்டுமே தவிர தண்ணீர் ஊற்றிக் காய்ச்சக் கூடாது. சுண்ணாம்புச் சத்து பாலில் அதிகளவில் உள்ளது. குழந்தைகளுக்கும் இளம் பருவத்தினருக்கும் எலும்பு வளர்ச்சி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. மாதவிடாய் நின்று விட்ட பெண்கள் 500 மி.லி. வரைக்கும் பாலைக் கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். பற்களின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் பால் மிகமிக முக்கியமானது. இவை தவிர இரத்தக் கொதிப்புக் கட்டுப்பாட்டுக்கும், உடல் பருமன் குறைவதற்கும், இதயநோய், புற்றுநோய், நீரிழிவுநோய் உள்ள வர்களுக்கும் பால் சிறந்தது என்று ஆராய்ச்சி முடிவில் தெரிய வந்துள்ளது.

## நாளை

ஆடி—10

ஞாயிற்றுக்கிழமை

26.07.2015

**திதி: தசமி**

**மு.இ. 09.28 வரை**

**நட்சத்திரம்: விசாகம்**

**மு.ப.10.53 வரை**

**சுபநேரம்:**

09.02-10.32 வரை

**இராகுகாலம்:**

04.32-06.02 வரை

# பன்னிரண்டு இராசிகளுக்குமான கற்கள்

**மேடம் - பவளம்**
மேட இராசிக்காரர்கள் அணிய வேண்டியது, பவளம். இதை அணிவதால் தெய்வ கடாட்சம் கிடைக்கும். கோபம் தணியும், அதிர்ஷ்டம் உண்டாகும்.


**இடபம் - வைரம்**
இடப இராசிக்காரர்கள் அணிய வேண்டியது, வைரம். இதை அணிந்தால் மகிழ்ச்சியையும் யோகத்தையும் வசீகரத்தையும் கொடுக்கும்.

**மிதுனம் - மரகதம்**
மிதுன இராசிக்காரர்கள் அணிய வேண்டியது, மரகதம். இது செய்யும் தொழிலில் விருத்தியையும், அதிர்ஷ் டத்தையும் அளிக்க வல்லது.

**கடகம் - முத்து**
கடக ராசிக்காரர்கள் அணிய வேண்டியது, முத்து. இது அமைதியும், மகிழ்ச்சியும், செல்வ விருத்தியும் அளிக்க வல்லது.

**சிங்கம் - மாணிக்கம்**
சிங்க இராசிக்காரர்கள் அணிய வேண்டியது மாணிக்கம். இதை அணிந் தால் மிகுந்தஅதிர்ஷ்டசாலிகளாக மாறலாம்.





**கன்னி - மரகதம்**
கன்னி இராசிக்காரர்கள் அணிய வேண்டியது, மரகதம். இது செய்யும் தொழிலில் விருத்தியையும் அதிர்ஷ்டத்தையும் அளிக்க வல்லது.

**துலாம் - வைரம்**
தும் இராசிக்காரர்கள் அணியவேண்டியது, வைரம். இதை அணிந்தால் மகிழ்ச்சியையும், யோகத்தையும், வசீகரத்தையும் கொடுக்கும்.

**விருச்சிகம் பவளம்**
விருச்சிக இராசிக்காரர்கள் அணிய வேண்டியது, பவளம். இதை அணிந்தால் தெய்வ கடாட்சம் கிடைக்கும். கோபம் தணியும், அதிர்ஷ்டம் உண்டாகும்.

**தனுசு - கனக புஷ்பராகம்:**
தனுசு இராசிக்காரர்கள் அணிய வேண்டியது, கனக புஷ்ப ராகம். இந்தக் கல் பார்ப்பதற்கு மஞ்சள் நிறமாக இருக்கும். இது மன அமைதியையும் செல்வ விருத்தியையும் கொடுக்கும்.

**மகரம் - நீலக்கல்**
மகர ராசிக்காரர்கள் அணிய வேண்டியது, நீலக்கல். இது செல்வவிருத்தியையும், செல்வாக்கையும், தெய்வீகத் தன்மையையும் கொடுக்க வல்லது

**கும்பம் - நீலக்கல்**
கும்ப ராசிக்காரர்கள் அணிய வேண்டியது, நீலக்கல். இது செல்வ விருத்தியையும், செல்வாக்கையும், தெய்வீகத் தன்மையையும் கொடுக்க வல்லது

**மீனம் - கனக புஷ்பராகம்**
மீன ராசிக்காரர்கள் அணிய வேண்டியது, கனக புஷ்ப ராகம். இந்தக் கல் பார்ப்பதற்கு மஞ்சள் நிறமாக இருக்கும். இது மன அமைதியையும், செல்வ விருத்தியையும் கொடுக்கும்.

# பெண் மனது என்னவென்று புரியவில்லையே...

சோபனா

தாய் எனும் பெண்ணிலிருந்து பிறந்து அவளிடம் பாலருந்தி, அவளது பராமரிப்பிலேயே வளர்ந்து வருகின்றான் ஓர் ஆண் மகன். அதே பெண்ணின் வயிற்றிலே பிறந்து தன்னைப்போலவே வளரும் பெண் குழந்தையான தனது சகோதரியுடன் சேர்ந்து ஒரே வீட்டில் ஒரேசூழலில் ஒன்றாக வளருகின்றான். ஆனால் இளம்பருவத்தை எட்டியதும் அவனிடத்தில் பெண்கள் பற்றிய ஏளனமான கருத்துக்களும், வக்கிரமான சிந்தனைகளும் எப்படித் தலைதூக்குகின்றன..?
பாலியல் தேவைகளுக்காக பெண்கள் மீது ஈர்ப்பு ஏற்படுவதை ஓர் இயற்கையான உணர்வாக ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால் அதையும் மீறி பெண்கள் மீதான மரியாதையற்ற அவனது எண்ணங்களையும் நடத்தைகளையும் நாம் எவ்வாறு புரிந்துகொள்வது?
எமது சமூகத்திலே தனது வயதையுடைய ஒரு பெண், தன்னைவிடப் புத்திசாலியாகவோ திறமைசாலியாகவோ இருப்பதை விரும்பாத அல்லது சகித்துக்கொள்ள முடியாத போக்கு ஆரம்பப் பாடசாலைப் பருவத்திலிருந்தே ஆண்பிள்ளைகளிடம் காணப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக பதின்ம வயதை அடைந்ததும் ஒரு பெண்பிள்ளை பாடங்களிலோ அல்லது பாடசாலைச் செயன் முறைகளிலோ ஆண் பிள்ளைகளுக்குச் சமமாகவோ அல்லது ஆண்களை விடத் திறமையாகவோ செயற்பட்டால் அதை எவ்வாறு எடுத்துக் கொள்ளுவார்கள்?
ஒன் றில் முயன்று படித்துப் அவளை முந்துவதற்கு நினைப்பான். முடியாதவிடத்து நேர்மையீனமான வழிமுறைகளைக் கையாண்டு அவளை வீழ்த்துவதற்கு நினைப்பான். இரண்டும் முடியாதவிடத்து அவள் திறமை காட்டும் துறையை மலினமாகச் சித்திரித்து அவளது சுயதிருப்தியை இல்லாதொழிக்க முயற்சிப்பான்.
இதுவே, வளர்ந்து ஒரு பெண் உயர்பதவிக்கு வந்து விட் டாளென்றால் அவளைச் சக ஆண்கள் எப்படி எடுத்துக் கொள்கின்றார்கள்?
ஒன்றில் அவளை மானசீகமாக வெறுப்பார்கள். அல் லது அவளது பெண் என்ற பால்நிலை வேறுபாட்டை ஒரு பலவீனமாக எடுத்துக்காண் பிக்கும் விதமாக அவளைச் சுயமாக இயங்க விடாது மிகை உதவிகளைப்புரிய முற்படு வார்கள்.
உதாரணத்துக்கு ஒரு பாடசாலைக்கு அதிபராக சகல தகைமைகளுடனும் ஒரு பெண் நியமிக்கப்படும்போது, அங்கு கடமை புரிகின்ற பெரும்பான்மையான ஆண் ஆசிரியர்கள் அவளைத் தமது மேலதிகாரியாக ஏற்றுக் கொள்வதற்கு உள்ளூர விரும்புவதில்லை. அவர்கள் ஒரு பெண்ணின் கீழே இயங்குகின்றோமே என்ற ஆற்றாமையோடு வெதும்பிக் கொண் டிருப்பார்கள்.
அல்லது நீங்கள் பெண் என்பதால் உங்களால் எல்லா வற்றையும் செய்ய இயலாது. ஆகவே நாங்கள் உங்க ளுக்கு ஒத்தாசை புரிகின்றோம் என்று உதவுவார்கள். உதவிபுரிவது நல்ல விடயம்தான் என்றாலும், அந்த உதவிகளுக்குள்ளேயே இருக்கும் மறைமுகமான செய்தி முக்கியமானது. அதாவது ஒரு தகைமையுள்ள பெண்ணைக்கூட அவளது பலவீனங்களை வைத்து வீழ்த்துவதிலே ஆண்களுக்குள்ள குரூர திருப்தியைத்தான் அந்த உதவி கள் வேறுவிதமாக நிறைவேற்றுகின்றன.
தமது வாழ்விலே தாய், சகோதரி, தாரம், மகள், மருமகள், பேத்தி என்று ஓர் ஆணுக்கு வாழ்நாள் முழுவதும் பெண் உறவுகள் அடுத்தடுத்து கிடைத்து வந்தும் கூட பெண்ணைச் சமமாகக் கருதுவதற்கு ஆண்கள் ஏன் முன்வருவது கிடையாது...? ஏன் பெண்களைக் கடவுள்களாகப் போற்றுகின்றார்களே? காதலி என்று கொஞ்சுகின்றார்களே? மனைவி என்று மாய்கின்றார்களே? தாயிற் சிறந்த கோவிலுமில்லை? தாயின் பாதங்களின் கீழேதான் சொர்க்கம் உள்ளது, தாயே மனிதனின் கண்கண்ட தெய்வம் என்றெல்லாம் புகழாரம் சூட்டியிருப்பதெல்லாம் ஆணாதிக்கமுள்ள இந்தச் சமூகம்தானே? என்றெல்லாம் நீங்கள் சிந்திப்பீர்கள்? கேட்பீர்கள்...?
அவற்றை மறுக்கவில்லை! ஆனால் அதற்காக மகிழ்ச்சியடையவும் முடியவில்லை. ஏனெனில் அது ஆண்வர்க்கத்தினரின் ஒரு விதமான ஏமாற்று அல்லது தப்பித்தல் நடவடிக்கையாகும். அதாவது நீங்கள் பெண்களை ஒரேயடியாக உயர்த்திக் கடவுளாக்குவதும் எதிர்மறையாக, ஆண்களை மயக்கி மோசம்செய்ய வந்த பிசாசுகள் என்று வசைபாடுவதும் ஏறத்தாழ ஒன்றுதான். ஆம்! இந்த இரண்டு செயல்களினாலும் பெண்களுக்குச் சமூகத்திலே கிடைக்க வேண்டிய நியாயமான சம அந்தஸ்தை அல்லவா மறுக்கின்றீர்கள்.
ஒருவன் தனது மனைவியைச் சமமாக எண்ணாமல் போகப்பொருளாக நினைத்து அவளைக் கொண்டாடுவத னால் அவளுக்குரிய சம முக்கியத்துவம் கிடைத்து விடுவதில்லை.

> இளம்பருவத்தை எட்டியதும் அவனிடத்தில் பெண்கள் பற்றிய ஏளனமான கருத்துக்களும் வக்கிரமான சிந்தனைகளும் எப்படித் தலை தூக்குகின்றன..?




(தொடரும்)




# முட்டாளும் புத்திசாலியும்

ஓயாத மழையினால் அந்த ஏரி நிறைந்து வழிந்தது. அதனால் அந்த ஏரியின் நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும், சற்றுத் தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றுக்குள் குதித்தது.

அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த மற்றொரு தவளை அந்தப் புதிய தவளையை வரவேற்றது. நான் வெகுநாள்களாகப் பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டது எனக்கு மகிழ்ச்சி எனக் கூறிப் பொந்தில் வைத்திருந்த உணவுவகைகளைப் புதிய தவளைக்குக் கொடுத்தது.



இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த ஏனைய தவளைகளுக்குப் புதிய தவளையின் வருகை பிடிக்கவில்லை. இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு எனக் கவலைப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்தி விடுவதென முடிவு செய்தன. இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அந்தக் கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்? எனக் கேட்டது.

நான் ஏரியில் தங்கி இருந்தேன் என்றது ஏரித் தவளை.

ஏரியா? அப்படியென்றால் என்ன? எனக் கேட்டது கிணற்றுத் தவளை. இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உள்ளன என்றது ஏரித் தவளை. இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரி னங்களா? என்று கேட்டது கிணற்றுத் தவளை.

இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி என்றது ஏரித் தவளை.

கிணற்றுத் தவளை நம்பவில்லை. நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்தக் கிணற்றை விட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்க முடியாது என்றது. ஏரித் தவளை எவ் வளவோ எடுத்துச் சொல்லியும், கிணற்றுத் தவளை அதை நம்பவில்லை. கூட இருந்த ஏனைய தவளைகளும் நம்பவில்லை.

எல்லாத் தவளைகளும் ஏரித் தவளையைப் பார்த்து நீ பொய்யன், புரட்டன், உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து என்று கூறி ஏரித் தவளையைத் தாக்க முயன்றன.

அப்போது, கிணற்றிலிருந்து நீர் எடுக்க வந்த ஒரு பெண் வாளியை இறக்கிய போது, அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை, வாளித் தண்ணீருடன் மேலே சென்றது. தாவிக் குதித்து ஏரியை நோக்கிச் சென்றது. முட்டாள்களிடம் வாதாடுவதை விட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.

# விதியை மாற்றியமை

ஒரு முறை ஜப்பானிய ராஜா எதிரிகளைத் தாக்குவதற்கென இராணுவப் படை ஒன்றைத் தயார் செய்து, போருக்குத் தயாரானார். எப்படியும் இந்தப் போரில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் அவர் இருந்தார். ஆனால் அந்தப் படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந் தனர். இதனால் அந்த ராஜா தனது படை வீரர்களுக்குத் தைரிய மூட்ட என்ன செய்யலாம் என்று ஒரு ஜென் துறவியிடம், கேட்கச் சென்றார். அந்தத் துறவி ராஜாவிடம் ஒரு யோசனையைச் சொன்னார். அதே போன்று ராஜாவும் செய்தார். அது என்னவென்றால், அந்த ராஜா போருக்குச் செல்லும் வழியில், வீரர்களைக் குல தெய்வத்தின் கோவிலில் நிறுத்திப் பிரார்த்தனை செய்து, ஒரு நாணயத்தை எடுத்து அவர்கள் முன்னிலையில் “நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன், தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம், இல்லையேல் போரில்தோற்போம்” என்று துறவி சொல்லிக் கொடுத்தவாறு சொன்னார். பின்னர் அவர்களிடம் நமது தலை விதியை இந்த நாணயம் சொல்லும் என்று கூறி நாணயத்தைச் சுழற்றினார். அனைவரும் அதைக் கூர்ந்து கவனித்தனர். அப்போது தலை விழுந்தது. அதனால்







அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளைத் தாக்கி வெற்றி பெற்றனர். போருக்குப் பின்னர், துணை மந்திரி விதியை எவராலும் மாற்ற முடியாது என்று ராஜாவிடம் சொல்ல ஆம், என்ற ராஜா, அந்த நாண யத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதைக் காண்பித்தார். நம்பிக்கையுடன் செயல்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம் என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

# பதுளை

பதுளை இலங்கையின் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு மாநகரமாகும். இது பதுளை மாவட்டத்தினதும் ஊவா மாகாணத்தினதும் தலை நகரமுமாகும். பதுளை கண்டிக்குத் தென் கிழக்கில் அமைந்துள்ளது. இலங்கை ரயில்வே வலையமைப்பின் கொழும்பு– பேராதனை– பதுளை பாதையின் கடைசி ரயில் நிலையமான பதுளை, ஹாலிஎல ரயில் நிலை யத்துக்கு அடுத்ததாக அமைந்துள்ளது. பொடி மெனிகே, உடரட மெனிகே என்ற பெயர்களை யுடைய ரயில்களில் இந்த நகரைச் சென் றடையலாம். பதுளை மத்திய மலைநாடு என அழைக்கப்படும் இலங்கையின் புவியியல் பிரிவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் சுமார் 680 மீற்றர் உயரத்தில் காணப் படுகிறது. இங்கு வருடாந்த சராசரி வெப்பநிலை 23 பாகை செல்சியஸ் ஆகும். பெரும்பாலான மழை



வீழ்ச்சி தென்மேற்கு பருவக்காற்று மூலம் கிடைக்கிறது.இது சிங்களவரைப் பெரும்பான்மையாக கொண்ட ஒரு மாவட்டம் ஆகும். இங்குள்ள மக்களில் பெரும்பான்மையினர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களாவர். இங்கு மரக்கறிச் செய்கை முக்கிய இடத்தை வகிக்கிறது. மேலும் தேயிலைப் பெருந்தோட்டங்களும் காணப்படுகின்றன.





**18.07.2015ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் திருத்தம்**

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)**
**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி**
**(சுற்றுலாத்துறை அபிவிருத்தி)**

**01.கீரிமலைக் கேணியின் (ஆண்கள்)படிக்கட்டுகள் ஒப்பந்த இல:-NP/14/41(14)/05/PSDG/01/2015 மற்றும் சுற்றுப்புறம் சீரசெய்தல்**
**02.மலசலகூடம் அமைத்தலும் குடிநீர் வசதி ஒப்பந்த இல:-NP/14/41(14)/05/PSDG/02/2015 ஏற்படுத்தலும் - கீரிமலை**

**மேற்படி கேள்வி அறிவித்தலின் 6,7,8ஆம் பகுதிகள் பின்வருமாறு திருத்தியமைக்கப் படுகின்றன.**

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி:- 0212222654, தொலைநகல்:- 0212223410) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய அலுவலகத்தில் வேலை நாள்களில் 07.08.2015வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** அலுவலகத்திலிருந்து 25.07.2015ஆம் திகதி தொடக்கம் 07.08.2015ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1500.00 செலுத்தி அலுவலக வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 07.08.2015ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)
25.07.2015.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2015

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 27.07.2015 - 10.08.2015 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணி வரை படிவங்கள் விநியோகிக்கப்படும். 11.08.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.30 மணிவரை கேள்விப்படிவங்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | : 565/= (வற் வரி, தே.க.வரி உள்ளடங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | : 27.07.2015 - 10.08.2015 பிற்பகல் 03.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | : 11.08.2015 முற்பகல் 09.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் | : 11.08.2015 முற்பகல் 10.00 மணிக்கு. |

| | |
|---|---|
| ✱ துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கான மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | - 10 000/= |
| ✱ ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | - 2 000/= |
| ✱ உற்சவகால ஒலிபெருக்கி விளம்பர சேவைக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | - 10 000/= |
| ✱ விளம்பர பதாகைகள் (வீதிக்கடைகள் ) காட்சிப்படுத்தல் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணம் | - 10 000/= |

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு இந்த அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 11.08.2015 முற்பகல் 09.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர் கேள்வித்தொகையினை 14.08.2015 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

**குறிப்பு**

1) கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடத்தவும் விளம்பரங்கள் , விளம்பரப்பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதையும் அறியத்தருகிறேன்.
2) கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாண மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
3) ஆகக்கூடிய தொகையாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 5/= உம் மோட்டார் வண்டிக்கு ரூபா 10/= உம் மட்டுமே அறவிடப்பட வேண்டும். தலைக்கவசத்திற்கு பணம் அறவிடப்படலாகாது.
4) உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5) நல்லூர் உற்சவ கால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**
**24.07.2015**

Sri Lanka Insurance
Like a father · Like a mother

## ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் பெருமையுடன் நடத்தும்



### வடமாகாண நிதி நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்கிடையிலான சினேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

இடம்:
யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம்
காலம்:
26.07.2015
காலை 9.00 மணி தொடக்கம்

பங்குபற்றும் பின்வரும் அணிகளுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| 1. Bank of Ceylon | 7. Nation Trust Bank |
| 2. Seylan Bank | 8. Hatton National Bank |
| 3. National Savings Bank | 9. Sengadakala Finance |
| 4. DFCC Bank | 10. Trade Finance |
| 5. People's Leasing | 11. Central Finance |
| 6. Sampath Bank | 12. S.L.I.C |

அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ்
வடபிராந்தியம்.
021 2222023

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
**சின்னத்தங்கம் ஆறுமுகம்**
(நயினாதீவு)



அன்னை மடியில்
14.04.1920

அம்பிகை அடியில்
25.06.2015

ஈரைந்து மாதங்கள் எம்மைத் தன் மடிசுமந்து
பாரில் எமை ஈன்று பகல் இரவாய் விழித்திருந்து – தன்
இரத்தத்தைப் பாலாக எமக்கு ஊட்டி வளர்த்தவளை
எப்பிறப்பில் காண்போம் நாம் இன்னொருகால் இப்புவியில்.
"இறந்தால் மீண்டும்பிறந்தால் இடம்தா உன்தன் மடி மீது
இருந்தால் உன்தன் மகவாய் இருக்கும் வரந்தான் வேண்டும் புவிமீது."

கடந்த 25.06.2015 வியாழக்கிழமை சுவிஸ் நாட்டில் இறைபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு திருமதி சின்னத்தங்கம் ஆறுமுகம் அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.07.2015) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் நயினாதீவு கங்காதரணி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் முற்பகல் 10.00 மணிக்கு நயினாதீவில் உள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். இவ் இரு நிகழ்விலும் வருகைதந்து பங்குபற்றி தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியோருக்கும் தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர்களுக்கும் மற்றும் பல வகையிலும் வேண்டிய உதவி புரிந்து ஆறுதல் அளித்தோர்களுக்கும் எமது நயினாதீவு இல்லத்தில் இன்று நடைபெறும் 31ஆம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத்தெரிவிப்பதில் மன நிறைவடைகின்றோம்.

**அன்னையாய் நின்று அனைத்துமே தந்து தன்னையே உருக்கிய தாயடி சரணம்**


6ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(63347)

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை கிருபானந்தசிவம்



கே.கே.எஸ். வீதி, இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறண்ரோவை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கிருபானந்தசிவம் 18.07.2015 சனிக் கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் மார்க்கண்டு காலஞ் சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரியின் (ரஞ்சனா) அன்புக் கணவரும், கஜீபன், கீர்த்திபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்த பவானி, சதானந்த பவானி, உருத்திராணந்தசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, உமாமகேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி, சபாரத்தினநாயகி ஆகியோரின் பெறாமகனும், மனோகரன் சிவதர்சினி, தெய்வதர்சினி, சுகுணா, சோதிபாலன், சோதீஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சாந்தினி, சிவஞானம், சிவப்பிரமம், சிவசூரியன், சிவதாசன், சிவாணந்தன், சிவமலர், சிவசரணம், சிவசோதி ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கவிதா யசோகாந்தன்
(மருமகள்)

கே.கே.எஸ். வீதி,
இணுவில் மேற்கு.

(63264) (10.6)

# தமிழ்க் கூட்டமைப்பு பரப்புரை கூட்டம் மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான முதலாவது பரப்புரைக் கூட்டமும், தேர்தல் விஞ்ஞாபன வெளியீடும் இன்று பி.ப. 3 மணிக்கு மருதனார்மடத்தில் இடம்பெறவுள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் திருகோணமலை நகரில் நேற்று நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக, இன்று மருதனார்மடத்திலும், நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறையிலும் பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இன்று பி.ப. 3 மணிக்கு மருதனார்மடத்தில் இடம்பெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அங்கத்துவக் கட்சித் தலைவர்களான மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமசந்திரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கெடுக்கவுள்ளனர். அத்துடன் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகமும் இடம்பெறவுள்ளது.

மேலும், இந்தக் கூட்டத்தில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

(ற-5)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் புதிய நிர்வாக சபை

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தில் 18.07.2015 சனிக்கிழமை நடைபெற்ற மஹாசபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள்.

தலைவர் : சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
உ.ப தலைவர்கள் : சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள்
செயலாளர்: சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்தக் குருக்கள்
உ.ப செயலாளர் : பிரம்மஸ்ரீ சோ.கேதீஸ்வர சர்மா
பொருளாளர் : பிரம்மஸ்ரீ ஜெ.மயூரன் சர்மா
நிர்வாக சபையினர் :

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ ப.சனாதன சர்மா | பிரம்மஸ்ரீ ஜெயந்திநாத சர்மா |
| சிவஸ்ரீ சோ.கிரிதரக் குருக்கள் | சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் |
| சிவஸ்ரீ வா.கைலாசராஜுக் குருக்கள் | சிவஸ்ரீ பிரபாகரக் குருக்கள் |
| சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் | சிவஸ்ரீ இ. விக்னேஸ்வரக் குருக்கள் |
| சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் | பிரம்மஸ்ரீ கபில்தேவ சர்மா |

செயலாளர்,
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

(63350) (10.6)

# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
# விலைக் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கீழ்க் குறிப்பிடப்படும் வீதிகள் புனரமைப்பு வேலைகளுக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 28.07.2015 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை அலுவலக நேரங்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 222 2427) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 28.07.2015 முதல் 06.08.2015 வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா.1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. குறியீடு செய்து பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 07.08.2015 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ மூலப்பிரதி தனியாகவும், நகல் தனியாகவும் இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 07.08.2015 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.

06. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித்தீர்மானத்துக்கு அமைவானதாகும்.
07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும். திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு 120 நாள்கள் இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்..

| கேள்வி இல. | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான இக்ராட் தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| JF/DPS/Road/ VE/01/2015 | புதிய செம்மணி வீதி புனரமைப்பு | 2.44 | 3 | C8 | 24,400.00 |
| JF/DPS/Road/ VE/02/2015 | வாதரவத்தை வீரவாணி இணைப்பு வீதி. | 8.26 | 3 | C7 | 82,600.00 |
| JF/DPS/Road/ VE/03/2015 | குடியேற்றத்திட்ட வீதி, செல்வநாயகபுரம், அச்சுவேலி. | 4.12 | 3 | C8 | 41,200.00 |
| JF/DPS/Road/ VE/04/2015 | விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு. | 4.66 | 3 | C8 | 46,600.00 |
| JF/DPS/Road/ VE/05/2015 | செட்டிசீமா வீதி,பத்தமேனி, அச்சுவேலி. | 4.72 | 3 | C8 | 47,500.00 |
| JF/DPS/Road/ VE/06/2015 | செல்லத்துரை வீதி, இருபாலை. | 1.45 | 3 | C9 | 14,500.00 |
| JF/DPS/Road/ VE/07/2015 | அரசடி வீதி, இருபாலை. | 4.16 | 3 | C8 | 41,600.00 |
| JF/DPS/Road/ VE/08/2015 | பன்னாலை 2ஆம் வீதி, சிறுப்பிட்டி. | 5.52 | 3 | C7 | 55,500.00 |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.


## சப்ளையர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் தேநீரகத்திற்கு சப்ளையர் தேவை.
தொடர்பு :077 137 8970

## வேலையாள் தேவை

நெல்லியடியில் மா, தூள் அரைக்கும் மில்லுக்கு வேலை தெரிந்தவர் அல்லது பழக விரும்புபவர் உடன் தேவை.
தொடர்பு :077 936 1356

## வாடகைக்கு

நல்லூர் பகுதியில் அரசபணி புரியும் பெண் களுக்கு அறை வாடகைக்குண்டு. சமையல் அறை வசதி உண்டு இருவர் ஒரு அறையில் தங்கலாம். (ஒருவருக்கு வாடகை 5000/=, முற்பணம் 50000/=)
தொடர்பு :078 521 0573

## விற்பனைக்கு

மிற்சுபிசி LF படி (பெட்டியுடன்) விற்பனைக்கு உண்டு. (லீசிங் வசதிகளும் ஒழுங்கு செய்து தரப்படும்)
தொடர்பு :077 623 7956

## தேவை

நல்லூர் பகுதியில் பகல் வேளையில் பெண் ஒருவருக்கு துணையாக நிற்பதற்கு பெண் ஒருவர் தேவை. சனி, ஞாயிறு ஓய்வாகும். (பராமரிக்கத்தேவையில்லை)
தொடர்பு :078 521 0573

## பசுக்கள் விற்பனைக்கு

A.T.S பாற் பண்ணையில் இருந்து நல்ல இனப் பசுக்கள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு:- 075 264 2824

## தேவை

யாழ் நகரில் உள்ள பலசரக்குக் கடைக்கு முன் அனுபவம் உள்ள
1) சிட்டை எழுதுநர் - ஆண்
2) விற்பனையாளர் - ஆண்
தேவை.
தொடர்பு : 077 544 4014

## மணமகன் தேவை

இந்து குடும்பத்தை சேர்ந்த 32 வயதுடைய தாரம் இழந்த இரண்டு பிள்ளைகளுடன் கூடிய பெண் ஒருவருக்கு மணமகன் தேவை. தாரம் இழந்த மணமகன் விரும்பத்தக்கது.
தொடர்பு :076 864 7542


சிவமயம்

## நியந்தீர் நடத்தும் கௌரவிப்பு விழாவும் நூல்களின் வெளியீடும்

காலம் : 25.07.2015 சனிக்கிழமை
நேரம் : பி.ப 3.00 மணி
இடம் : நல்லூர் சிவன் கோயில் மண்டபம்
தலைமை : வாழ்நாள் பேராசிரியர், இலக்கிய கலாநிதி கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்

கௌரவ விருந்தினர்
ஸ்ரீமான் ஆ.நடராஜன்
இந்திய துணைத்தூதுவர், யாழ்ப்பாணம்.

இந்நிகழ்வுகளில் அனைவரும் பங்கு கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயில்,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம்,
நல்லூர் சிவன்கோயில்,
நியந்தீர், பேராசிரியர்
பிரம்மஸ்ரீ கைலாசநாதக்
குருக்கள் குரபகாந்த சபை.

(63344) (10.6)

KVS கவிஷா விஷ்மி சப்ளையர்

சிவப்பு கிறவல் - தரம் 1

மண்

கல் : 6x9,3x3,1x1½

A,B,C

தொடர்பு :

077 625 8995

077 174 8995

தொடர்பாளர் : அனுர

## தூதுவர்கள் ஐவர் நியமனம்

கொழும்பு, ஜூலை 24

வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்கள் ஐவர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பிரான்ஸ், குவைத், சீசெல்ஸ் ஆகிய நாடுகளுக்கான தூதுவர்களே நியமிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது. (த)


## நேர்முகத்தேர்வு

முன்னணி ஆடைத் தொழிற்சாலையின் தொழில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு யாழ் மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனைமுன்னிட்டு காலை 9 மணிமுதல் பி.ப 2 மணிவரை நேர்முகத்தேர்வு நடத்தப்படவுள்ளது.

தையலாளர், இயந்திர இயக்குநர் போன்ற வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் குறைந்தது 5 பாடங்களில்சித்திபெற்றிருக்க வேண்டும் என்றும் தகுதியுடையவர்கள் மாநாட்டு மண்டப கீழ்த் தளத்தில் நடைபெறும் தேர்வில் கலந்துகொள்ளுமாறும் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (ற-10)

## மரண அறிவித்தல்

### நாகன் தம்பிஜயா



பிறப்பு 1943 ★ 08 ★ 24

இறப்பு 2015 ★ 07 ★ 19

யாழ். செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பலாலி வீதி 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் தம்பிஜயா 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன்-சின்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவராசா-அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சரோஜினியின் அன்புக் கணவரும் உதயலக்ஸ்மன்(கனடா), உதயசீலன்(கனடா), உதயராஜ்(ஜேர்மனி), பிறேமலதா, உதயறூபன்(லண்டன்), உதயகீதன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லையா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவானந்தராசா (லண்டன்), சிவதாஸ்(கனடா) காலஞ்சென்றவர்களான பத்மாவதி, கருணதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதாயினி, லதா, வலேரி, நீலலோஜினி, பிரியதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜந், கிருஷியா, மார்ஷியோ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு : சரோஜினி (மனைவி)
021 222 9001

தகவல் :-
குடும்பத்தினர்.

(63351)

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச கலாசாரப் பேரவையின் உறுப்பினர் ந.பரமேஸ்வரனின் அன்புத் தந்தை


**மார்க்கண்டு நவரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்

பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், வலி தெற்கு,
உடுவில்.

(63346)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.09.1930

மறைவு
15.08.2013

திதி: பூர்வபக்க அட்டமி(25.07.2015)


அமரர் **சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம்** (ஆட்டம்மான்)

அன்புள்ள கணவராயிருந்தீர் பாசமுள்ள தந்தையானீர்
இன்னல் பல வந்தும் இன்முகம் காட்டிடுவீர்
மண்விட்டு நீங்கள் மறைந்து விண்நோக்கி சென்றாலும்
என் நெஞ்சம் விட்டு நீங்காமல் என்றும் நிறைந்திடுவீர்

நீங்காத நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"லிங்க பவனம்",
பன்னாகம், சுழிபுரம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி கலையமுதா நரேந்திரன்** அவர்களின் பாசமிகு தந்தை

**வைரமுத்து கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.


(63345)

## தவறி விட்டது

நாகராசா கந்தசாமி என்பவரது தேசிய அடையாள அட்டை (531432916V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கே.கே.எஸ் வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - பிரகாஸ் ரான்ஸ்போட்
457, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2145, 077 699 3592

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் நவரத்தினம் சந்திரலிங்கம்**
(நாகதம்பிரான் மில் உரிமையாளர்)

தோற்றம்
12.05.1963

மறைவு
25.06.2015

பார்தனிலே எம்மைப் பெற்று சிறப்புடனே வாழ வைத்து
பார்த்து நின்ற எம் தந்தை மறைந்து நீங்கள் சென்ற தென்ன
பெயர் பெற்று வாழ்வதற்குக் கூறிவைத்த அறிவுரைகள்
பாரினில் நாம் வாழும் வரை எம்மை விட்டு நீங்காது.......

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும், கண்ணீர் அஞ்சலி.மலர் வளையம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரினது அந்தியேட்டி நிகழ்வு இன்று (25.07.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரினது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்.மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"நாகதம்பிரான் மில்"
கந்தரோடை, சுன்னாகம்.

(63338) (45.3.6)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திருமதி **இந்திராணி இராசரத்தினம்** (இணுவில் கிழக்கு)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி இராசரத்தினம் 22.07.2015 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - மனோன்மணி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் விஜிதரன் (லண்டன்), வசந்தரூபன் (லண்டன்), ஞானச்செல்வன் (இணுவில்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சத்தியபாமா, லோகேந்திரன் சிவலோகநாதன், வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஜிதா, சுஜாதா, விதாசுஜி ஆகியோரின் மாமியாரும் கஜானன், கபீஷன், கரீஷன், சங்கீர்த்தனா, சங்கீர்த்தனன், சஞ்சீர்த், ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்.

பிள்ளையார் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

021 321 3412
(செல்வா)

## பசுமை நிறைந்த பதினைந்தாவது ஆண்டு நிறைவு



அமரர்

**கிருபைரட்ணம்ஜெயசீலன்**

(முன்னாள் கிராம அலுவலர் துன்னாலை கிழக்கு (J/371)

அகம் மகிழ
31.07.1945

அகம் நெகிழ
25.07.2000

அன்பு செய்து அரவணைத்து
கண்மணி போல எமைக்காத்து
கல்வி தந்து கலைகள் பல சொல்லி
கடின உழைப்பிற்கு வழியும் சொல்லி
வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே!
ஆண்டுகள் பதினைந்து தாண்டினும்
உமது அன்பு என்றென்றும் ஊற்றெடுத்தபடி தான்!
தங்களின் ஆன்மா ஆண்டவர் பாதத்தில் சரணடைந்து
பேரின்பப் பெருவாழ்வு வாழ இறைஞ்சும்

ஜெ.சா.ஜனேஸ்குமார்
தேவாலய வீதி,
துன்னாலை மேற்கு, துன்னாலை.

குடும்பம்.
பேரப்பிள்ளை
ஜ.ரம்சிகா

# பத்திரிகை முறைப்பாட்டுக் குழுவுக்கு கடந்த ஆண்டில் 291 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 25

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு கடந்த ஆண்டு 291 முறைப்பாடுகளை பதிவு செய்திருக்கின்றது. அத்துடன், ஒழுக்க நெறிக் கோவை அடிப்படையிலான அறிக்கையிடல் என்ற தலைப்பில் சர்வதேச ஊடக மாநாடொன்றையும் நடத்தியது. பத்திரிகைத்துறையினருக்கான சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவையையும் மீளாய்வு செய்ய முடிந்தது என்று ஆணைக் குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட் கூறினார்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு அறிக்கையை சமர்ப்பிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு ரொக்வூட் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:–

இலங்கையில் பிரசுரமாகின்ற பத்திரிகைகளில் சிங்களமொழிமூலமான பத்திரிகைகளின் விகிதம் 39 ஆகும். எவ்வாறாயினும் பத்திரிகைத்துறையில் இருந்து இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு கிடைத்துள்ளது. இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு வெளியிலிருந்து 323 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. பத்திரிகைப் பிரசுரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பத்திரிகைகளுக்கு நேரடியாக முறைப்பாடு செய்தபோது இந்தளவு திருத்தங்கள் அல்லது மறுப்புகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் பத்திரிகை ஆசிரியர்களின் கூட்டுறவை வெளிப்படுத்துவதாய் அமைகின்றது.

ஆனாலும் கடந்த 2014ஆம் ஆண்டின் அறிக்கை யின்படி நான்கு ஆங்கிலப் பத்திரிகைகள் இந்த ஆணைக் குழுவால் கண்காணிக்கப்படுகின்ற சுயகட்டுப் பாட்டு ஒழுக்கக்கோவை பொறிமுறையை ஆதரிக்கவில்லை என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இந்த ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக் குழு அதன் தலைவர் நிஹால் செனவிரத்னவின் தலைமையில் இரண்டு மாதங்களுக்கொரு முறை சந்தித்து கலந்துரையாடுகின்றது. ஆணைக்குழு இந்நாட்டின் ஊடகத்துறையின் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பல முற்னேற்றமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றது. குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஊடக அறிவை மேம்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியலான கட்டுரைப் போட்டி, ஒழுக்கநெறி அடிப்படையில் அறிக்கையிடல் என்ற தலைப்பிலான பாடசாலை மாணவர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்குமான தேசிய அடிப்படையி லான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி செயலமர்வுகள் என்பன இத்தகைய நடவடிக்கைகளில் சிலவாகும்.

அத்துடன், அரச அதிகாரிகளுக்கு ஊடக அறிவை வழங்கி ஊடகங்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலான சந்திப்புகள் கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறை, அநுராதபுரம், காலி உட்பட பல இடங்களில் நடத்தப்பட்டன.

## அரசியல் கைதிக

ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் குடும்பங்களுக்கு, மாவீரர்களின் குடும்பங்களுக்கு, தமிழ் அரசியல் கைதிகளினுடைய குடும்பங்களுக்குமான வாழ்வாதார உதவி செயற்றிட்டத்தில் எமக்கு கிடைக்கப்பட்ட விண்ணப் பத்தின் அடிப்படையில் முதற்கட்ட மாக தமிழ் அரசியல் கைதிகளினுடைய 324 குடும்பங்களுக்கான முதற்கட்ட வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ் அரசியல் கைதிகளினுடைய ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட உள்ளது.– என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது மாகாணத்தில் மட்டுமல்லாது ஏனைய மாகாணத்திலும் தமிழ் அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள். அவர்களும் இதனுள் உள்ளவாங்கப்பட உள்ளனர். அவர்களும் எதிர்வரும் 10 நாள்களுக்கும் தங்களது விண்ணப்பப் படிவங்களை எமது அமைச்சுக்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் அவர்களுக்கான உதவிகளும் வழங்கப்படும்.

இதற்கு அப்பால் வருகின்ற மாதம் நடுப்பகுதியில் மாவீரர்களினுடைய குடும்பங்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கான வேலைத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட உள்ளன. எல்லாவற்றுக்குமாக 47 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிதி போதாதுள்ளது. எனினும் புலம்பெயர் நாடுகளில் உள்ள உறவுகள், தூதரகங்கள், தொண்டு நிறுவனங்களின் உதவிகளை பெற்று என்னை நம்பி விண்ணப்பித்த எமது மக்களுக்கு இந்த உதவித்திட்டங்களை கொண்டு செல்வேன்.

இதற்கப்பால் எமது தமிழ் அரசியல் கைதிகள் நிரந்தரமாக வெளியில் வர வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். அவ்வாறு அவர்கள் வெளியில் வரவேண்டும் என்று நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக காத்திருப்பது காலத்தை வீணாக போக்கி விடும். இதற்கு ஒரு வழி ஜனாதிபதியினுடைய பொது மன்னிப்பே. எனவே வருகின்ற தேர்தலின் பின்னர் எமது 5 மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகளினுடைய குடும்பங்கள், பிள்ளைகள், உறவினர்கள் என அனைவரும் ஒன்று சேர்ந்து ஜனாதிபதியைச் சந்தித்து கைதிகளை விடுவிக்குமாறு கோரிக்கையை விடுக்க உள்ளோம்– என்றார். (ற–21)

## பதவி துறக்கிறார்

அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு எடுத்த தீர்மானத்துக்கு அமையவே, அமைச்சுப் பதவியைத் தாம் பொறுப்பேற்றதாகவும், தற்போது ஏற்பட்டுள்ள அசௌகரிய நிலையை நிவர்த்திசெய்ய மற்றும் அமைச்சுப் பதவியைத் துறப்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக கட்சியின் மத்திய குழுவைக் கூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், அது முடியாமல்போனதால் இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கௌரவத்துடன் அரசியல் செய்பவர்கள் இந்த அரசின் அமைச்சுப் பதவிகளில் இனியும் இருக்கமாட்டார்கள். எனவே, ஏனையோரும் தமது அமைச்சுப் பதவிகளைத் துறப்பார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு விடுத்த அடுத்த நாளே, உயர்கல்வி மற்றும் விஞ்ஞான ஆய்வு பிரதியமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சர் எரிக் வீரவர்தன, கிராமிய பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் லசந்த அழகிய வண்ண ஆகியோர் தமது பிரதியமைச்சுப் பதவிகளில் இருந்து விலகியிருந்தனர். (ற–சி–10)

## வாக்குகளை

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்துத் தமிழ் மக்களும் தமது வாக்குகளை 'வீடு' சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தவறாது அளிக்க வேண்டும். அத்துடன் தாம் விரும்பும் மூன்று வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்களுக்குக் கீழ் புள்ளடி இடவும் வேண்டும். இது தமிழர் ஒவ்வொருவருடைய வரலாற்றுக் கடமையாகும்.– என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம் நேற்று திருகோணமலை சிவன் கோயிலடி மைதானத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் தமது வாக்குகளை ஆயுதமாக்கவேண்டும். அப்போதுதான் எமது இலட்சியத்தை விரைவில் அடைந்துகொள்ள முடியும். அது மட்டுமன்றி அதிக ஆசனங்களுடன் நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியாக மாறமுடியும். இதனூடாக சர்வதேச அரங்கில் நாம் பலமிக்க சக்தியாகத் திகழமுடியும். அத்துடன் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் எமக்கான தீர்வைப் பெறவும் முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று சர்வதேச சமூகம் எமது பக்கம் திரும்பிப் பார்த்துள்ளது. எனவே, கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசா, ரெலோ அமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாணசபை அமைச்சருமான கி.துரைராஜசிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவரும் கிழக்கு மாகாணசபை அமைச்சருமான சி.தண்டாயுதபாணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள், கூட்டமைப்பின் மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற–சி)

## ஜே.ஆரின்

என்றும் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.மு. தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களைக் கவரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டாலும் சமூகநல விடயங்கள், தேசிய பாதுகாப்பு, நீதித்துறை சுதந்திரம், சமாதானம் போன்ற பிரதான விடயங்கள் உள்வாங்கப்படவில்லை – எனச் சுட்டிக்காட்டிய அவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவற்றுக்கான உரிய இடம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று (நேற்றுமுன்தினம்) ஐக்கிய தேசிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தது. 5 கொள்கைகளை நடைமுறைப் படுத்தப்போவதாகவும் கூறப்பட்டிருந்தது. ஆனால், இவர்களது பொய்யான வாக்குறுதிகள் அனைத்தும் தோல்வியிலேயே முற்றுப்பெறும். மக்கள் 17ஆம் திகதி சரியான பாடத்தைப் புகட்டுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:–

ரணில் தரப்பினர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கல்வி தொடர்பில் பேசுகின்றனர். ஆங்கிலக் கல்விக்கும் முன்னுரிமை வழங்குவதாகவும் கூறியுள்ளனர். ஆனால், ஆங்கிலக் கல்வியை ஆரம்பிப்பதற்குத் தடையாக இருந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரே.

ரணில் அரசு, இடைக்கால வரவு– செலவுத் திட்டத்தில் 6 வீதம் கல்விக்கு ஒதுக்குவதாகக் கூறியிருந்த போதிலும் 2.5 வீதத்தையாவது ஒதுக்கத் தவறியிருந்தது. பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்கும் புலமைப் பரிசில் தொகையை 5 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவ தாகக் கூறியும் அதனைச் செய்ய வில்லை. ஐ.தே.முவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொருளாதாரக் கொள்கைகள், உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஒடுக்கும் வகையில் அமைந்துள்ளன. நாட்டின் செல்வம் மேற்குலக நாடுகளுக்குத் தாரைவார்க்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அரச ஊழியர்களை அதிகளவில் இணைத்துக் கொண்டோம். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் தனியார் மயப்படுத்தப்பட்டிருந்த நிறுவனங்களை அரசுடைமையாக்கினோம். பெருந்தெருக்கள், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினோம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 6 மாதகாலத்தில் ஒரு கழிவறையைக் கூட நிர்மாணிக்க வில்லை. ஊடக சுதந்திரம் எனக் கூறிய அக்கட்சி, சில அரச, தனியார் ஊடகங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது.

மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகள் அனைத்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைப்படியே இடம்பெற்றுள்ளன. கோப் (நாடாளுமன்றக் கணக்குக் குழு) அறிக்கை வெளிவந்த பின்னர் அனைத்தும் வெளிப்படுத்தப்படும்.

மத்திய வங்கியின் ஆளுநரைப் பதவி விலக்கும்படி ரணிலிடம் கூறியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். அவரால் மத்திய வங்கியின் ஆளுநரை விலக்கமுடியாதிருந்தது. காரணம், ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரம் அங்கு ஓங்கியிருக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணியால் நேற்று (நேற்றுமுன்தினம்) வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனமானது மக்களுக்கு இனிப்பாகத் தெரிந்தாலும் எதிர்காலத்தில் பெரிய சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும்.– என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, முன்னாள் பிரதி அமைச்சர் ரஜீவ விஜேசிங்க, மேல் மாகாண சபை உறுப்பினர் சமன் மலி சகலசூரிய ஆகியோரும் கலந்துகொண்டனர். (ற–சி)

## இலங்கையின்

குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசியக் கொடியின் 75 சதவீதம் சிங்கள சமூகத்தையே பிரதிபலிக்கிறது. வாளேந்திய சிங்கமும், நான்கு வெள்ளரசு இலைகளும், தேசியக்கொடியின் பெரும் பகுதியில் இடம்பிடித்துள்ளன. ஏனைய சமூகங்களுக்கு சரியான இடமளிக்காத இந்த தேசியக்கொடி தீயிட்டு எரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகியங்கனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான வட்டரகே விஜித தேரர், பொதுபல சேனாவுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ஜாதிக பல சேனாவின் அமைப்பாளருமாவார். பொதுபல சேனாவுக்கு எதிரான தீவிர போராட்டங்களில் ஈடுபட்ட இவர், கடந்த வருடம் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டிருந்தார். (ற–5)

## ராஜபக்ஷவினர்

என என்றும் தெரிவித்துள்ளார் அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் இதுவரையில் 7 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் 52 முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. இவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். மோசடிகாரர்களுக்கு நல்லாட்சிக்கான அரசில் இடமளிக்கப்பட மாட்டாது.– என்றார். (ற)

## தேர்தல் விதிமீறல்

முறைப்பாடுகள் குறித்தும் பொலிஸ் தேர்தல்கள் பிரிவின் கண்காணிப்பின் கீழ், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, போலியான இலக்கத் தகடுகளுடன் தேர்தல் பரப்புரைச் சுவரொட்டிகளை ஏற்றிச் சென்ற கெப் வாகனமொன்றும் கெப்பற்றிக்கொல்லாவ பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் பயணித்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற–4)

## மைத்திரி

இருந்த துப்பாக்கியில் தோட்டாக்கள் நிரப்பப்பட்டிருந்தன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந் நிகழ்வுக்கு ஜனாதிபதி வருகை தருவதற்கு முன்பாக அவரது பாதுகாப்பு பிரிவினரால் பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த மாணவனிடம் துப்பாக்கியில் தோட்டாக்கள் நிரப்பப்பட்டிருந்தமை அறியப்பட்டுள்ளது.அந்த மாணவருக்கு எவ்வாறு தோட்டாக்கள் நிரம்பிய துப்பாக்கி கிடைத்தது என்பது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற–ரி)

## வாக்குத்

சிங்க, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை போட்டியிட வைத்தார். ரணில் விக்கிரமசிங்க இரண்டு ஜனாதிபதித் தேர்தல்கள், இரண்டு பொதுத் தேர்தல்கள் மற்றும் 24 உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தோல்வியடைந்த தலைவர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சிறுபான்மை அரசு முகமூடி அணிந்து கொண்ட ஆசீர்வாதம். – என்று அவர் தெரிவித்தார். (ற)

## மஹிந்தவின் பரப்புரைக்குப் பணம்: சீன நிறுவனத்திடம் விசாரணை

கொழும்பு, ஜூலை 25

மஹிந்தவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கு சீனத்துறைமுகப் பொறியியல் நிறுவனத்திடம் பணம் பெறப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் தேர்தல் பரப்புரைகளுக்குச் சுமார் 149மில்லியன் ரூபா பணம் அந்த நிறுவனத்தின் ஊடாகப் பெறப்பட்டதாகப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நிறுவனம் இலங்கையில் பல்வேறு கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளில் முக்கிய பங்கை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மஹிந்தவின் தேர்தல் பரப்புரைகளுக்கு எச்.பிரான்ஸிஸ்கோ, ஹேமா மெதிவல மற்றும் பிரியந்த சமரசிங்க ஆகியோர் மூலமாக குறித்த பணம் பெறப்பட்டுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மஹிந்தவின் புகைப்படங்கள் அடங்கிய ரீ சேர்ட்டுகள், கப் வகைகள் உள்ளிட்டவை இந்த பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## ரணிலுடன் விவாதத்துக்கு வர அஞ்சுகிறார் மஹிந்த

### அஸாத் சாலி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விவாதத்துக்கு வருவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஜ அஞ்சுகின்றார் என்று மத்திய மகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இஞ்சிக்கும், சோளத்திற்கும் வித்தியாசம் தெரியாத ஒரு மகா விவசாயிதான் மஹிந்தர். அதேபோன்று ஜனநாயகம் என்ற சொல்லை சிங்களத்தில் உச்சரிக்க தெரியாத சிங்களவர்தான் அவர்.

அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவுடன் விவாதத்திற்கு மஹிந்தரை நாம் பலமுறை அழைத்த போதிலும், அவர் அஞ்சுகின்றார்.

இந்நிலையில், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விவாதமொன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

அதில் ஜனாதிபதி என்ற வகையில் மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொள்கிறார். அத்துடன் மஹிந்த, ரணில், சரத் பொன்சேகா, அநுர குமார திஸாநாயக்க, இரா.சம்பந்தன் உள்ளிட்ட பலருக்கும் இதில் பங்கேற்பதற்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போதாவது மஹிந்த பங்கேற்பாரா என்பதைப் பார்ப்போம். அதிலிருந்து தலைமைத்துவத்தை தெரிவு செய்வதற்காக யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை மக்கள் எட்டலாம் என எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மஹிந்தவுக்கு வேட்பு மனுவோ அல்லது கட்சியின் தேர்தல் குழுத் தலைவர் பதவியோ வழங்கப்படவில்லை. அது மஹிந்தவுக்கு வேண்டப்பட்ட, கடந்த கால அரசின் ஊழல்களுக்கு துணை போனவர்கள் சிலராலேயே வழங்கப்பட்டது.

மஹிந்த ஆட்சிக்கு வந்தால் அவரது நிழலில் தங்களது ஊழல் மோசடிகளை தொடர்ந்து செய்து கொண்டு தங்களை முன்னேற்றிக் கொள்ளலாம் என்ற உள்நோக்கத்திலேயே இவர்கள் செயற்படுகிறார்கள்.

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் மஹிந்த தனது பெயரை வைத்து புகழ் தேடிக்கொண்டிருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ தாமரை தடாகம் மண்டபமானது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட ஒரு திட்டமாகும். ஆனால், அது மஹிந்த காலத்தில் நிறைவடைந்த நிலையில் அதற்கு தனது பெயரை வைத்துக் கொண்டுள்ளார். இவ்வாறே பல்வேறு திட்டங்கள் மஹிந்தவின் பெயரில் காணப்படுகின்றன–என்றார். (த)

## ரணில் விக்கிரமசிங்க பிரதமராக முடியாது

### வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெறவுள்ளதால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக முடியாது என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே முன்னாள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமராக முடியாத ரணில் விக்கிரமசிங்க நாட்டின் எதிர்க்கட்சிப் பதவியில் கூட இருக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ மூலம் இதற்காக நல்ல தையல் கடை ஒன்றில் எதிர்க்கட்சித் தலைவருக்கான உடை ஒன்றைத் தைத்துக் கொள்ளுங்கள் என முன்னாள் அமைச்சர் விமல் வீர வன்ச குறிப்பிட்டார். (த)

## சுதந்திரக் கட்சியில் இருந்து துரத்தவேண்டும் மஹிந்தவை

### கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 24

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவையும் அவரது குடும்பத்தினரையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க மாத்தறை வெலிகமவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின்போதே இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

மஹிந்தவின் அநுராதபுரக் கூட்டத்துக்குச் சென்று திரும்பும்போது கஞ்சாவை ஏற்றி வருகின்றனர். மஹிபால ஹேரத்தின் கஞ்சா போதைப் பொருள் இவ்வாறு கடந்த நாள்களில் மீட்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சம்பவத்துடன் தொடர்புடைய அவர் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதும் தனது வாகனத்தை எவரோ களவாடி விட்டதாகப் பொய்யான முறைப்பாட்டைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால் அந்தக் கட்சி மீண்டும் ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் நிலை ஏற்படும்.

இதனால் மீண்டும் நாட்டில் ஊழல் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள், சூதாட்டம் என்பவை தலை தூக்கச் சந்தர்ப்பம் உண்டாகும்.

மஹிந்த தேர்தலில் வெற்றி பெற்றால் மஹிந்த,கோத்தபாய, பஸில், நாமல் , யோசித்த, சமல், சசீந்திர ஆகியோரின் கைகளுக்குள் சுதந்திரக் கட்சி மீண்டும் சென்று விடும்–என்றார். (த)

## தேசிய பட்டியலிலிருந்து விலகவேண்டும் ரஜீவ

### லிபரல் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை25

ஸ்ரீலங்கா லிபரல் கட்சியின் தேசிய சபை உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஜீவ விஜேசிங்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் இருந்து விலக வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லிபரல் கட்சியின் செயலாளர் கமல் நிசங்க இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

ரஜீவ விஜேசிங்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்

பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் பிரதியமைச்சராக பதவி வகித்தார். அந்தநேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்துவிட்டு வெளியேறினார்.

தற்போது மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க முன்னின்று செயற்படுகிறார். குறுகிய காலத்தில் அவர் பல அரசியல் நிலைப்பாடுகளை எடுத்துள்ளார்.

இந்த நிலையில் இந்த முறை பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி நான்கு மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுகிறது.

எனினும், இதனைக் கணக்கெடுக்காமல் விஜேசிங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் தேசியப் பட்டியலில் இடம்பிடித்துள்ளார். எனவே கட்சிக்கு மாறான கொள்கை இதுவென்பதால் தேசியப் பட்டியலில் இருந்து அவர் விலகிக் கொள்ள வேண்டும் என்று நிசங்க கோரியுள்ளார்.

## கழிவுகள் அகற்றலுக்கு தேசிய செயற்திட்டம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

பல தசாப்தங்களாக தீர்வின்றி சுற்றாடலுக்குப் பெரும் சவாலாக இருந்துவரும் குப்பை மற்றும் கழிவகற்றல் பிரச்சினைகளுக்கு முறையான தேசிய செயற்திட்டம் ஒன்றினூடாக தீர்வைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாளொான்றுக்கு 7 ஆயிரத்து 500 தொன் குப்பைகள் கொட்டப்படுவதுடன் அவற்றில் ஆயிரம் தொன் குப்பைகள் மாத்திரமே முகாமைத்துவம் செய்யப்படுகிறது எனவும், எஞ்சிய 6 ஆயிரத்து 500 தொன் குப்பைகளைத் தொழில்நுட்ப உதவியுடன் முறையாக முகாமைத்துவம் செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாளுக்குநாள் அதிகரித்துவரும் நீர் மற்றும் வாயு முறைகேடுகள் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கும் இத்திட்டத்தினூடாகத் தீர்வு காணப்படவுள்ளது என்றும் மைத்திரி கூறினார்.

சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கழிவுப் பிரச்சினை இன்று மக்களின் சுகாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

முறையானதும் வினைத்திறன் மிக்கதுமான ஒரு செயற்திட்டத்தினூடாக ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒருபோதும் காலம் தாழ்த்த முடியாது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தபோதும் விமர்சனங்களைத் தவிர்க்க முடியாது என்பதோடு, மக்களுக்கு அறிவூட்டி அரசின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எல்லா அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அரச நிறுவனங்களும் தனியார் துறையினரும் ஒன்றிணைந்து ஒரு வேலைத்திட்டமாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். சுற்றாடல் அதிகார சபையினூடாக தற்போது நடைமுறைப்பத்தப்படும் திட்டங்களைப் பலப்படுத்தியும் நடைமுறைச்சாத்தியமான புதிய திட்டங்களினூடாகவும் இச்செயற் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

காட்டு வளங்கள் குறைந்து செல்வது, காடழிப்பு, சூழல் மற்றும் இயற்கை வளங்களை சேதப்படுத்தல், சூழல் முறைகேடுகள் போன்ற இன்னும் இது தொடர்பான பல்வேறு விடயங்கள் முக்கிய சூழல் பிரச்சினைகளாக அடையாளங் காணப்பட்டுள்ளதோடு அப்பிரச்சினைகளுக்காக தீர்வுகளைக் கண்டறிதல் இந்தப் புதிய திட்டத்தினூடாக மேற் கொள்ளப்படவுள்ளது– என்றார். (த–4)

# சென்.அன்ரனிஸ் ரி-20 தொடர் நீக்கிளஸை வீழ்த்தியது கிங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஜூலை 25
தாழ்வுப்பாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ரி-20 தொடரில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் கிங்ஸ்ரார் அணி சென்.நீக்கிளஸ் அணியை 4 இலக்குகளால் வீழ்த்தி வெற்றியைப் பதிவுசெய்தது.
மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.நீக்கிளஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அஜந்தன் 50 ஓட்டங்களையும் யூட்சன் 28 ஓட்டங்களையும், அன்ரனிஸ் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிங்ஸ்ரார் அணி சார்பில் அமலதாஸ், வினோத், ரதன் மூவரும் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர்.
120 பந்துகளில் 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற எட்டக்கூடிய இலக்கினைநோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ்ரார் அணி 19.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து வெற்றியீட்டியது. அதிகபட்சமாக நிறைஞ்சன் 42 ஓட்டங்களையும், கபிலன் 19 ஓட்டங்களையும், ஜெகன் 19ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்.நீக்கிளஸ் அணி சார்பாக பிரவீன் 3 இலக்குகளையும், அஜந்தன் 2 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளனர். (ம)

# கைகலப்பில் முடிந்தது இறுதியாட்டம் நாவாந்துறை சென்.மேரிஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 25
வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் குருநகர் பாடுமீன் அணியை வீழ்த்தி சம்பியனானது நாவாந்துறை சென்.மேரிஸ் அணி.
நேற்று வெள்ளிக்கிழமை பி.ப. 3மணிக்கு வளர்மதி கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
ஆட்டம் முடிவடைந்த அடுத்த நிமிடமே இரு அணியினரதும் ஆதரவாளர்கள் மைதானத்துக்குள் இறங்கி கைகலப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மைதானத்தில் பதட்ட நிலைமை தீவிரமாக உணரப்பட்டது. இறுதியாட்டத்திற்கு விருத்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி டபிள்யு. எ.கே.டி. வன்னியராச்சி மேலதிக பொலிஸாரை மைதானத்திற்கு வரவழைத்து பதட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். மைதானத்தில் ஏற்பட்ட திடீர்க் குழப்பத்தினால் இறுதியாட்டத்துக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் திகதி குறிப்பிடப்படாமல் கைவிடப்பட்டன. (ம-23)

# கயிறிழுத்தல் சம்பியன் தெல்லிப்பழை இளைஞர் கழகம்

வலி.வடக்கு, ஜூலை 25
யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே பிரதேச மட்டத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளன அணி சம்பியனாகியுள்ளது.
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் அணியும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.
மூன்று சுற்றுக்களைக்கொண்ட இந்தப் போட்டியின் முதல் மற்றும் மூன்றாவது சுற்றுக்களைக் கைப்பற்றிய தெல்லிப்பழை அணி 2:1 என்ற சுற்று அடிப்படையில் வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனானது. (ம-86)



# வளர்மதி உதைபந்துத் தொடர் டைமன்ஸுக்கு மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் கடந்த புதன்கிழமை மாலை 4மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெற்றது.
டைமன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் டைமன்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

**சென்.அன்ரனிஸ் வி.க.தொடர்**
தாழ்வுப்பாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடந்தும் ரி-20 தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சித்தி விநாயகர் கல்லூரி அணியை எதிர்த்து கிறின்பீல்ட் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.விக்டோறிஸ் அணியை எதிர்த்து சென். ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.
**விக்னேஸ்வரா வி.க.தொடர்**
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வினஸ் அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரமு பாரதி அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# மாகாணத்தில் சாதித்த மாணவிக்கு கௌரவம்

## கிளி/முக்கொம்பன் பாடசாலை ஏற்பாட்டில்



வடமாகாண பாடசாலைகளுக் கிடையில் நடைபெற்ற மாகாண மட்டத் தடகளத்தொடரில் கிளிநொச்சி முக்கொம்பன் அ.த.க.பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கி பதக்கங்களைக் கைப்பற்றிய வான்மதி குறித்த பாடசாலைச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
21 வயதின் கீழ் பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் கலந்து கொண்டு தங்கப்பதக்கத்தையும் 1500மீற்றர் ஓட்டத்தில் கலந்து கொண்டு வெண் கலப்பதக்கத்தையும் கைப்பற்றிய காரணத்தினாலேயே அவருக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

# பெண்களுக்கான கயிறிழுத்தல் மாவட்டச் சம்பியன் உடுவில்



வலி வடக்கு, ஜூலை 25
யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையே பிரதேச மட்டத்தில் நடைபெற்ற பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் உடுவில் பிரதேச இளைஞர் சம்மேளன அணி மாவட்ட சம்பியனாகியது.
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் அணியும் உடுவில் பிரதேச இளைஞர் அணியும் மோதிக்கொண்டன.
மூன்று சுற்றுக்களைக்கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் இரண்டு சுற்றுக்களையும் கைப்பற்றிய உடுவில் பிரதேச இளைஞர் சம்மேளன அணி யாழ். மாவட்டச் சம்பியனாகியது. (ம-86)


# சமநிலைத் தவிர்ப்பில் யூனியனை வீழ்த்தியது ஞானகலா

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதிக் கொண்டது. ஆட்டநேர முடிவில் இரண்டு அணியினரும் தலா 3கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் ஆட்டத்தின் வெற்றி, தோல்வி முடிவு சமநிலைத் தவிர்ப்பு உதைகளிடம் தஞ்சமடைய வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்திய ஞானகலா அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஐக்கியத்தைப் பந்தாடியது ஹென்றிஸ்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை ஹென்றிஸ் அணியை எதிர்த்து யாழ்.ஐக்கியம் அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை ஹென்றிஸ் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# சங்காவுக்காக தொடரைக் கைப்பற்ற இலங்கை போரிடும் இந்திய வீரர்களுக்கு அனுபவ வீரர் சேவாக் அறிவுரை



இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடரில் இலங்கை அணியின் ஆதிக்கமே அதிகரித்துக் காணப்பட வாய்ப்புக்கள் உள்ளதாக இந்திய அணியின் அதிரடிவீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

குறித்த தொடர் தொடர்பாக சேவாக் தெரிவித்ததாவது இந்திய அணியில் இளம் வீரர்கள் அதிகப்படியாக உள்ளனர். கோஹ்லி தலைமையிலான இந்த அணி முதன்முதலாக ஒரு பலமான டெஸ்ட் அணியை எதிர்த்து முழுமையான தொடரொன்றை விளையாடவுள்ளது. இதனால் இந்தத்தொடர் சுவார்ஸியம் நிறைந்ததாக இருக்கும். ஆனால் தொடரைக் கைப்பற்றப்போகும் அணி எது என்று பார்த்தால் நிச்சயம் இலங்கைக்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகவே தெரிகிறது. இலங்கைக் கிரிக்கெட்டின் ஜாம்பவானான சங்காவுக்கு இந்தத் தொடர் இறுதித்தொடராக அமைந்த காரணத்தினால் தொடரை எப்படியாவது கைப்பற்றி சங்காவை மகிழ்ச்சியுடன் வழியனுப்ப வேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை வீரர்கள் தீவிரமாக ஈடுபடுவார்கள். இதனால் இந்தத்தொடரில் இலங்கை வீரர்களின் போராட்டம் இரட்டிப்பு பலம்மிக்கதாகக் காணப்படும். இவற்றையெல்லாம் சிந்தித்து அதற்கேற்ப வியூகங்களையும் தயார்ப்படுத்தல்களையும் மேற்கொண்டால் மட்டுமே இந்திய அணியால் தொடரைக் கைப்பற்ற முடியும். என்றார். (ம)



## அக்சர் பட்டேல் மீது கவாஸ்கர் அதிருப்தி

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அக்சர் பட்டேலின் பந்துவீச்சு தொடர்பாக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் காரசாரமான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அக்சர் பட்டேல் தொடர்பாக கவாஸ்கர் தெரிவித்ததாவது இந்திய அணி எதிர்பார்க்கும் அடுத்த பெரிய சுழற்பந்துவீச்சாளர் என்று அக்சர் பட்டேலைக் கூறமுடியாது. அவர் பந்தை சும்மா உருட்டுகிறார், அவரிடம் திறமை இல்லை, அவரது பந்துகள் எளிதில் கணித்துவிடக் கூடியதாகவே உள்ளன. ஆடுகளம் உதவி செய்தாலே தவிர அவரால் பந்துகளை திருப்பவே முடியவில்லை. ஒரு மிதவேகப்பந்து வீச்சாளரை விட மெதுவாக வீசுகிறார் அவ்வளவே. அஸ்வின், ஹர்பஜன் சிங், அமித் மிஸ்ரா, கரண் சர்மாவிடம் தான் நாம் அதிகம் எதிர்பார்க்க முடியும். நிச்சயம் அக்சர் படேலை எதிர்பார்க்க முடியாது என்றார்.

18 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள அக்சர் பட்டேல் 23 இலக்குகளை 26.60 என்ற சராசரியின் கீழ் பந்துப்பரிமாற்றத்துக்கு 4.59 என்ற சிக்கன விகிதத்தில் எடுத்துள்ளார். இது கவாஸ்கர் கூறும் அளவுக்கு மோசமான புள்ளி விபரம் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)


## இயான் பெல் சொதப்புகிறார்



இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரின் மூன்றாவது ஆட்டம் இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இங்கிலாந்தின் இயான் பெல், கேரி பலன்ஸ் இருவரையும் வீழ்த்துவது மிக இலகு என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய ஆரம்பவீரரான டேவிட் வோர்ணர்.

மூன்றாவது டெஸ்ட் தொடர்பாக வோர்ணர் தெரிவித்ததாவது தற்போதைய சூழலில் இங்கிலாந்து வீரர்கள் தமது சொந்த மண்ணிலேயே தடுமாற்றமடைய ஆரம்பித்து விட்டார்கள். அதிலும் குறிப்பாக பெல், பலன்ஸ் இருவரினதும் இலக்குகளை எளிதாக வீழ்த்தி விடலாம். இயான் பெல் அனுபவம் வாய்ந்த வீரர். முன்பு நிறைய ஓட்டங்களைக் குவித்துள்ளார். இது அவருக்கு மோசமான காலப்பகுதி. ஆனால் ஒரு ஆட்டத்தில் நன்றாக செயற்பட்டால் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி விடுவார். பெல் அவ்வாறு பழைய நிலைமைக்குத் திரும்பினால் அடுத்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் வெற்றி கேள்விக்குறியாகும். இருப்பினும் எதிர்வரும் சவால்களை தகர்த்தெறிந்து தொடரைக் கைப்பற்ற ஆர்வத்துடன் உள்ளோம் – என்றார். (ம)

## வீனஸ் அதிர்ச்சித் தோல்வி



துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்றில் குறித்த தொடரின் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த வீனஸ் 4–6, 6–7 என்ற நேர்செற்களில் உக்ரைனைச் சேர்ந்த தகுதிநிலை வீராங்கனையான கேத்ரினா பாண்டரெங்கோவிடம் தோல்வியடைந்தார். தோல்வி தொடர்பாக கருத்துத் தெரிவித்த வீனஸ், என்னால் முடிந்த அளவுக்கு சிறப்பாக ஆட முயற்சித்தேன். எப்போதுமே முதல் ஆட்டம் சிறப்பாக அமையாது. ஆனால் என்னை எதிர்த்து விளையாடிய கேத்ரினா, இங்கு தகுதிச்சுற்றில் விளையாடி வந்திருக்கிறார். அதனால் எனக்கு எதிராகவும் சிறப்பாக ஆடி வெற்றி கண்டுள்ளார். இந்தத் தோல்வி வருத்தமளிக்கிறது. கிண்ணம் வெல்வதற்காகவே இங்கு வந்தேன். ஆனால் பாதியிலேயே திரும்புகின்றேன் –என்றார். (ம)



## இந்திய ஹொக்கித் தொடரில் களமிறங்குகிறார் ஜோகோவிக்

ஐ.பி.எல். கிரிக்கெட் பாணியில் ரென்னிஸ், உதைபந்தாட்டம் ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் முறச்சியில் இந்தியா தற்பொழுது தீவிரமாக ஈடுபட்டுவருகிறது. இதன் ஒருகட்டமாக சர்வதேச பிரீமியர் ரென்னிஸ் தொடர் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. சர்வதேச வீரர்களும் பங்கேற்கக்கூடிய இந்தத்தொடரில் நடப்பு ஆண்டில் ஜோகோவிக்கும் பங்கேற்பது உறுதியாகியுள்ளது.

ரென்னிஸின் உயரிய தொடரான விம்பிள்டனின் நடப்புச் சம்பியனும் தரப்படுத்தலில் முதல்தர வீரருமான ஜோகோவிக் சிங்கப்பூர் அணிக்காக விளையாடவுள்ளதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் டோனியின் ஹொக்கி இந்தியா அணியில் ஜோகோவிக் விளையாடவுள்ளார் என்று வெளியான வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டுள்ளது. (ம)

## குரேஷிய ரென்னிஸ் தொடர்


### கோரிச், கோல்ஸ்கிரைபர் அடுத்த சுற்றுக்குள்

குரேஷியாவின் உமாக் நகரில் நடைபெற்று வரும் குரேஷிய ரென்னிஸ் தொடரில் குரேஷியாவின் போர்னா கோரிச், ஜெர்மனியின் கோல்ஸ்கிரைபர் ஆகியோர் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

போர்னா கோரிச் தனது முதல் சுற்றில் 6–3, 6–3 என்ற நேர் செற்களில் ஸ்பெயினின் மார்செல் கிரானோலர்ஸை தோற்கடித்தார். கடும் வெயிலுக்கு மத்தியிலும் அசத்தலாக ஆடிய கோரிச், அடுத்ததாக பிரிட்டனின் அல்ஜாஸ் பெடேனை சந்திக்கிறார்.

பிலிப் கோல்ஸ்கிரைபர் 6–3, 6–2 என்ற நேர் செற்களில் கொலம்பியாவின் சான்டியாகோ கிரால்டோவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ம)

## குட்டி வில்லியர்ஸ் பிறந்தாச்சு



உலகெங்கும் லட்சக்கணக்கான ரசிகர்களைக் கொண்ட தென்னாபிரிக்க அணியின் தலைவரும் அதிரடி வீரருமான வில்லியர்ஸுக்கு நேற்றுமுன்தினம் ஆண்குழந்தை பிறந்துள்ளது.

பங்களாதேஷ் – தென்னாபிரிக்க தொடரிலிருந்து சில தனிப்பட்ட காரணங்களுக்காக விலகினார் வில்லியர்ஸ். வில்லியர்ஸின் விலகலை தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் ஏற்றுக்கொண்டது. ஆனால் தனிப்பட்ட காரணம் என்று வில்லியர்ஸ் தெரிவிக்கவில்லை. இதனால் வில்லியர் ஸின் திடீர் விலகல் புரியாத புதிராக இருந்துவந்தது. இந்த நிலையில் நேற்று அவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளதால் வில்லியர்ஸின் விலகலுக்கான காரணம் கிடைத்ததுடன் சந்தோசத்தின் அதிர்ச்சியில் உள்ளனர் அவரது ரசிகர்கள். (ம)

## மழை மட்டுமே ஆதிக்கம்


### ஆட்டம் சமநிலையில் முடியலாம்

பங்களாதேஷ் – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தின் நான்காம் நாளில் அதிகரித்த மழை காரணமாக ஆடுகளம் சேதமடைந்ததால் ஒருபந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதனால் நான்காம் நாள் முடிவிலும் தென்னாபிரிக்கா மூன்றாம் நாள் முடிவைப்போலவே 61–0 என்ற நிலையில் உள்ளது. (ம)



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மீண்டும் களத்தில் உசைன் போல்ட்



காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த உலகின் அதி வேக வீரர் உசேன் போல்ட் நீண்ட கால இடை வேளையின் பின்னர் மீண்டும் களமிங்கவுள்ளார்.

100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையாளரான இவர் 100 மீற்றரில் 9.58 விநாடியில் கடந்தும், 200 மீற்றரில் 19.19 விநாடியில் கடந்தும் சாதனை படைத்தார். காயத்தால் அவதிப்பட்ட அவர் அதற்காக சிகிச்சை பெற்றார். அதன்பின் தீவிர பயிற்சியில் ஈடுபட்டார். தற்போது காயத்தில் இருந்து மீண்டுள்ள அவர் நீண்ட காலத்துக்கு பிறகு லண்டனில் நேற்று ஆரம்பமான தடகளத்தொடரில் களமிறங்கவுள்ளார்.

தனது மீள்வருகை தொடர்பாக போல்ட் தெரிவித்ததாவது:-


தடகளத்திலிருந்து நான் விலகியிருந்தனே தவிர என்னைவிட்டு எனது திறன் விலகவில்லை. 100 மீற்றர் ஓட்டத்தில் முதல் 40 மீற்றரும் மிகமிக முக்கிமானவை. அவற்றைச் சிறப்பாக எதிர்கொண்டு விட்டால் முடிவு எமக்குச் சாதகமாக அமையும். நிச்சயம் மீண்டும் சாதிப்பேன் – என்றார். (ம)

கூழ் KOOL
சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
முற்பகல் 10.30 தொடக்கம்
100/=
Virounthu @ Yarl Pardy
No.49,51, Amman Road
Nallur, Jaffna
T: P: 021 222 6868, 075 987 5800

பணிநிலை வெற்றிடம்
WALK IN INTERVIEW
யாழ் நகரில் இயங்கும் பிரபல திருமண மண்டபத்திற்கு பின் வரும் பணி நிலைகளுக்கு தகுதியானவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுகிறார்கள்.
* அலுவலக உதவியாளர் (ஆண்/பெண்)
* Executive house keeper
* House keeping Supperviser
* வெயிற்றர் (ஆண்/பெண்)
* கிளீனிங் பணியாளர் (ஆண்/பெண்)
கீழ்வரும் முகவரியில் சனி/ஞாயிறு (25.07-26.07) நேர்முகத்தேர்வு 10.30-3.00 pm வரை நடைபெறும்.
No.132, பலாலி வீதி,
கோண்டாவில்.
(63308)
T.P-021 205 3999

CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் வாய்ப்பு
3 நாட்கள் பயிற்சி நெறி
CCTV, Network Cabling, Smart Home Installation, Copper Cabling & Wireless
~CCTV Camera Installation
~Cloud Configuration
~Mobile&Remote Monitoring
~DDNS Configuration
~Backup & Access Permission
~DVR/NVR &Hard disk Configuration
~IP Camera Installation & Configuration
~Cabling for CCTV Camera
~Structured Network Cabling
~Wireless Router Installation & Configuration
~Smart Home Installation
~Copper Cabling with Practicals
*Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
*Win SYS இனால் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
Hello : 076-7013060
WinSYS NETWORKS
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021-7306000
Second Batch Starts in July 31st
Limited Students Only

## 200 ரூபாவுக்காக கொல்லப்பட்ட முன்னாள் வாள்ச் சண்டைச் சம்பியன்




இந்தியாவைச் சேர்ந்த வாள்ச் சண்டை வீரரும், முன்னாள் சம்பியனுமான ஹாஷ்யர் சிங் ரயிலில் ஏற்பட்ட மோதலின்போது ரெயிலில் இருந்து தள்ளி விடப்பட்டுசாவடைந்துள்ளார்.

இவர் தனது தாய், மனைவி ஆகியோருடன் சில தனிப்பட்ட விடயமாகப் பயணமொன்றை மே[illegible] கொள்ள ரெயிலில் ஏறினார். ஹாஷ்யர் சிங் பொது பெட்டியிலும், தாய், மனைவி பெண்கள் பெட்டியிலும் அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்தனர். அவரது மனைவி தனக்கு உடல் நிலை சரியில்லை என்று தொலைபேசியில் தெரிவித்ததும் உடனே மனைவியை பார்ப்பதற்காக பெண்கள் பெட்டிக்கு சென்றார் ஹாஷ்யர் சிங். இதைப் பார்த்த ரயில்வே பொலிஸார் ஹாஷ்யர் சிங்கிடம் பெ[illegible] கள் பெட்டிக்கு செ[illegible] ரூ.200 (இந்திய மதிப்பில்) அபராதம் செலுத்த வேண்டும் என்று கூறினார். அந்த பணத்தை கட்ட மறுத்ததால் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் படிப்படியாக கைகலப்பாக மாறி ஹாஷியர் சிங் ரயிலில் இருந்து தள்ளிவிடப்பட்டதில் சாவடைந்துள்ளார். (ம)

வாக்காளர்களே!
சரியானமுறையில்
வாக்களிப்பதை அறிந்துகொள்வோம்
உங்கள் தெரிவான கட்சி/சுயேட்சைக் குழு, தெரிவுசெய்த சின்னத்திற்கு நேரே உள்ள பெட்டியில் புள்ளடி இட்டு சரியான வாக்களிப்பை உறுதிப்படுத்துங்கள்.
☒
அவதானம்
* ஒன்றுக்கு மேற்பட்ட சின்னத்திற்கு புள்ளடியிட்டால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.
* நீங்கள் தெரிவுசெய்த சின்னத்தின் கீழ் உள்ள வேட்பாளர்களில் கூடியது மூவருக்கு உங்கள் விருப்பு வாக்கை செலுத்த முடியும்.
* மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர் இலக்கங்கள் தெரிவு செய்யப்பட்டால் விருப்பு வாக்கு நிராகரிக்கப்பட்ட வாக்காகும்.
அனுசரணை:
கரித்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக்
(அ.18137)(45.3.7)

## மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 04 . 1942

இறப்பு 21 . 07 . 2015

### தம்பையா சிங்கராசா

(சிங்கம் - உரிமையாளர் - வினோ மர அரிவுத்தொழிலகம், அரியாலை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிங்கராசா 21.07.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் - வேதநாயகி தம்பதியரின் மருமகனும், குணாளன், வனிதா, குமரன், வினோதா ஆகியோ ரின் அன்புத் தந்தையும், கனுஷ்யா, சிவானந்தி, கமல் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, நாகராசா, அன்னலக்ஷ்மி மற்றும் கணேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசமணி, சின்னத்துரை, காலஞ்சென்றவர்களான அன்னலெட்சுமி, நாகராசா, ஏகாம்பரம் மற்றும் யோகம்மா, கணேசபிள்ளை, காலஞ்சென்ற நேமிநாதன் மற்றும் அம்பாலிகை, விஜயலட்சுமி, லோகநாதன் ஆகியோரின் மைத்துனரும், பிரவீந்த், கிளாரா, சர்மினி, சயானி, சஞ்ஜெய் ஆகியோரின் பேரனும், உதயராணி, தர்மகுலசிங்கம், தவக் குமார், ஜெகரஞ்சிதம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2015) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

தகவல்: குடும்பத்தினர்.
021 320 5370

(63140) (45.3)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 28.11.1980

ஆண்டவன் அடியில் 25.07.2005

### சிவசுப்பிரமணியம் மயூரன்

(யாழ். இந்துக் கல்லூரி – உயிரியல் பிரிவு – 1999)

பத்து மாதங்கள் கருவில் சுமந்து - இரு
பத்தைந்து ஆண்டுகள் கண்ணில் சுமந்து
பத்து ஆண்டுகள் நெஞ்சில் சுமக்கின்றோம் - எம்
சித்தம் நிறைந்தவனே நின் சீதளப் பார்வையினால்
நித்தம் எமைக் குளிர வைத்தவனே
நீள் நிலத்தில் நிதம் நினைவுகளோடு நாம்

இல. 5, அம்மன் வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.